# பட்டிநகர் கண்ணகி ஆலய வரலாறு (ஆய்வு)

(கி.பி 2015 ஆம் ஆண்டு வரை)



கலாபூஷணம் ஆய்வார்வலர்

**நா. நவநாயகமூர்த்தி**

(தொல்லியலாளர், இந்துசமய நூலாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்நூல் வெளிவரக்**

**காரணகர்த்தாக்களாக இருந்தோர்...**

- திரு. க. ராஜசிறி
- திரு. க. ரவிச்சந்திரன்
- திருமதி. வானதி உதயகுமார்
- திருமதி பிரணியா ஷியாம் சுஜிதாஸ்
- திரு. ந. பிரசன்னா
- திரு. க. ஹரன்ராஜ் ஆகியோர்

(முழவராயன் குடியினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிநகர் கண்ணகி

# ஆலய வரலாறு (ஆய்வு)

## (கி.பி 2015 ஆம் ஆண்டு வரை)

கலாபூஷணம் ஆய்வார்வலர்

## நா. நவநாயகமூர்த்தி

(தொல்லியலாளர், இந்துசமய நூலாசிரியர்)

வெளியீடு:

வானதி பவனம்

பனங்காடு, அக்கரைப்பற்று.

இலங்கை

2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானதிவெளியீடு - 10**
**பதிப்புத் தரவுகள்**


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பட்டிநகர் கண்ணகி ஆலய வரலாறு |
| ஆக்கியோன் | : | நா. நவநாயக மூர்த்தி |
| வகை | : | சமயம் |
| மொழி | : | தமிழ் |
| முதற்பதிப்பு | : | 2020 |
| வெளியிட்ட நாள் | : | 02.03.2020 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பிரதிகள் | : | 500 |
| வெளியீடு | : | வானதி பவனம் பனங்காடு- அக்கரைப்பற்று இலங்கை. |
| தொடர்புகளுக்கு | : | தொலைபேசி : +94 772729641 |
| கணணி வடிவமைப்பு | : | ஜனாபா. பழீலா குத்தூஸ் (எப்கே.கொம்) அக்கரைப்பற்று. |
| அச்சுப்பதிவு | : | மல்டி ஒப்செட், அக்கரைப்பற்று |
| அட்டைவடிவமைப்பு | : | ஜனாபா. பழீலா குத்தூஸ் |
| பக்கங்கள் | : | xx + 180 |
| விலை | : | 500/- |

**ISBN : 978-624-96350-0-5**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாண்டியர் கலை மரபைப் பிரதிபலிக்கும்
மூலவராக விளங்கும் அழகிய அம்மன்
திருவுருவம். (முகக்களை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


1. வாழ்த்துரை iii
2. வாழ்த்துச் செய்தி v
3. அணிந்துரை vii
4. கருத்துரை xiii
5. என்னுரை xiv
6. இலங்கையில் கண்ணகி வழிபாடு தோற்றம் 1
7. பட்டிநகர் கண்ணகி தலத்தோற்றம் 10
8. பட்டிநகர் கண்ணகி ஆலயம் தோற்றம் 20
9. ஆலய வளர்ச்சியும் வழிபாடும் (கி.பி 1320 - 1450 வரை) 32
10. கி.பி 1450 - 1600 வரையுள்ள காலம் (கோட்டை சீதவாக்கை மன்னர்காலம்) 43
11. கண்டிமன்னர் காலத்தில் (கி.பி 1600 - 1796) 58
12. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆலயவளர்ச்சியும் இலக்கியமும் (1800 - 1900 வரை) 92
13. பண்டைய பட்டிநகர் ஆலய வரலாற்றில் ஆலய பரிபாலனமும், வழக்காறுகளும் - மரபுகளும் (1900 வரை) 113




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இருபதாம் நூற்றாண்டில் அம்மன் ஆலயம் மலர்வுகளும், மாற்றங்களும் 124

15. பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலய வரலாற்றுத் தடயங்கள் 146

## இணைப்பு

• பட்டிநகர் கண்ணகை அம்மன் காவியம் 157
• பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக்காவியம் 164
• பட்டிநகர் கண்ணகை அம்மன் பொற்புறாவந்த காவியம் 168
• பட்டிநகர் கண்ணகை அம்மன் தோத்திரம் 176
• படங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி பராசக்தி

# வாழ்த்துரை

சுவாமி நித்தியானந்த சரஸ்வதி
ரிஷிகேஸ்
இமயமலை
இந்தியா

கிழக்கிலங்கையின் வரலாற்று முக்கியம் வாய்ந்த அம்மன் ஆலயங்களில் ஒன்றான பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலய வரலாற்று நூலுக்கு வாழ்த்துரை வழங்குவது பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். பட்டிநகர் ஆலய ஆய்வு நூலை எழுதும் ஆய்வாளர் நவநாயக மூர்த்தி அவர்கள் பல ஆய்வு நூல்களையும், பல்வகை வரலாற்று நூல்களையும் எழுதியவர். அவரின் இலக்கியப் பணி சமுதாயத்திற்கு பெரும் சேவையாகும்.

இந்நூல் ஆய்வில் இத்தலத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவான பழந்தமிழ் இலக்கிய வடிவங்களான காவியம் குளிர்த்தி பாடல்களும், பிற்காலத்தில் உருவான தோத்திரப் பாடல் இலக்கியமும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, மட்டக்களப்பு கண்ணகை அம்மன் வழிபாட்டுத் தொன்மங்களான வழக்காறுகள், வழிபாட்டு மரபுகள் பற்றியெல்லாம் குறிப்பிடுவதுடன். காற்சிலம்பு, அம்மானைக்காய், கைச் சிலம்பு, பொற்புறாக்கள் ஆகிய தொல்லியல் சின்னங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியெல்லாம் விபரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயம் கோட்டை, கண்டி மன்னர் காலங்களில் சிங்கள பௌத்த மக்கள் பத்தினி வழிபாடாக இவ்வாலயத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் பற்றி வரலாற்றுச் சான்றுகள், மரபுகள் என்பன குறிப்பிடுகின்றன. இவற்றைத் தெளிவுறுத்தும் வண்ணப் படங்கள் பல இந்நூலில் இடம்பெற்றுள்ளமை இவ்வாய்வின் சிறப்பம்சமாகும்.

ஆய்வாளர் நவநாயக மூர்த்தி அவர்களின் இச்சேவை தொடர்ந்து நடைபெறுவதற்கும், இந்நூல் சிறப்பாக வெளியீடு செய்வதற்கும், எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கங்கைத் தாயின் கரையிலிருந்து ஆசீர்வதித்து வாழ்த்துகின்றேன்.

ஓம்நமசிவாய:

இப்படிக்கு

தங்கள் அன்பன்

*27.05.2020* சுமாமி நித்தியானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිස්ත්‍රික්ලේකම් කාර්යාලය -අම්පාර

மாவட்டச் செயலகம் - அம்பாறை

**DISTRICT SECRETARIAT - AMPARA**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Government Agent | 063 - 2222206 | Addl. Govt. Agent | 063-2223553 | General | 063-2222233<br>063-2222234 | Fax | 063 2222236<br>063-2222130 |

Your No. | My No. | Date 2020.06.01

# வாழ்த்துகிறேன்

கிழக்கிலங்கையின் தென்கோடியில் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பனங்காடு கிராமத்தில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கண்ணகியம்மன் ஆலயத்தின் தல வரலாற்றினை ஓர் அழியா ஆவணமாக பதிவேற்றும் இச்செயல் மிகவும் பாராட்டதலுக்குரியதாகும். "பட்டிநகர் கண்ணகி ஆலய வரலாறு" எனும் தலைப்பில் "ஆய்வார்வலர்" திரு நவநாயகமூர்த்தி அவர்களால் எடுக்கப்பட்ட இம்முயற்சி மிகவும் சிறப்பானதாகும்.

கி.பி 11ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவானதாகக் கூறப்படும் இவ்வாலயம் இன்றுவரை இப்பகுதியில் இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் இப்பிரதேச மக்களுக்கு அருளாட்சி புரிந்து வருகின்றது. இதன் வரலாறு, தொன்மை, இதன் புகழ் போன்றவற்றை அனைத்து மக்களும் அறியும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளராக கடமையாற்றிய காலத்தில் இவ்வாலய செயற்பாடுகளில் இணைந்து செயற்படுவதற்கும் ஒரு வாய்ப்பு கிடைத்தமையானது பெரும் பேறாகவே கருதுகின்றேன். இவ்வாறான ஆவணப் படுத்தல்கள் அடுத்த சந்ததிக்கு ஆலய வரலாறுகளையும், எமது இந்து மக்களின் வழிபாட்டு முறைமைகளையும் கொண்டு செல்லும் ஒரு சீரிய பணியாகவும் பார்க்கின்றேன். சிறப்புடன் இந்நூல் வெளிவர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

வேதநாயகம் ஜெகதீசன்
மேலதிக அரசாங்க அதிபர்,
அம்பாறை.

Admin. /Esta. Branch 063-2222236 063-2222193
Accounts Branch 063-2222131 063-2222037
Engineer 063-2222608

"Satisfied clients through the excellent Public ServiceInAmpara District."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இந்நூலாசிரியர் உலகப் பிரசித்தி பெற்ற ஒரு வரலாற்றாசிரியர் ஆவார். இவர் எழுதிய கண்ணகி அம்மன் பற்றிய நூல்கள் அடிப்படை வரலாற்று ஆதாரங்களைக் கொண்டும், பல்வேறு நூல்களில் வாசித்தறிந்த ஆதாரங்களைக் கொண்டும் அவருக்கேயுரிய எழுத்து நடையில் எழுதியுள்ளார்.

இப்பட்டிநகர் கண்ணகி அம்மனின் ஆலய வரலாற்றை அறிந்து எழுதுவதற்கு அங்கு காணப்பட்ட ஏட்டுச் சுவடிகள், தொல்லியல் சான்றுகள், இலக்கியங்கள் பெரிதும் உதவியுள்ளன. இவர் இந்நூலில் இலங்கையில் கண்ணகி வழிபாடு அனுராதபுர ஆட்சிக் காலத்தில் கஜபாகு மன்னனால் (கி.பி. 171 - 193) அறிமுகப்படுத்தப்பட்டதைத் தெளிவாகக் கூறியுள்ளார். கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு நேர்டியாக மதுரை நகரிலிருந்து மட்டக்களப்புக்கு வந்ததென்பதை விளக்கியுள்ளார்.

பட்டிநகர் கண்ணகி ஆலயத் தோற்றம் பற்றிய குறிப்பிடும் போது ஆசிரியர் பட்டிமேட்டுப் பகுதியில் சிறப்புடன் விளங்கி வந்த நாக வழிபாடே கி.பி. 1286, 87களில் கண்ணகையம்மன் வழிபாடாகத் தோற்றம் பெற்றது என்பது முக்கிய வரலாற்றுப் பதிவாகும். இங்கு காணப்பட்ட சமூக, அரசியல் சூழல் காரணமாக இறக்காமம், கிரிந்திகாமம், வீரமுனை, காரைதீவு ஆகிய இடங்களுக்கும் இவ்வழிபாடு கொண்டு செல்லப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிங்க மன்னன் மாகோனால் மேற்கொள்ளப்பட்ட மத ரீதியினாலான படையெடுப்பால் கி.பி. 1215ல் அரசியலுடன் சமய, சமூக மாற்றங்களும் ஏற்பட்டன. ஜெயபாகு என்ற குளக்கோட்ட மன்னன் இவனுக்கு ஆதரவாகச் செயற்பட்டான். மாகோனின் படையெடுப்பால் இடப்பெயர்வுகள் ஏற்பட்டு மக்கள் பல இடங்களுக்குக் குடிபெயர்ந்தனர். நாகரீக இடங்கள் பொலிவிழந்தன.

'தம்பதிவில்' பகுதியில் அநேக மக்கள் குடியேறினர். அங்கு ஓலைக் குடிசையில் கண்ணகிக்கு கோயில் அமைத்தனார். பின்பு பட்டிமேடு பகுதியில் மழவராயன் குடியினராலேயே 'நாக வழிபாடு' கண்ணகி வழிபாடாகத் தோற்றம் பெற்றது. கி.பி. 1320களில் பட்டிநகர் கண்ணகி ஆலயம் அக்கரைப்பற்று பகுதி மக்களின் நம்பிக்கைக்கும், பக்திக்குமுரியதாகக் காணப்பட்டதுடன் மக்கள் வழிபாட்டில் சிறந்து விளங்கியும் செழித்திருந்தமை குறிப்பிடத்தக்கன.

ஆலய வளர்ச்சியும், வழிபாடும் பற்றிக் குறிப்பிடும் போது ஆசிரியர் கி.பி. 14ம், 15ம் நூற்றாண்டுகளில் தாய்த் தெய்வ வழிபாடாக சிறப்புற்று விளங்கியதைக் கூறுகின்றார். கண்ணகி அம்மன்பால் பல இலக்கியங்கள் இக்காலத்தில் உருவாகின. வட இலங்கைக்கும் மட்டக்களப்பிற்கும் நெருக்கமான உறவுகள் பேணப்பட்டன.

கண்டி மன்னர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1600 - 1790) முதலாம் விமலதர்ம சூரியன் காலம் தொடங்கி ஆங்கிலேயர் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும், கண்டிக்கும் மட்டக்களப்புக்குமிடையில் நெருங்கிய சமூக சமய, அரசியல் தொடர்புகள் காணப்பட்டன. இவற்றிற்கு கண்ணகி வழிபாடும் ஒரு முக்கிய காரணியாகும். கண்டி சிங்கள, நாயக்க மன்னர்கள் பத்தினி வழிபாட்டிற்கு மானியங்கள் வழங்கினர். கண்டிப் பெரகராவில் பத்தினி விழாவே ஆரம்பத்தில் காணப்பட்டது. பிற்காலத்தில் புத்தரின் புனித சின்னங்கள் முக்கியத்துவம் பெற்றன.

மட்டக்களப்பின் வட பகுதியில் நாடார் குடியேற்றங்களின் மூலம் (கி.பி. 1605 - 06) ஏழு கிராமங்களில் கண்ணகி வழிபாடு பரந்திருந்தது. கண்டி மன்னன் இரண்டாம் இராஜசிங்கன் (கி.பி. 1635 - 1689) மட்டக்களப்புடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்தான. என்று சூளவம்சம் கூறும். இவன் பல தடவைகள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளான். ஒல்லாந்தர் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றினாலும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் கண்டி மன்னன் இராஜசிங்கன் அதிகாரத்தின் கீழ் இருந்து வந்தன. ஆயினும் மட்டக்களப்பு வன்னியர்கள் சுதந்திரமுள்ளவர்களாக இருந்து வந்தனர்.

இம்மன்னன் காலத்தில் தம்பிலுவில் பகுதி கண்ணகி அம்மன்பால் மழை வேண்டி கண்ணகை அம்மன் மழைக்காவியம் கண்ணப்பர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்திலும், பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலயத்திலும் கப்புகளாகக் கடமை புரிந்து வந்தவராவார். இவர் தனது காவியத்தில் கண்டி மன்னனையும் புகழ்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் விமலதர்ம சூரியன் காலத்தில் கண்டியில் தலதா மாளிகை கட்டப்பட்டு புனித தந்ததாதுவிற்கு விழா எடுக்க ஆரம்பிக்கப்பட்டது. இவனது மகனான வீரநரேந்திரனும் சிறப்பான ஆட்சி புரிந்தான். இவ்வரசர்கள் காலத்தில் தம்பிலுவில் கண்ணகையம்மன் மேல் பல காவியங்கள் இயற்றப்பட்டன. பல இலக்கியங்கள் தோன்றின. இவற்றிற்கெல்லாம் பல உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.

ஸ்ரீ விஜய ராஜசிங்கன் ஆட்சியில் பல வர்த்தகத் தொடர்புகள் மட்டக்களப்பு ஊடாக கண்டிக்கு நடந்ததாகச் சொல்லப்படுகின்றது. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்தில் (கி.பி. 1747 - 1781) பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயம் சிறப்புடன் விளங்கியிருந்தது. பௌத்த சிங்கள மக்களும் பூஜை, வழிபாடுகளில் கலந்து கொண்டனர். 'கோவில்மேடு' பத்தினி அம்மன் பட்டிநகருக்கு எடுத்து வரப்பட்டதாகவும் இந்நூல் விபரிக்கின்றது. 'பரவணிக் கல்வெட்டு' மூலம் மட்டக்களப்பில் சிங்கள மக்களும், தமிழர்களும் ஒற்றுமையாக வாழ்ந்திருந்ததாக கூறப்படுகின்றது.

கி.பி. 1766ல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்ககனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியத்தின் கீழிருந்த கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தர் வசமாகின. ஒல்லாந்தர் பிரதிநிதிகளாக திரு. அறுமக்குட்டிப் போடி, திரு. கந்தப் போடி என்போர் இருந்தனர்.

இக்காலத்தில் கண்ணகி வழிபாடு ஒல்லாந்தரின் ஆதரவுடன் சிறப்புடன் விளங்கியிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிநகர் ஆலயத்திற்கு 138 ஏக்கர் காணி வழங்கப்பட்டதற்கான ஆவணம் உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் (1800 - 1900) பட்டிநகர் கண்ணகி ஆலயம் ஆங்கிலேயர் ஆதரவையும், நன்மதிப்பையும் பெற்றிருந்ததை ஆதாரங்கள் வலியுறுத்துகின்றன.

இக்கால கட்டத்தில் (கி.பி. 1870, 71களில்) "பட்டிநகர் கண்ணகையம்மன் பொற்புறா காவியம்" இயற்றப்பட்டது. இக்காவியத்தின் மூலம் கண்ணகையம்மனின் சிறப்பு கூறப்படுகின்றது. இப்பிரதேசத்தில் பணியாற்றிய இங்கிலாந்து சமூக சேவகர் கியூநெவில் '(C.C.S) அவர்களும்' பொற்புறா காவியத்தைப் பற்றிக் கூறியுள்ளார். இவற்றை காவியத்தினூடாக நூலாசிரியர் விளக்கியுள்ளார். இக்காலத்தில் (19ம் நூற்) பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலயம் வளர்ச்சி கண்டது.

தனிப்பட்ட குடும்பங்களால் ஆலய பரிபாலனம் இடம்பெற்றது. 'மழவராயன் குடி' மக்கள் சிறப்பாகக் கூறப்பட்டனர். இவர்களே ஆலயச் சொத்துக்களையும் பணம் என்பனவற்றையும் நிர்வகித்தனர். 'மழவராயன் குடியினரின்' தோற்றம், பரம்பல், வளர்ச்சி என்பனவற்றை ஆசிரியர் வரலாற்றாதாரங்களுடன் விளக்கிக் கூறியுள்ளார். அக்கால ஆலய பூசை வழிபாட்டு மரபுகளும் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கி.பி. இருபதாம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த 'சேர். ஜோசப் வெஸ்ட் றிட்ஜ்வே' அவர்கள் சாகாமக் குளத் திட்டத்தை அமைத்தார். இக்கால கட்டத்தில் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட இவ்வாலயம் பிரபலயம் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியருந்தது. 1925ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் அக்கரைப்பற்று பகுதி மக்கள் வருடாந்த சடங்கில் பெருமளவில் கலந்து பக்தியுடன் வழிபட்டு வந்ததையும், ஒற்றுமையாக அன்னதான நிகழ்வுகளையும் நடாத்தி வந்ததையும் நூலாசிரியர் விபரித்துள்ளார்.

பட்டிநகர் கண்ணகி அம்மன் கோயில் வரலாற்று மூலாதாரங் களையும், அதன் தடயங்களையும் சிறப்புற வரலாற்றாசிரியர் எடுத்துரைத்துள்ளார். இணைப்புக்கள் மூலம் பல சிறந்த பட்டிநகர் கண்ணகி அம்மன் இலக்கியங்களையும் தந்துள்ளார்.

இவ்வரலாற்று நூல் பட்டிநகர் கண்ணகி அம்மனின் வரலாறு, மற்றும் சிறப்புக்களைக் கூறுவதோடல்லாமல் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு வரலாற்றையும் மூலாதாரங்களுடன் ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ளது. மேலும் இவர் வரலாற்று நூல்களை படைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன.

**கலாநிதி அனுசூயா சேனாதிராஜா**

**சிரேஸ்ட விரிவுரையாளர்**

**தென் கிழக்கு பல்கலைக் கழகம்**

**ஒலுவில்.**

*02.06.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துரை

"பட்டிநகர், தம்பிலுவில், வீரமுனை காரைநகர்" எனும் கண்ணகி வழக்குரை பாடலின் வாயிலாக மழவராயன் குடியினருக்கு உரித்தான பட்டிநகர் கண்ணகி ஆலயக் குறிப்பை அறிய முடிகின்றது. நாடுகாடுப் பரவணிக் கல்வெட்டில் இவ்வாலயம் பற்றிய தகவல்களைப் பேராசிரியர், சி.பத்மநாதன் அவர்கள் "ஈழத்து இலக்கிய வரலாறு எனும் நூலில் தொகுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரபல்ய அம்மன் ஆலயங்களில் ஒன்றான, இவ்வாலய வரலாற்றை பொற்புறா வந்த காவியம், பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக்காவியம் ஆகிய நூல்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். மழைக்காவியத்தின் பரவை நிகர் மழவராயன் குளமருகில் மேவிவளர் பட்டிநகர் தன்னிலுறை செட்டிமாதாவே" எனும் பாடல்வரியும் பொற்புறா வந்த காவியத்தில் "சீரணியும் மழவராயன் குடியுதித்த வளர் செல்வமென வாழும்" என்னும் வரிகளிலும் மழவராயன் குடிபற்றியும், அம்மனின் சிறப்புப் பற்றியும் பாடப்பட்டுள்ளது.

ஆய்வுநூல் எழுதுவது அரியதோர் செயல்! இந்நூல் வெளிவருவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

நூலாசிரியரின் பதினோராவது இந்நூல் பலரது பாராட்டுக்களைப் பெற்று பல நூறாண்டுகள் வாழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

**திருமதி. ஜெகதீஸ்வரி நாதன்**

*20.01.2020* **(தம்பிலுவில் ஜெகா) - தம்பிலுவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலயம் தொன்மைமிகு வரலாற்றினைக் கொண்டது. இக்கண்ணகி பற்றிச் சிறுவயதிலேயே பிறர்கூறக் கேட்டு வந்துள்ளேன். அக்காலத்திலேயே இவ்வம்மன் மீது எனக்கு இனம் புரியாததோர் பிடிப்பு (பக்தி) துளிர் விட்டிருந்தது. பனங்காடு கிராமத்தில் திருமணம் புரிந்து, வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து வந்ததைத் தொடர்ந்து, 1975ம் ஆண்டு தொடக்கம், இவ்வாலயத்தில் வருடா, வருடம் இடம பெற்றுவந்த வைகாசிப் பௌர்ணமி சடங்கில் கலந்து அம்மனை வழிபட்டுவந்தேன். இன்றுவரை எனது பக்திக்கும், நம்பிக்கைக்கும் உரிய தெய்வங்களிலொன்றாக பட்டிநகர் தேவியும் மிளிர்ந்துவருகின்றார்.

இதேவேளை, 1988ம் ஆண்டில் பட்டிநகர் கண்ணகி அம்மன் பற்றி நூல் ஒன்றை எழுதவேண்டும் என்று எனது உள்ளம் விரும்பியது. இதனை ஆலயத்தினரிடம் குறிப்பிட்டேன். இதனைத் தொடர்ந்து திரு. க.தங்கவேலு அவர்கள் மூலமாக இவ்வாலயத்தில் சேமிக்கப்பட்டிருந்த ஏட்டுச் சுவடிகள் சில எனது பார்வைக்குக் கிடைக்கப்பெற்றன. அக்காலத்தில் ஏடு படிக்கும் ஆற்றலோ மேலும், அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்து அறிந்து கொள்ளும் அனுபவமோ எனக்கு இருக்கவில்லை எனலாம்.

இந்நிலையில், முதன்முதலாக, அவ்வேட்டுச் சுவடிகளிலொன்றைப் பிரித்துப் பார்த்த மாத்திரத்திலேயே அதனைத் தங்குதடையின்றி எளிதில் வாசிக்கவும். அதில் எழுதியிருந்தவற்றை நன்கு புரிந்து கொள்ளவும் என்னால் முடிந்தது. இதனைத் தொடர்ந்து அவ்வேளை (1988ல்) காணக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளை மேலோட்டமாக வாசித்துக் குறிப்புக்கள் எடுத்துக் கொண்டேன். மேலும் திரு. கதங்கவேலு, திரு. க. கார்த்திகேசு, திரு. க.குருநாதப்பிள்ளை ஆகியோர் மூலமாகத் தகவல்கள் பலவற்றையும் பெற்றுக்கொண்டேன்.

இதனைத் தொடர்ந்து பெற்றுக்கொண்ட தகவல்கள், நூல்கள் வாயிலாக கிடைக்கப்பெற்ற வரலாற்று சான்றுகள், மற்றும் தொல்லியல் சான்றுகள் என்பனவற்றின் அடிப்படையில் பட்டிநகர் கண்ணகி அம்மன் வரலாற்று சுருக்கம் என்ற நூலை 1989ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எழுதிமுடித்தேன். ஆயினும் அவ்வேளை, இந்நூலினை அச்சில் வெளியிட என்னால் முடியவில்லை. அம்மனின் திருக்குறிப்பென்றே இதனைக் கருதுகின்றேன். 1990ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் சமகால நிகழ்வுகள் காரணமாக இந்நூலினை வெளியிடும் எனது எண்ணத்தை முற்றாகக் கைவிட நேர்ந்தது.

இந்நிலையில், கடந்த 1999ம் ஆண்டின் முற்பகுதியில், மிகக் குறுகிய காலத்தில் என்னால் எழுதப்பட்ட தம்பிலுவில் கண்ணகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு என்ற நூல் 1999ம் ஆண்டு யூன் மாதம் வெளிவந்தது. இது அம்மனின் பேரருளே என்பதை இந்நூல் இன்றுவரை நிலை நிறுத்தி வருகின்றது. இதேவேளை பட்டிநகர் கண்ணகி பற்றி விரிவான நூலொன்றை எழுதவேண்டும் என்ற என் உள்ளுணர்வும் மேலோங்கி வந்தது. இதுகாலவரை பட்டிநகர் கண்ணகி பற்றி முழுமையான கட்டுரையோ அன்றி நூல்களோ வெளிவரவில்லை. இக்குறையினை பட்டிநகர் கண்ணகி ஆலய வரலாறு என்ற இந்நூல் ஓரளவு நிறைவு செய்யும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இலக்கியத் தொல்லியல் சான்றுகள், எனது தேடல்கள் வாயிலாகப் பெற்றுக் கொண்ட தகவல்கள், காணக்கிடைத்த தொல்பொருட்கள் மற்றும் தொல்லியல் சின்னங்கள் ஆகியனவற்றை ஆதாரங்களாகக் கொண்டு எழுதி வெளிவரும் இந்நூல், தேசியரீதியில் எமது எதிர்காலச் சந்ததியினருக்குக் காத்திரமான சிறந்த பயனளிக்கும். இதேவேளை ஒரு குடும்பம் ஒரு கிராமம், ஒரு பிரதேசம் என்ற வரையறைக்குள் குறுகிய நோக்கில் இந்நூல் உருவாக்கப்படவில்லை. வரலாற்றுத் தொன்மை மிக்க இவ்வாலயம் பற்றிய வரலாற்றுண்மைகள் வெளிவரவேண்டும் என்ற தெளிவான சிந்தனையுடனேயே இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. குறிப்பாக ஆலயவரலாறு என்பதற்கப்பால் ஆய்வு நோக்கில் ஒரு ஆய்வு நூலாகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், அக்கரைப்பற்று பகுதியில், குறிப்பாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவில் இன்று வாழ்ந்து வரும், தமிழர்களின் மரபுவழிவாழ்விடங்கள், வழிபாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியம், வழக்காறுகள், மேலும் இங்கு நிலவி வந்த செம்மைமிகு தமிழ் இலக்கியப் பாரம்பரியம், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இப்பிரதேசத்தை உள்ளடக்கியிருந்த பண்டைய மட்டக்களப்பு தேசத்தின் வரலாறு ஆகியன இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலமாக மறைந்து போன மறைக்கப்பட்ட வரலாற்றுண்மைகள் பல வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கதெனலாம்.

ஆதிகாலத்தில், கப்புகன் என்ற தனிநபரால் நம்பிக்கையின் பேரில் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாலயம், இவர் சார்ந்த குடும்பத்தினரால் மட்டும் வழிபடப்பட்டு, நாளடைவில் அருகாமையில் வாழ்ந்திருந்த கிராம மக்களின் நம்பிக்கையைப் பெற்றுப் படிப்படியாக, இவ்வழிபாட்டிடம் பிரபல்யம் பெற்றதைத் தொடர்ந்து, அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் இவ்வாலய பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டதையும், பிற்காலத்தில், இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாலய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை நல்கிவந்ததையும் விபரமாகக் குறிப்பிட்டுள்ளேன்.

இதேவேளை, இவ்வாலயத் தோற்றம் மற்றும் ஆலய வளர்ச்சி என்பனவற்றில், மிக நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த சாகாமம் கண்ணகி அம்மன் ஆலயம் பற்றியும் இதன் தொடர்ச்சியான தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயம் பற்றியும் இந்நூலில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் வாயிலாக அக்கரைப்பற்று பகுதி மக்களுக்கும், தம்பிலுவில் திருக்கோவில் பிரதேச மக்களுக்குமிடையே பண்டுதொட்டு நிலவிவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகசமய, கலாசார உறவுகள் புலப்படும், மேலும் இவ்வாலயத்துடன் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்த வீரமுனை காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயங்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளும் இந்நூலில் அடங்கியுள்ளன.

இவ்வாலயத்தைத் தோற்றுவித்து பரிபாலித்து வந்த பாண்டிய நாட்டு குடியினரின் வருகை, குடியேற்றம், இத்தலத்தோற்றம், ஆலயத்தோற்றம், பராமரிப்பு, வளர்ச்சி என்பனபற்றியெல்லாம், வரலாற்று சான்றுகளுடன் இந்நூல் குறிப்பிடுகின்றது. உள்ளதை உள்ளபடி குறிப்பிடவேண்டும் என்ற நன்நோக்கிலேயே இவை பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனை உளம் திறந்து குறிப்பிடுகின்றேன். நிறைவாக 1988, 89 களில் இவ்வாலயம் பற்றிய தகவல்கள் பல வழங்கிய திரு. க. தங்கவேலு, திரு. க.குருநாதப்பிள்ளை ஆகியோரை நன்றியுடன் நினைக்கின்றேன். அத்துடன் இந்நூலினை எழுதிக் கொண்டிருந்த அண்மைக் காலத்தில் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் அத்தியாயம் தொடர்பான தகவல்கள் பல தந்துதவிய திரு. க. சின்னத்தம்பி, திரு. க. கார்த்திகேசு ஆகியோருக்கு என் உளம் நிறைந்த நன்றிகள்.

அன்பே சிவம்!
சத்தியமே பரமசிவம்!
சத்தியமே ஜெயம்!

என்றும் அன்புடன்
நா.நவநாயகமூர்த்தி
(ஆய்வார்வலர்)

02.01.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களுக்கு உளம் கனிந்த நன்றி

- இந்நூலுக்கு அன்புடன் வாழ்த்துரை வழங்கிய ஆன்மீகஞான ஒளி ஸ்ரீமத் நித்தியானந்தா சரஸ்வதி மகராஜ் சுவாமிகள்.
- வாழ்த்துச் செய்தி வழங்கிய கௌரவ வேதநாயகம் ஜெகதீசன் ஐயா (மேலதிக அரசாங்க அதிபர், அம்பாறை) அவர்கள்.
- இந்நூலுக்கு அணிகலனாக அணிந்துரை வழங்கிய இனிய நெஞ்சம் தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் (வரலாற்றுப் பிரிவு) கலாநிதி அனுசுயா சேனாதிராசா அவர்கள்.
- விருப்புடன் கருத்துரை வழங்கிய 'இலக்கிய நெஞ்சம்' தம்பிலுவில் ஜெகா, திருமதி ஜெகதீஸ்வரி நாதன் அவர்கள்.
- இந்நூல் வெளியீட்டில் எனக்கு உறுதுணையாக விருந்து பல் வகையிலும் செயலாற்றி வந்த அன்பு மைத்துனர் திரு. க. ரவிச்சந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்கள்.
- இந்நூல் வெளிவரவேண்டும் என்று கடந்த காலங்களில் ஆலோசனைகள் கூறி ஊக்கமளித்து உளம் குளிரச் செய்துவந்த இதயங்கள், திரு.சி. இன்பசிவம் (இலக்கிய ஆர்வலர்) திரு. எஸ்.திருஞானமூர்த்தி (சிவதொண்டர்) திரு. க.துரையப்பா (சமூக ஆர்வலர்) ஆகியோர்.
- இந்நூலில் இடம்பெற்றுள்ள வண்ணப்படங்கள் பற்றி விபரக் குறிப்புக்கள் எழுத உதவிய திரு. கு. ரவீந்தரன் நாதன் (பூசகர்) அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நூலின் இணைப்பாகவுள்ள வண்ணப்படங்கள் தந்துதவிய (2016) பட்டிநகர் கண்ணகி ஆலய பரிபாலன சபையினர்.

- நூலின் முதலில் அலங்கார தேவியாக காட்சியளிக்கும் அம்மன் முகக்களை வண்ணப்படம் தந்துதவிய செல்வன் நீதிராஜ் ஜெகநாதன், செல்வன் எஸ்.டி. டிசாந்த ஆகியோர்.

- இந்நூலை நேர்த்தியாக வடிவமைத்த (கணனி அச்சுப்பதிவு) திருமதி. பழீலா குத்தூஸ் (Effk.eom 0769292903) அவர்கள்.

- வளமை போன்றும் சீரிய முறையில் இந்நூலை அச்சிட்டுத் தந்த மல்டிஓப்செற் உரிமையாளர் ஜனாப். ALM. இல்யாஸ் (0777651002) மற்றும் ஊழியர்கள்.

- முன் அட்டைப் படம் தந்துதவிய சிவஸ்ரீ தட்சணா மூர்த்தி குருக்கள் சுஜீவன் சர்மா அவர்கள்.

- அழகிய முறையில் இந்நூலின் அட்டை வடிவமைத்து உதவிய திருமதி. பழீலா குத்தூஸ் அவர்கள்.

- எனது ஆக்க இலக்கிய செயற்பாடுகளுக்கு ஆதரவாக இருந்துவரும் அன்பு மனைவி கங்கேஸ்வரி, மக்கள், மருமக்கள் ஆகியோர்.

- எனது எழுத்துப் பணிக்கு பேராதரவு நல்கிவரும் எனது மாபெரும் அன்புக்குரிய வாசகர்களாகிய நீங்கள்!

நன்றி

**நா. நவநாயகமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கண்ணகி வழிபாடு தோற்றம்

இலங்கையில் கண்ணகி வழிபாடு அனுரதபுரி ஆட்சிக் காலத்தில் கஜபாகு என்ற மன்னனால் தோற்றுவிக்கப்பட்டதாகும். சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துப்படி இம்மன்னன் சேரநாட்டில் செங்குட்டுவன் என்னும் மன்னனால் நிர்மாணிக்கப் பட்டுத் திறந்து வைக்கப்பட்ட கண்ணகி கோட்ட விழாவுக்கு வருகை தந்ததாகவும் அவ்விழாவில் கண்ணகி என்ற பத்தினித் தெய்வத்தின் மகிமையை அறிந்து தாங்கொண்ணா மகிழ்ச்சியுற்றான்.

இதனைத் தொடர்ந்து தனது நாடாகிய ஈழத்திலும் இத்தெய்வ வழிபாட்டை பரப்ப எண்ணினான். இதைச் சேரமன்னனிடம் தெரிவிக்க சேரனும் இதற்கிணங்கி கண்ணகி சிலைகள் பலவற்றை கஜபாகு மன்னனுக்குக் கையளித்தான். இவ்வாறு சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. கஜபாகு மன்னன் கண்ணகி கோட்ட விழாவில் கலந்து கொண்டதை சிலப்பதிகாரம் "கடல்சூழ் இலங்கை கஜபாகு வேந்தனும்" என்று கூறுவதிலிருந்து அறியலாம். இவ்விழாவில் பாண்டியன் வெற்றிவேற் செழியனும் கலந்து கொண்டதாக சிலப்பதிகாரம் மேலும் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜபாகு மன்னன் இலங்கையில் ஆட்சி செய்த காலம் கி.பி. 171 - 193 வரையுள்ள காலமாகும். இதனை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. கஜபாகு மன்னன் கண்ணகி சிலைகளைப் பெற்றுக்கொண்டு 'சம்புகோள' என்னும் துறைமுகம் மூலம் ஈழத்தை அடைந்தான். இத்துறை 'ஜம்புகோளபத்தன' என்று மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்துறையானது யாழ்ப்பாணத் தீபகற்பத்திலுள்ள தொண்டைமானாறு என்னும் இடமாகும்.

கஜபாகு மன்னன் தந்தை காலத்தில் சோழமன்னன் கரிகாலன் காவிரி நதியை தடைக் கல்லணை செய்யும் வேலைகளுக்காக இலங்கை மக்களைப் பயன்படுத்தினான். இவர்களை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வர சோழநாடு சென்று பின்பு செங்குட்டுவனையும் சந்தித்துத் திரும்பி வரும்போது பத்தினி சிலைகளைக் கொண்டுவந்தான். இவ்வழிபாட்டினை சிங்கள மக்களிடையே புகுத்தினான் என்று ஆய்வாளர் திரு. பரணவிதான குறிப்பிடுகின்றார். இதற்கு 'ராஜாவளி' என்ற நூலை ஆதாரம் காட்டியுள்ளார்.

இந்த விடயம் 'பூஜாவளி' என்ற சிங்கள நூலில் செங்குட்டுவனும் கரிகாலனும் நண்பர்கள் எனவும் இதன் காரணமாகக் கஜபாகு சோழநாடு பின்பு சேரநாடு சென்று அம்மன்னர்களின் அழைப்பின் பேரில் தங்கியிருந்து வரும்வேளை பத்தினி என்ற கண்ணகி வழிபாட்டைக் கொண்டுவந்ததாகக் கூறப்பட்டுள்ளது. *(HISTORY OF CEYLON. Page 79-90 C.W.Nichnolas*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*S.Paranavithana*) சேரநாட்டிலிருந்து கஜபாகு மன்னன் இலங்கை திரும்பும் போது பத்தினி சிலைகளையும் (படிமம்) பல குடிகளையும் அழைத்து வந்தான். இவர்கள் பன்னிரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொகையினராவர். இதனை ராஜவளிய குறிப்பிடுகின்றது1. இதேவேளை சோழநாட்டை ஆட்சி புரிந்து வந்தவன் பெருநற்கிள்ளி ஆவான். இதனை வரலாறுகள் குறிப்பிடும்.

இவ்வாறு இலங்கை திரும்பிய கஜபாகு கண்ணகி வழிபாட்டை இங்கு தொடங்கி கண்ணகிக்குப் பெருவிழா எடுத்தான். ஈழத்தில் இம்மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது கண்ணகி ஆலயம் யாழ்ப்பாணம் திருவடி நிலைக்கு அருகாமையிலுள்ள அங்கணா கடவையில் அமைந்திருந்தது. இதன் பின்னர் இம்மன்னன் அங்கிருந்து அனுரதபுரம் செல்லும் பாதைகளிலுள்ள பல ஊர்களில் கண்ணகிக்கு ஆலயங்களை நிர்மாணித்ததுடன் அவற்றில் பூசைகள் புரிவதற்காக பூசகர்களையும் நியமித்தான்.

இவ்வாறு கஜபாகு மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட கண்ணகி ஆலயங்களில் பத்தாவது ஆலயம் வற்றாப்பளை கண்ணகி ஆலயமாகும். இறுதியாக இவன் அனுரதபுரியில் ஒரு கண்ணகி ஆலயத்ததை நிர்மாணித்தான். இவ்வாலயம் இசுருமுனிய விகாரைக் கருகிலுள்ள தடாகத்தின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கஜபாகு மன்னன் வருடம் தோறும் ஆடிமாதம் பூரணையில் பத்தினி தெய்வமான கண்ணகிக்கு விழா நடாத்தி வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருவிழா ஊர்வலத்தை சிங்களத்தில் 'பெரஹரா' என்று குறிப்பிட்டு வந்தனர். ஆடி மாதம் இத்திருவிழா நடந்து வந்ததால் எசல (ஆடி) பெரஹரா என இதனை அழைத்து வந்தனர். ஊர்வலமாக வரும் இத்திருவிழாவானது கஜபாகு காலத்தில் பத்தினி தெய்வ விழாவாக விளங்கி வந்தது. இதன் காரணமாக இலங்கை மழைவளம் பொழிந்து விளைச்சல் பெருகிச் செழிப்புள்ள நாடாகியது2. அனுரதபுரியில் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு நிறுவப்பட்ட காலத்தில் இலங்கையின் பிறபகுதிகளில் ஆட்சி புரிந்து வந்த சிற்றரசர்கள் தங்கள் தங்கள் ஆட்சிப் பிரதேசங்களிலும் கண்ணகி வழிபாட்டை தோற்றுவித்தனர் என்ற வரலாற்றுக் குறிப்பு உண்டு.

அனுரதபுரியில் பத்தினி வழிபாடு நிறுவப்பட்ட காலத்தில் இலங்கையில் ஆட்சி புரிந்து வந்த சிற்றரசர்கள் என்போர் தங்கள் தங்கள் ஆட்சிப் பிரதேசங்களிலும் பத்தினி ஆலயங்களைத் தோற்றுவித்திருந்தனர். வட இலங்கையில் அங்கணாக்கடவை, செட்டிபுலம், சங்குவயல், கோலங்கிராய், கொம்படி, வற்றாப்பளை போன்ற ஊர்களிலும் கண்ணகி ஆலயங்கள் தோற்றம் பெற்றிருந்தன. கண்டி, நவகமுவ போன்ற பல இடங்களில் அக்காலத்தில் பத்தினி என்ற கண்ணகி கோயில்கள் எழுப்பபட்டதாகவும் சிங்களத்தில் உருவான சில பத்தினி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

நிக்கவவ குகையில் கண்டெடுக்கப்பட்ட சந்தணக் கட்டையாலான கண்ணகி, கோவலன் சிலைகள் கஜபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனால் கொண்டு வரப்பட்டனவாய் இருக்க வேண்டுமென 'புராதன ஈழம்' என்ற நூலில் (ஆங்கிலம்) ஹென்றி பார்க்கர் கூறியுள்ளார். கொழும்புக்கு அண்மையில் இருக்கும் கந்தானை பகுதியிலே முத்துராசவெளி வயல்வெளிக்கு அணித்தாகக் கடற்கரை கண் அமைந்துள்ள நடுவப்பிட்டியா என்னுமிடத்தில் பழைய பத்தினி ஆலயமொன்று காணப்படுகின்றது. குருணாகலைப் பகுதி, கட்டு கம்பளைப்பத்து, மினுவங்கொடை, நீர்கொழும்பு முதலிய இடங்களில் ஒவ்வொரு பழைய இராசதானியிலும் அனுராதபுரியை விட பத்தினிக்குக் கோயில்கள் உள்ளன. மேலும் தெவிநுவர, குண்டசாலை, ஹங்குறன்கட்டை முதலான இடங்களிலும் கண்ணகிக்கு ஆலயங்கள் இருந்துள்ளன3.

**திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு தோற்றம்**

திருக்கோவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடானது பாண்டிய நாட்டிலிருந்து நேரடியாகவே வந்தடைந்தது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கஜபாகு மன்னன் காலத்தில் இவ்வழிபாடு இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டு பரப்பப்பட்டு வந்த காலத்தில் பாண்டிய நாட்டில் வெற்றிவேற் செழியனும் சோழநாட்டில் பெருநற்கிள்ளியும் கண்ணகி ஆலயங்களை நிர்மாணித்து கண்ணகி வழிபாட்டைப் பரப்பி வந்தனர். இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் கண்ணகிக்குக் கோயில்களும் வழிபாடுகளும் எழலாயின. இக்காலத்தில் பாண்டிய நாட்டில் கண்ணகி வழிபாடு உன்னத நிலையிலிருந்தது. இக்காலத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து கண்ணகி வழிபாடு இப்பிரதேசத்தை வந்து சேர்ந்தது4.

கஜபாகு சேரநாட்டில் நடைபெற்ற கண்ணகி விழாவிற்கு வந்தகாலம் கி.பி. 178 ஆகும். இதன் பின்னர் இவன் பதினைந்து ஆண்டுகள் இலங்கையில் ஆட்சி புரிந்துள்ளான். (கி.பி. 193) இதற்கு ஒரு சில ஆண்டுகள் கடந்த நிலையிலேயே கி.பி. 197, 98களிலேயே கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பின் தென் பகுதியான திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்தில் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு அறிமுகமானது. இதனை ஆய்வுகள் உறுதி செய்கின்றன. இப்பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு ஆரம்பமானது பற்றி வரலாற்றுச் செய்தி ஒன்று இவ்வாறு குறிப்பிடுகின்றது.

கிழக்கிலங்கையில் தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த 'இலங்கைத் துறை' என்னும் துறைமுகத்தினூடாகப் பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து மூன்று அம்மன் விக்கிரகங்கள் கொண்டு வரப்பட்டன. இவற்றில் ஒன்று இலங்கைத் துறையிலும் மற்றது சம்பூரிலும் ஆலயங்கள் அமைத்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டன. மற்ற அம்மன் சிலை மட்டக்களப்பிலுள்ள தம்பிலுவில் கிராமத்தில் கோயில் கொண்டிருப்பதாக அறிய முடிகின்றது5. இவ்வரலாற்றுச் செய்தி பற்றி பேராசிரியர்சி. க. சிற்றம்பலம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு வெருகல் ஆற்றுக்கு கிழக்கேயுள்ள துறைமுகத்தில் மதுரை நகரிலிருந்து செண்பகநாச்சியம்மன், பத்திரகாளியம்மன், கண்ணகி அம்மன் ஆகியோரது சிலைகள் மூன்று கொண்டுவரப்பட்டதாகவும் செண்பக நாச்சியம்மன் சிலையை ஈச்சிலம்பத்தையிலும் பத்திர காளியம்மன் சிலையை சம்பூர் கடற்கரையிலும் கண்ணகி அம்மன் சிலையை மட்டக்களப்பின் தென்பாகத்திலுள்ள ஊரிலும் வைத்து வழிபட்டதாக வரலாற்றுச் செய்தியுண்டு. இச்செய்தியானது தமிழகத்திலிருந்து நேரடியாக இவ் வழிபாடு ஈழத்தின் கிழக்குக் கரையை அடைந்ததென்பதற்கு சான்றாக அமைகின்றது.

மேலும் இலங்கையின் கிழக்குப் பகுதி பண்டைய தமிழகத்துடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பால் இச்சிலைகளும் இவ்வாறு இப்பிரதேசத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம். கஜபாகு காலத்தில் தமிழகத்தின் செல்வாக்கு ஈழத்தின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பரந்திருந்தமைக்கான இலக்கியத், தொல்லியல் சான்றுகளும் உள்ளன6. இவ்வாறு சி.க. சிற்றம்பலம் குறிப்பிடுகின்றார்.

இதனை விளக்கமாகக் குறிப்பிடுமிடத்து, அக்காலத்தில் கிழக்குத் துறைகள் ஊடாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த செட்டிகளால் பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்ட மூன்று அம்மன் சிலைகள் இலங்கைத் துறையை வந்தடைந்தன. இவற்றில் ஒன்று சம்பூரிலும் மற்றது இலங்கைத்துறையிலும் ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்டன. மூன்றா வது விக்கிரகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செண்பகச் செல்வி என்ற கண்ணகி அம்மன் சிலையானது அங்கிருந்து கடல்வழியாக 'துங்ககோளா' என்ற கந்தப்பாணந் துறையை வந்தடைந்து. அங்கிருந்து நகர நாகரிகம் நிலவியிருந்த சாகாமம் நகருக்கு எடுத்து வரப்பட்டுக் கிழக்குப் புறநகர்ப் பகுதியான ஊரக்கை என்னுமிடத்தில் ஆலயம் அமைத்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டது. இதுவே நிறைவான கருத்தாகும்.

வெருகல் இலங்கைத்துறை பாளி நூல்களில் 'லங்கா பட்டுண' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைத்துறை ஒரு வணிக நிலையமாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் செட்டிமார் தொடர்புகள் இங்கு இருந்து வந்துள்ளது. இதே போன்று 'துங்ககோளா' என்ற திருக்கோவில் துறையும் ஒரு வணிக மையமாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் செட்டிமார் தொடர்புகள் இங்கு இருந்து வந்துள்ளது. இத்துறையருகே அமைந்திருந்த சித்திரவேலாயுதர் ஆலயம் இக்காலத்தில் (கி.பி. 2ம் நூற்) சிறப்புடன் விளங்கியிருந்தது7.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையின் கிழக்கு பகுதியிலும் வடக்குப் பகுதியிலும் வாழ்ந்திருந்த தமிழர்களில் கணிசமான தொகையினர் பௌத்தர்களாக இருந்தனர். கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு வரை இலங்கையில் வாழ்ந்திருந்த பௌத்த சிங்களவர், பௌத்த தமிழர், தமிழ்ச் சைவர் என்போரிடையே தமிழ்ப் பெண்ணான கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக போற்றி வழிபடும் மரபு செழித்திருந்தது என்பது வரலாற்றுண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்புகள்:**

1. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் பக்.61 கதிர் தணிகாசலம் - 1992

2. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்.78. நா. நவநாயகமூர்த்தி - 1999

3. பல்துறைஆய்வுகள் - பக்.98 அறிஞர் ம. சற்குணம் - 1999

4. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்.82 நா. நவநாயகமூர்த்தி - 1999

5. திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள் - பக்.131 பண்டிதர் இ. வடிவேல் - 1982

6. ஈழத்து இந்து சமய வரலாறு - பக்.264, 265. பேராசிரியர். சி.க. சிற்றம்பலம் - 1996

7. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்.06 நா. நவநாயகமூர்த்தி - 2014

- மட்டக்களப்பு தமிழகத்தில் முதன் முதலாக கண்ணகி வழிபாடு திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்திலேயே அறிமுகமானது. இதனைத் தொடர்ந்து பாணமை, கூமுனை, நாவுல்ல (நாவலாறு), ஹபிலவத்தை, ஆகிய இடங்களிலும் பத்தினி ஆலயங்கள் தோற்றம் பெற்றன. கி.பி. 2ம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு மட்டக்களப்பில் பரவியிருந்தது. இவ்வாறு ஆய்வாளர் திருமதி தனபாக்கியம் (மட்டக்களப்பு மான்மிய ஆராய்ச்சி. பக்.81) குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிநகர் கண்ணகி தலத் தோற்றம்

இலங்கையின் கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம் பனங்காடு கிராமத்திலிருந்து மேற்கே சுமார் மூன்று மைல்கல் தொலைவில் பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. பண்டைக் காலத்தில் பட்டிமேடு என்ற சிறிய தொரு மக்கள் குடியிருப்பாக நிலவியிருந்த இடத்தில் விளங்கிவரும் இவ்வாலயத்தின் கிழக்கே சற்றுத் தொலைவில் அக்கரைப்பற்று சாகாமம் பிரதான வீதி அமைந்துள்ளது. இவ்வாலயமானது செழிப்பானதொரு இயற்கைச் சூழலில் காணப்படுகின்றது.

குறிப்பாக ஆலயமும் அதனைச் சூழவுள்ள தென்னை வாழை உள்ளிட்ட மரங்களும் இதனைச் சூழவுள்ள வெட்டவெளி புற்றரைகள், இதனைச் சூழவுள்ள செந்நெல் விளைநிலங்கள் ஆகியன மருத நிலத்திற்கேயுரித்தான கண்கொள்ளாக் காட்சியாக மிளிர்கின்றதெனலாம். இவ்வாறு இயற்கைச் செழிப்பு மிக்க சூழலில் கோயில் கொண்டு வீற்றிருந்து அருள் பாலித்து வரும் அன்னை கண்ணகி ஆனவள் நம்பிக்கையுடன் தன்னை நாடி வரும் பக்தர்களை கருணையுடன் அரவணைத்து அருள்பாலித்து வருகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகியாகவும் பத்தினித் தெய்வமாகவும் அன்னை பராசக்தியாகவும் விளங்கி வரும் இவ்வன்னைக்கு ஈடு இணை இல்லை என்பதைக் கடந்த கால இவ்வாலய வரலாறு நன்கு தெளிவுறுத்தும். இத்துணை சிறப்புக்கள் கொண்ட இவ்வாலயத் தலத்தோற்ற வரலாறு தொன்மை வாய்ந்தது மட்டுமன்றிச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது மாகும்.

வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட பட்டிநகர் கண்ணகி ஆலயத் தலத் தோற்றம் பற்றி நோக்குமிடத்து இவ்வழிபாட்டுத் தலமானது கி.பி. பதினொராம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் நாகவழிபாட்டுடன் (நாகம்) தோற்றம் பெற்றதை அறியமுடிகின்றது. அக்காலத்தில் பட்டிநகர் (பட்டிமேடு) பகுதியை வாழ்விடமா கக்கொண்டு சாகாமம் பத்தினி அம்மன் ஆலயத்தில் கட்டாடியாக (கப்புகன்) கடமைபுரிந்து வந்தவரால் பக்தி என்ற நம்பிக்கையின் பேரில் தோற்றுவிக்கப்பட்டு வழிபடப் பட்டு வந்த இடமே பிற்காலத்தில் கண்ணகி அம்மன் வழிபாடாக மலர்ந்து சிறப்புடன் விளங்கியது. இது பற்றி விரிவாக நோக்குவோம்.

**தலத்தோற்றம்**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்ட செண்பகச் செல்வி என்ற கண்ணகி விக்கிரகம் (பத்தினி) சாகாமம் ஊரக்கையில் ஆலயம் அமைத்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டதை அறிவோம். அக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பெருங்கற்கால மக்களின் சந்ததியினரான தமிழரிடையே பௌத்த சமயமும் நிலைத்திருந்தது. இந்தக் காலகட்டத்தில் தமிழகத்திலும் இந்நிலையே நிலவியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு அறிமுகமானது. இக்காலம் தொட்டு கண்ணகி வழிபாடாகவும் பத்தினி வழிபாடாகவும் விளங்கி வந்த இவ்வாலய வளர்ச்சிக்கு இந்து, பௌத்த மதங்களைச் சேர்ந்த தமிழர்கள் மட்டுமன்றி பௌத்த சிங்களவர்களும் ஆதரவு நல்கி வந்தனர். மேலும் இக்காலம் தொடக்கம் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரையும் பத்தினி வழிபாடு என்ற கண்ணகி வழிபாடு இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களிடையே சிறப்புடன் விளங்கியிருந்தது என்பதையும் அறியமுடிகின்றது. பௌத்த சிங்கள அரசர்களும் தமிழ் அரசர்களும் சிற்றரசர்களும் தங்கள் ஆதரவை அளித்து வந்துள்ளனர்1. கி.பி. பத்தாம் பதினோராம் நூற்றாண்டுகளில் சோழரது ஆட்சிக் காலத்தில் சாகாமம் பத்தினி அம்மன் செழிப்புடன் விளங்கியிருந்ததுடன் நம்பிக்கையுள்ள தெய்வமாகவும் இவ்வம்மன் மிளிர்ந்து வந்துள்ளார் இதற்கு சான்றுகள் உள்ளன.

கி.பி. பதினோராம் நூற்றாண்டளவில் இலங்கையில் ஆட்சி புரிந்து வந்த முதலாம் விஜயபாகு (கி.பி. 1056 - 1111) சாகாமத்தில் குடிகொண்டிருந்த (ஊரக்கை) கண்ணகி என்ற பத்தினியம்மன் மீது பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தான். சிங்கள பௌத்தனான இம்மன்னன் ஊரக்கையில் குடிகொண்டிருந்த பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு நன்கொடைகளும் வழங்கியுள்ளான். இதனைக் கிராமிய இலக்கியமொன்று குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி நாட்டுப்பாடலில் முதலாம் விஜயபாகு மன்னன் சோழரது ஆட்சியிலிருந்து இலங்கையை விடுவிப்பதற்காக முயற்சித்துக்கொண்டிருக்கும் வேளையில் எதிரிகளுக்கெதிராக பொலநறுவையில் இரு கத்தித் தாக்குதல்களுக்குத் திட்டமிட்டான். அவன் ஒரு இராணுவப் பிரிவை மேற்கு மலைகளினூடாகவும் அடுத்த பிரிவை கிழக்கு மாகாணத்தின் சாகாமம் (தம்பிலுவில்) ஊடாகவும் அனுப்பிவைத்தான். இவ்வேளையில் கிழக்கு மாகாணத்தினூடாகச் சென்ற இராணுவத் தளபதி சாகாமத்ததைக் கைப்பற்றினான். இதனைத் தொடர்ந்து இவன் சாகாமம் பத்தினி கோயிலைச் சென்றடைந்து இங்கு கோயில் கொண்டிருந்த பத்தினித் தெய்வமான கண்ணகியை வணங்கினான்.

பின்பு கண்ணகியை நோக்கி அரசனுடைய வெற்றிக்கு அருள் புரிந்தால் நிலங்களும் தங்கநகைகளும் ஆலயத்திற்கு நன்கொடையாக அளிப்பார் என்று பத்தினித் தெய்வத்திடம் வாக்குறுதி அளித்தான். இதனைத் தொடர்ந்து விஜயபாகு தனது அரசியல் அதிகாரத்தை நிலைபெறச் செய்தான். இதன் பின்னர் விஜயபாகு மன்னன் இவ்வாலயத்திற்குப் பாதயாத்திரையாக வந்து பத்தினியை வணங்கி காணிக்கைகளையும் தங்க நகைகளையும் தங்க மாம்பழம் ஒன்றையும் நன்கொடையாக வழங்கினான். இவ்வாறு கிராமிய இலக்கியம் குறிப்பிடுகின்றது2.

சூளவம்சம், கந்த உபாத போன்ற நூல்கள் முதலாம் விஜயபாகு தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்துடன் (சங்கமன் கண்டி) கொண்டிருந்த நெருங்கிய உறவுகள் பற்றி விபரிக்கின்றன. முதலாம் விஜயபாகு சோழருக்கெதிரான தனது இறுதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுப்பை மேற்கொண்ட வேளை (கி.பி. 1067) சாகாமத்திலிருந்த சோழரது இராணுவத் தளமும் இதனைத் தொடர்ந்திருந்த முகாம் களும் தாக்கப்பட்டன என வரலாறுகள் குறிப்பிடுகின்றன3. விஜயபாகுவின் மனைவியும் பட்டத்தரசியும் வீரசைவ மரபினளான திரிலோகசுந்தரியின் சைவசமயச் செயற் பாடுகள் தெற்கே சங்கமன்கண்டி வரை நிலைத்திருந்தது. இவள் சங்கமன்கண்டி அரசமாளிகையில் தங்கியிருந்து திருக்கோவில் திருப்பணியை முடித்துக்கொடுத்தாள்4.

சூளவம்சம், கந்த உபாத போன்ற நூல்கள் ஐந்தாம் மகிந்தனின் பேரனான முதலாம் விஜயபாகு சங்குமன்கண்டியில் மாளிகை அமைத்துத் தங்கியிருந்த வேளை சங்குமன்கண்டிக்கு வடக்கேயுள்ள 'வேவெல' என்னும் நெற்காணியை திருக்கோவிலுக்கு வழங்கினான் என்று இவனது அரசியற் பின்னணிகளையும் விபரிக்கின்றன. இதனைத் திருக்கோவில் கல்வெட்டும் உறுதிசெய்கின்றது5. விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1070 - 1111) இவனது அரசியல் ஆதிக்கம் இலங்கைத் தீவு முழுவதிலும் நிலவியிருந்தது. இக் காலத்தில் இன்றைய அம்பாரை, மட்டக்களப்பு மாவட்டங்களை (ஒரு சில பகுதிகள் தவிர்த்து) உள்ளடக்கிய தென்கிழக் கிலங்கையை மட்டக்களப்பு (சம்மாந்துறை) என்னும் நகரிலிருந்து சிற்றரசன் ஆட்சி புரிந்து வந்தான். இவன் விஜயபாகுவின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தான்6.

விஜயபாகு தனது ஆட்சிக் காலத்தில் தமிழகத்துடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருக்க விரும்பினான். இதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தில்கொண்டு தனது உடன் பிறந்த தங்கையான மித்தா என்பவளை பாண்டிய இளவரசன் ஒருவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான். மித்தாவுக்கு பிறந்த குமாரர்களே மானாபரணன், கீர்த்திமேவன், சிறிவல்லபன் ஆகியோர். தந்தை வழியில் இவர்கள் தமிழர்களாவர்7. விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தில் திருக்கோவில் பிரதேசம் (செயலகப்பிரிவு) செழிப்புடன் விளங்கியது.

இந்து பௌத்த உறவுகளும் இன உறவுகளும் நன்னிலையில் இருந்து வந்தன. இக்காலத்தில் தென்னிந்தியக் குடியேற்றங்களும் இப்பிரதேசத்தில் இடம்பெற்று வந்துள்ளன. திருக்கோவில் துறைமுகம் துங்ககோள என்ற பெயருடன் பிரபல்யம் பெற்றிருந்ததுடன் போக்குவரத்து, வர்த்தகம் என்பனவற்றிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது8.

கி.பி. பதினொராம் நூற்றாண்டில் சாகாமம் பத்தினி ஆலயத்திற்கு தானங்கள் வழங்கிய முதலாம் விஜயபாகு இங்கு குடிகொண்டிருந்த அம்மன் பேரில் பெருநம்பிக்கை கொண்டிருந்தான். தனது தங்கையான மித்தா என்பவளை பாண்டிய குமாரனுக்கு மணம் செய்து கொடுத்த வேளை பாண்டிய நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்ட சில தமிழ்க் குடிகள் திருக்கோவில் பிரதேசத்தில் குடியேற்றப்பட்டனர். இவர்களில் சாகாமம் பத்தினி அம்மன் (கண்ணகி) ஆலயத்துக்குப் பூசகராக (கட்டாடி) அழைத்து வரப்பட்ட பாண்டிய நாட்டு மழவராயன் குடியைச் சேர்ந்த குடும்பம் அக்காலத்தில் நகரநாகரிகம் நிலவியிருந்த சாகாம நகரின் வடக்கு புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த பட்டிமேடு என்ற இடத்தில் குடியேற்றப்பட்டனர். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மன்னன் சாகாமம் பத்தினி அம்மன் ஆலயத்தில் கட்டாடியாக பணிபுரியும் உரிமையையும் இவர்களுக்கு கையளித்தான்9.

இதனைத் தொடர்ந்து பட்டிமேடு பகுதியில் வாழ்ந்திருந்த கட்டாடியார் (கப்புகன்) சாகாமம் கண்ணகி ஆலயம் சென்று பணிபுரிந்து வந்தார். அத்துடன் இக்குடியினரின் சந்ததியினர் தம்பட்டை வீரசைவக் குருமார் மக்களுடன் திருமணத் தொடர் புகளையும் கொண்டிருந்தனர். இக்காலத்தில் (கி.பி. பதினொராம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில்) பட்டிமேடு பகுதியை வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்திருந்த கட்டாடியார் குடும்பத்தினர் சாகாமம் கண்ணகி அம்மன் மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்ததுடன் தங்களை வழிகாட்டி வாழவைக்கும் தெய்வமாகவும் எண்ணி வாழ்ந்திருந்தனர்.

இவ்வேளை கட்டாடிக் குடும்பம் குடியிருந்த இல்லத்திற் கருகாமையில் சற்றுத் தொலைவில் நாகம் ஒன்று குடியிருந்ததை கண்ணுற்றனர். இதனைத் தொடர்ந்து இவர்கள் அம்மனின் திருவுருவாகவே நினைத்துப் பக்தியுடன் நாகம் குடியிருந்த இடத்தில் நாக வழிபாடு செய்து வந்தனர். நாட்கள் செல்லச்செல்ல இவர்கள் பல அற்புதங்களைக் கண்டும் அனுபவித்தும் வந்தனர். இதனைத் தொடர்ந்து நாகம் குடியிருந்த இடத்தையும் சூழலையும் துப்பரவு செய்து நாள்தோறும் அந்த இடத்தில் வழிபாடு செய்து வந்தனர். கட்டாடியாரும் பத்தினித் தெய்வமான கண்ணகி அம்மனே நாகவடிவில் நாடி வந்து தங்கள் அருகில் குடியிருந்து தங்களைக் காத்து அருள்பாலித்து வருகின்றார் என்ற பெருநம்பிக்கையுடன் நாகம் குடியிருக்கும் இடத்தில் நாள்தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகவழிபாடும் (பூசை) அதனைத் தொடர்ந்து அம்மன் ஆலயப் பணிகளும் செய்து வரலாயினர். இக்காலத்தில் கட்டாடி குடும்பத்தின் குடும்ப வழிபாட்டு இடமாகவே நாகவழிபாட்டு தலம் விளங்கி வந்தது.

கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் (கி.பி. 1210) பட்டிமேடு பகுதியில் சிறு தொகையினராக வாழ்ந்திருந்த மழவராயன் குடி மக்களிடையே நாகதேவதை (நாகம்) வழிபாடு அதாவது பத்தினித் தெய்வமான கண்ணகியை நாகசக்தியாக வழிபடும் வழக்கம் சிறந்திருந்தது. இக்காலத்தில் (கி.பி. 1210) சாகாமம் கண்ணகி அம்மன் ஆலயம் சிறப்புடன் விளங்கியிருந்தது. திருக்கோவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் சங்கமன்கண்டி தொடக்கம் சாகாமம் வரையுள்ள பிரதேசத்தில் மக்கள் பெருமளவில் வாழ்ந்திருந்ததுடன் நகர நாகரீகமும் நிலவியிருந்தது.

இக்காலத்தில் கிழக்குக் கரையோரப் பகுதிகள் பெரும்பாலும் காடாகவே இருந்தன. தம்பட்டை சிறியதொரு குடியிருப்பாக விருந்தது. திருக்கோவில் துறையருகே சித்திர வேலாயுதர் ஆலயம் அமைந்திருந்தது. ஆலயத்தை சூழ ஆலயத்தில் பணிபுரியும் ஊழியர் குடும்பங்களே குடியிருந்தனர்.

சாகாமத்திலும் புறநகர் பகுதிகளான பொத்தானை, வம்மியடி, பட்டிமேடு மேற்கு, தென்மேற்கு, கண்ணகிபுரம் முதலான இடங்களில் நகர நாகரீகம் நிலவியிருந்ததுடன் சைவத் தமிழர்கள், பௌத்ததமிழர்கள், கணிசமான பௌத்த சிங்களவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போர் வாழ்ந்திருந்தனர். சாகாமத்திலும் இந்நகரை அண்மித்திருந்த புறநகர் பகுதிகளிலும் சிவாலயங்களும் பௌத்த ஆலயங்களும் அருகருகாய் அமைந்திருந்தன. இதனைத் தொல்லியல் சான்றுகள் வரலாற்றாய்வுகள் உறுதிசெய்கின்றன. கி.பி. 1215 வரை இந்நிலை நீடித்திருந்தது.

**குறிப்புகள்:**

1) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்.84, 85 நா. நவநாயகமூர்த்தி - 1999
2) Acentre Of Folk Religion For Sinhalese And Tamils - கட்டுரை - Mr. N. Tharmalingam - The Iland - 08.06.1985
3) History of Ceylon - Page 191. S. Paranavitana and C.W. Nicholas - 1961
   * பண்டைய ஈழம் (பாகம் - II) - பக்.254. வே.க. நடராஜா
4) பூர்வசப்தஸ்தலங்கள் - பக்.9. ரி. கணபதிப்பிள்ளை - 1981
5) மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி - பக்.103, 104 திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம்.
6) சங்கமன்கண்டி மலைப்பிள்ளையார் ஆலயம் தோற்றம் வளர்ச்சி வழிபாடு - கட்டுரை - ஆய்வார்வலர் நா. நவநாயகமூர்த்தி - மகாகும்பாபிஷேக மலர் - 2009
7) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்.67 - நா. நவநாயகமூர்த்தி - 2002
8) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்.65 - நா. நவநாயகமூர்த்தி - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) அக்காலம் தொட்டு இன்று வரை சாகாமம் பத்தினி அம்மன் ஆலயத்தின் தொடர்ச்சியாக நிலவி வரும் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் கப்புகனாக (கட்டாடி) மழவராயன் குடியைச் சேர்ந்த இவர்களின் சந்ததியினரே பணிபுரிந்து வருகின்றனர்.

- கி.பி. பதினோராம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டிலிருந்து திருக்கோவில் துறைமூலம் அழைத்து வரப்பட்ட தமிழ்க் குடிகளான மழவராயன், காடவராஜன் ஆகிய குடிமக்களில் மழவராயன் குடியினர் பட்டிமேடு பகுதியில் குடியேறினர். இவ்வேளை காடவராயன் குடியினர் சாகாமம் கிழக்கு புறநகர் பகுதியில் குடியேற்றப்பட்டனர். இவர்களின் சந்ததியினர் நன்னிலையில் வாழ்ந்திருந்ததுடன் கண்ணகை யம்மன் ஆலயத்துடனும் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தனர். இவர்களின் சந்ததியினர் இன்று திருக்கோவில் பிரதேசத்தில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிநகர் கண்ணகி ஆலயம் தோற்றம்

இவ்வாலயத் தோற்றம் பற்றி வரலாற்றுச் சான்றுகள் மூலமாக நோக்குமிடத்து கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண் டின் தொடக்க காலத்தில் பட்டிமேடு பகுதியில் வாழ்ந்திருந்த மக்களிடையே சிறப்புடன் நிலவி வந்த நாக வழிபாடே கி.பி. 1286 - 87களில் கண்ணகி அம்மன் வழிபாடாகத் தோற்றம் பெற்று பத்தினி என்ற கண்ணகி அம்மன் ஆலயமாகப் பிரபல்யம் பெறத்தொடங்கியது என்பதை அறிய முடிகின்றது. மேலும் இக்காலத்திலேயே இங்கிருந்து இறக்காமம், கிரிந்திகாமம் ஊடாக நாகரீகம் நிலவியிருந்த வீரமுனை, மற்றும் காரைதீவு ஆகிய இடங்களுக்கும் கண்ணகி வழிபாடு சென்றது1. இக்கால கட்ட சமூக சமய அரசியல் சூழல் என்பன இதற்கு காரணிகளாக விருந்தன.

இலங்கையில் கண்ணகி வரலாற்றோடு நாகம் தொடர்பு படுத்தப்படுவது இங்கு அவதானிக்கத்தக்க தொன்றாகும். நாகமங்கலையே கண்ணகியாகப் பிறந்தாள் என்பதோடு நாகமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே அவள் காற்சிலம்பு செய்யப்பட்டது என்றும் கூறுவர். மதுரையை எரித்த கண்ணகி ஐந்து தலை நாக வடிவில் யாழ்ப்பாணத்தை வந்து சேர்ந்தார் என்பது ஐதீகம். இதேபோல் மட்டக்களப்பு மண்முனைப் பகுதியிலும் பண்டாரியாவெளியில் எழுந்தருளியுள்ள நாகத்தின் உடன்பிறப்பாகிய கொம்பி கண்ணகி ஆலய ஸ்தாபகராாகவும் கூறப்படுகின்றார்.

இதேபோன்று மகிழடித்தீவு கண்ணகி அம்மன் கோயில் இக்கொம்பி அம்மையினாலேயே தோற்றுவிக்கப்பட்டது என்பது மரபுவழிச் செய்தியாகும்2. இதேபோன்றே கி.பி. பதினோராம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று இங்கு நிலவி வந்த நாகவழிபாடே இக்காலத்தில் (கி.பி. 1286, 87களில்) இங்கு வாழ்ந்திருந்த மக்களால் கண்ணகி வழிபாடாகத் தோற்றுவிக்கப்பட்டு சிறியதொரு கண்ணகி அம்மன் ஆலயம் உருவாக்கப்பட்டது. இவ்வாலயத் தோற்றத்திற்குக் காரணகர்த்தாவாக இங்கு வாழ்ந்திருந்த மக்களின் முதல்வராகக் கருதப்பட்ட கட்டாடியார் விளங்கினார். இவற்றின் வரலாற்றுப் பின்னணி பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

கி.பி. 1215ல் கலிங்ககுலத்து மாகோன் என்ற தமிழ் மன்னன் இலங்கை மீது மேற்கொண்ட மதரீதியான படையெடுப்பானது இலங்கை அரசியலில் மட்டுமன்றி சமூக சமய ரீதியிலும் பெரும் மாற்றங்களைத் தோற்றுவித்ததெனலாம். தமிழ் மன்னனான மாகன் இப்படையெடுப்பை மேற்கொண்ட காரணம் அக்காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாறை உள்ளிட்ட) வாழ்ந்து வந்த சிங்கள மக்கள் தமிழர்களுடைய சைவாலயங்களைத் தாக்கி வந்ததேயாகும். இதனைப் பொறுக்கமாட்டாத தமிழ்ச்சைவனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகோன் பெரும் படை திரட்டி வந்து சிங்களவர்களுக்கும் பௌத்த மதத்திற்கும் எதிராகச் செயற்பட்டான்3. என அறிய முடிகின்றது.

மாகோன் பொலநறுவையைக் கைப்பற்றி நாட்டின் பல பகுதிகளிலும் கோட்டைகளையும் அரண்களையும் அமைத்து ஆட்சி புரிந்தான். இவனுக்கு உதவியாக ஜயபாகு (குளக்கோட்டன்) என்ற தமிழ்மன்னன் செயற்பட்டான். மேலும் தவறான சமயநெறிகளைக் கொண்டு ஒழுகுகின்ற துட்டன் என்று இவனைக் குறிப்பிடும் சூளவம்சம் தொடர்ந்து தான் பின்பற்றும் தவறான மார்க்கத்தை (சைவம்) பின்பற்றுமாறும் மக்களைப் பணித்தான். விகாரைகளுக்கும் சங்கத்துக்கும் ஒதுக்கப் பட்டிருந்த நிலங்களையும் தமிழர்களுக்கு வழங்கினான் என்றும் (சூளவம்சம்: அத்தி14) கூறும்.

கி.பி. 1215ல் தமிழ் மன்னனான மாகோன் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்பானது திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களது வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக இடப்பெயர்வுகள் சமூக சமய மாற்றங்கள் என்பவற்றுடன் இப்பிரதேசத்தில் செழித்திருந்த கண்ணகி வழிபாட்டிலும் (சாகாமம் கண்ணகி ஆலயம்) பாதிப்பினை ஏற்படுத்தியதெனலாம்.

இப்படையெடுப்பினைத் தொடர்ந்து பண்டைக் காலம் தொடக்கம் நாகரீகம் நிலவி வந்த இடங்கள் பொலிவிழக் கத்தொடங்கின. குறிப்பாக இப்பிரதேசத்தைத் சேர்ந்த சங்கமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி, வில்காமம், கஞ்சிகுடியாறு, றூபஸ், சாகாமம் ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் இந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வெளியேறி வேறிடங்களுக்குச் சென்றனர்.4 இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் மேற்கு, தெற்கு பகுதிகளுக்கப்பால் உள்ள இடங்களை நோக்கிச் சென்றனர். பௌத்தர்களான இவர்களில் பெருமளவினர் தமிழ்ப் பௌத்தர்கள் ஆவர்5.

இதேவேளை நாகரீகம் நிலவியிருந்த இடங்களில் வாழ்ந்திருந்த மக்களில் ஒரு தொகையினர் கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம்பெயரத் தொடங்கினர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழ்ச் சைவர்கள் ஆவர். ஏனையோரான சிறுதொகையினர் இந்து மத தெய்வங்களைப் போற்றி வந்த சிங்கள மக்கள் ஆவர்6. இவ்வாறு இடம்பெயர்ந்து பரசுராமன்குளம், ஆரைப்பற்றைகுடா, கோரைக்களப்பு வடக்கு (சின்னத் தோட்டம்), தாமரைக்குளம் கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் இதற்குப் பிற்பட்ட காலங்களில் இலங்கை மீது பாண்டியர் மேற்கொண்ட படையெடுப்புக்கள் (கி.பி. 1256, 1262, 1284) காரணமாக மேலும் கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம் பெயரலாயினர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் பெருமளவினர் 'தம்பதிவில்' ஏரியைச் சூழவுள்ள பகுதிகளில் குறிப்பாக தம்பதிவில் ஏரியின் தென்கிழக்கு, தெற்கு (பெரிய களப்பின் கிழக்கு கரையோரப் பகுதி) போன்ற பகுதிகளில் குடியேறி வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் கி.பி. 1284 பாண்டியன் குலசேகரனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பானது இலங்கை அரசியலில் பெரும் மாற்றங்களைத் தோற்றுவித் திருந்தது. இதனைத் தொடர்ந்து இலங்கை ஏறக்குறைய இருபது ஆண்டுகள் பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது7. இக்காலத்தில் (கி.பி. 1284 - 1304) மாகோனது படையெடுப்பின் போது தங்களுடன் எடுத்து வந்த சாகாமம் கண்ணகி வழிபாட்டு கூறுகளைத் தம்பதிவில் என்று அக்காலத்தில் பெயர் வழங்கியிருந்த இன்றைய தம்பிலுவில் கிராமத்தில் (கி.பி. 1284ல்) சிறியதொரு ஆலயம் நிர்மாணித்து (ஓலைக்குடிசை) கண்ணகியைப் பிரதிஷ்டை செய்ததுடன் ஏனைய பொருட்களும் இவாலயத்தில் சேர்க்கப்பட்டன8.

பாண்டியர் அரசு செலுத்திய காலத்தில் (கி.பி. 1284 - 1304) மட்டக்களப்பை ஏறாவூர், பளுகாமம் சம்மாந்துறை, அட்டப்பள்ளம் (சிங்காரபுரி) பாணமை ஆகிய இடங்களிலிருந்து வன்னியர் என்ற தமிழ்ச்சிற்றரசர் ஆட்சிபுரிந்து வந்தனர். இக்காலத்தில் பாண்டியரால் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டது. இவ்வாலயத்திலுள்ள யாழிவரிசை, கீர்த்திமுகம், தேவ கோஷ்டம், தாமரைப் பொதிகை போன்ற அம்சங்கள் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்ததென பேராசிரியர் கா. இந்திரபாலா குறிப்பிடுகின்றார்9. இக்காலத்தில் பாண்டிய நாட்டிற்கும் திருக்கோவில் பிரதேசத்திற்கும் இடையில் நேரடித் தொடர்புகள் இருந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பட்டிநகரில் கண்ணகி ஆலயம்**

தமிழ் மன்னனான மாகோன் என்பவனது படையெடுப்பின் காரணமாக சாகாமம் வடக்கு பிரதேசத்தில் தோணிக்கல், பொத்தானை, கிழவியூர்மலை, அளிக்கம்பை, பட்டிநகர், கண்ணகி கிராமம் ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்களில் ஒரு பிரிவினர் மேற்குப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். இவர்களில் பௌத்த தமிழர்களும் அடங்குவர். இதன் பின்னர் பாண்டியன் குலசேகரன் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்பும் (கி.பி. 1284) இதன் பயனாக இலங்கையில் நிலையெற்ற பாண்டியர் ஆட்சியும் (கி.பி. 1284 - 1310) இப்பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளிலிருந்து கிழக்கு பகுதிகளை நோக்கி மக்களை இடம்பெயரவைத்தன.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பிரிவினர் புளியம்பத்தை, சிப்பித்திடல், புட்டம்பையின் கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம்பெயர அடுத்த பிரிவினர் தில்லை ஆற்றைக் கடந்து அக்காலத்தில் காடாகவிருந்த பகுதியை காடுவெட்டி துப்பரவு செய்து குடியிருப்புகளை அமைத்து வாழ்ந்துவந்தனர். இவர்கள் கண்ணகி கிராமம் தொடக்கம் கல்மடு வரையுள்ள பகுதியில் பரவலாக வாழ்ந்து வந்த தமிழ்க்குடியினர் ஆவர். இவர்கள் குடியேறிய இடம் கோணவில் என்ற பெயரைப் பெற்றது. அக்காலத்தில் கோணவில் என்ற பெயருடன் விளங்கி வந்த இடமே இன்று கோளாவில் என்று வழங்கி வருகின்றது.

இவ்வாறு கோணவில் பகுதியில் வாழ்ந்து வந்த தமிழ்மக்களில் சில குடும்பங்கள் வடக்கு நோக்கிச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுவெட்டி துப்பரவு செய்து அந்த இடங்களில் இருப்பிடங்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் குடியேறிய பகுதியில் கருந்தெகிளம் கொடிகள் நிறைந் திருந்ததால் அப்பகுதி கருங்கொடித்தீவு என அழைக்கப் படலாயிற்று10. கி.பி. 1290, 91களில் கருங்கொடித்தீவு, கோணவில் ஆகியன மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்த இடங்களாக விளங்கியதுடன் கோணவில் கிராமத்தில் கணபதி ஆலயம் ஒன்றும் இங்கு வாழ்ந்திருந்த மக்களால் தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை கி.பி. 1284, 85களில் சாகாமம் வட பிரதேசத்தின் சில பகுதிகளிலிருந்து மக்கள் வெளி யேறிய காலத்தில் கவடா, பட்டிமேடு ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் தொடர்ந்தும் இந்த இடங்களிலேயே வாழ்ந்திருந்தனர். இக்காலத்தில் சாகாமம் கண்ணகி ஆலயத்தின் தொடர்ச்சியாக தம்பிலுவில் கண்ணகி ஆலயம் தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து பட்டிநகரில் வாழ்ந்து வந்த பட்டிமேட்டுக்குடி என்ற மழவராயன் குடியினரிடையே அக்காலத்தில் நிலவி வந்த நாகவழிபாட்டுத் தலத்தில் இவர்களின் குடிமுதல்வராக விளங்கிய கட்டாடியாரால் நாகவழிபாட்டின் தொடர்ச்சியாக கண்ணகி ஆலயம் தோற்று விக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கண்ணகி வழிபாடானது கி.பி. 1287, 88களில் இங்கிருந்து இறக்காமம், கிரிந்திகாமம் ஊடாக சம்மாந்துறைப் பிரதேசத்தைச் சென்றடைந்தது. பின்னர் சிங்காபுரி பிரதேசத்திற்கும் (நிந்தவூர்) சென்றடைந்து பரவியிருந்தது. இக்காலத்தில் கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) பிரதேசத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பனங்காடு, கோளாவில், கருங்கொடித்தீவு, மீனோடைக்கட்டு, பாலமுனை) சம்மாந்துறை, சிங்காரபுரி ஆகிய வன்னிப் பிரதேச மக்களுக்குமிடையே நிலவியிருந்த சமூக சமய பண்பாட்டு உறவுகள் மற்றும் தம்பிலுவில், திருக்கோவில், கருங்கொடித்தீவு ஆகிய பிரதேசங்களில் நிலைத்திருந்த சிங்காரபுரி, சம்மாந்துறை, வன்னி இராசாக்களின் அரசியல் செல்வாக்கு என்பன இப்பிரதேசங்களில் சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு விரைவாக பரவக் காரணிகளாயின.

கி.பி. 1300 ஆண்டளவில் பாண்டியரது காலத்தில் சம்மாந்துறையில் (பிரதேசம்) தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்த தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடு உன்னத நிலையை எய்தியிருந்தது. இன்று வீரமுனையில் உள்ள கண்ணகி அம்மன் ஆலயம் இதன் தொடர்ச்சியேயாகும். இதேபோன்று அட்டப்பள்ளம், காளியோடைக்கு (களியோடை) அருகாமையில் அமைந் திருந்த காளியம்மன் ஆலயம், சம்மாந்துறை காளியம்மன் ஆலயம் என்பனவும் இக்காலத்தில் சிறப்புடன் விளங்கி யிருந்தன11. இதனை இலக்கியத் தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன.

இக்காலத்தில் பட்டிநகர், கவடா ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்து வந்து ஏற்கனவே (கி.பி. 1284) சிப்பித்திடல், தெற்கே பெரியகளப்புத் தொடக்கம் வடக்கே தில்லை ஆறு வரை பரந்திருந்த மேட்டுப்பகுதி, புளியம்பத்தை ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்களுடன் ஒன்றிணைந்து வாழத்தொடங்கினர். இக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியம்பற்றைக்கு வடகிழக்கில் கேணியருகே ஒரு பிள்ளையார் (சிவலிங்கம்) அமைந்திருந்தது. இது ஒரு திறந்த வெளிக் கோயிலாக அக்காலத்தில் விளங்கியது.

இக்காலத்தில் (கி.பி. 1300) பாலமுனை, மீனோடைக்கட்டு, ஆகிய இடங்களில் தமிழ்ச் சைவர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்தனர். இவர்கள் கி.பி. 1215ம் ஆண்டு வரை இந்த இடங்களின் மேற்குப் பிரதேசமான முள்ளிக்குளத்து மலைப் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களின் சந்ததியினராவர். கி.பி. 1215ல் மாகோனின் படையெடுப்பைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் வாழ்ந் திருந்த தமிழ்ப்பௌத்தர், சிங்கள பௌத்தர் என்போர் இங்கிருந்து இடம்பெயர்ந்து தென்னிலங்கையை நோக்கிச் செல்ல ஏனையோரான தமிழ்ச் சைவர்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்து இப்பகுதிகளில் (பாலமுனை, மீனோடைக்கட்டு) குடியேறினர். மாகோனது (கி.பி. 1215 - 1256) ஆட்சிக் காலத்தில் பாலமுனைக் கிராமத்தில் தமிழ்க் குடியினரான நாவிதர் என்போர் குடியேற்றப்பட்டதை கல்வெட்டு ஒன்று கூறும்12.

கி.பி. 1320 களில் பட்டிநகர் கண்ணகி ஆலயம் சிறப்புடன் விளங்கியிருந்தது. வடக்கே பாலமுனை தொடக்கம் மீனோடைக்கட்டு, கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு வரை வாழ்ந்திருந்த மக்களின் நம்பிக்கைக்கும் பக்திக்கும் உரியவளாக இவ்வாலயத்தில் குடிகொண்டிருந்த சிலம்பு கூறும் பத்தினித் தெய்வமான கண்ணகி விளங்கியிருந்தார். இக்காலம் தொடக்கம் இவ்வாலய வளர்ச்சியில் (பூசை, வழிபாடு, வருமானம்) இக்கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பங்களிப்பானது மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திரமான வகையில் விளங்கி வந்ததை எவரும் மறுதலிக்க முடியாது.

அக்காலத்தில் இவ்வாலயத்தில் இடம்பெற்றுவந்த பூசை வழிபாடுகளில் பயபக்தியுடன் கலந்து சிறப்பித்து வந்த இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆலய வருமானத்திற்கும் (நேர்த்திக்கடன்) பெரும் பங்களிப்பு நல்கி வந்துள்ளனர். இதனைச் செவிவழிச்செய்திகள் வாயிலாக அறிய முடிகின்றது.

குறிப்புகள்:

1. தென்திசையிலிருந்து கண்ணகி வடக்கு பக்கம் பறந்து வந்தாள் என்று வழங்கி வந்த மரபுக்கதை இதன் பின்னணியில் தோன்றிய தெனலாம்.
2. மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு - பக்.32 - க. மகேஸ்வரலிங்கம் - 1996
3. குளக்கோட்டன் தரிசனம் - பக்52. க. தங்கேஸ்வரி (தொல்லியல் பீ.ஏ) - 1993
   - பண்டைய ஈழ வரலாற்றில் கலிங்கர் என்பது தமிழ்ச் சைவரையே குறிப்பதாகும். கலிங்கர் என்போர் மொழி ரீதியாக அவர்கள் தமிழர்களாகவும் சமயரீதியாக அவர்கள் வீரசைவர்களாகவும் விளங்கினர். (இலங்கை சுருக்கவரலாறு பக்.212. கலாநிதி க. குணராசா, கமலா குணராசா - 2008)
4. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்66, 67 நா. நவநாயகமூர்த்தி - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றவர்கள் நாளடைவில் பௌத்த சிங்களவராயினர் என்பதும் வரலாற்றுண்மையாகும்.

6. அக்காலத்தில் சிவாலயங்கள் பல இப்பிரதேசத்தில் நிலவியிருந்தன. சிவவழிபாட்டை பேணி வந்த சிங்கள பௌத்த மக்களை சிவபௌத்தர்கள் என்றும் வைதூலியச் சைவர் என்றும் குறிப்பிடுவர். அக்காலத்தில் சிவாலயங்களிலிருந்த சிவலிங்கங்களே பிற்காலங்களில் (1900க்கு பின்) இப்பிரதேசங்களில் கண்டெடுக்கப்பட்டு குளக்கரை, வயல்கள் ஆகிய இடங்களில் மரத்தடிப் பிள்ளையார்களாக நிலவி வருகின்றன.

7. இலங்கைத் தீவானது பாண்டியரது ஆட்சியின் கீழிருந்த காலத்தில் மார்க்கபோலோ என்னும் யாத்திரிகன் இலங்கை வழியாகச் சென்றார். (கி.பி. 1292 - 1294) அவர் இந்நாட்டு மன்னனை 'செந்தமேன்' என்று குறிப்பிடுகின்றார். இவ்வேளை பாண்டியநாடு ஐந்து சகோதரர்களால் ஆளப்பட்டு வந்தது. (கூட்டாச்சி) இவர்களுள் சடையவர்மன், சுந்தர பாண்டியன், குலசேகரனின் இளைய சகோதர்களுள் ஒருவனாவான். இவன் கி.பி. 1276 - 1293 வரையும் பதவி வகித்தவன். இவனையே மார்க்கபோலோ சொந்தர் பாண்டியத்தேவர் என்று குறிப்பிடுகின்றார். (பண்டைய ஈழத்தமிழர் - பக்.66 - நா. நவநாயகமூர்த்தி - 1998)

8. சாகாமம் கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்த கண்ணகி வழிபாட்டுக் கூறுகளை (அம்மன் சிலை உள்ளிட்ட) மாகோனின் படையெடுப்பைத் தொடர்ந்து அங்கிருந்து எடுத்து வரப்பட்டுச் சில காலம் கோரைக்களப்பு கிராமத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் (கிபி. 1284 - 1304) இவை அனைத்தும் தம்பிலுவில் பகுதிக்கு எடுத்து வரப்பட்டு ஆலயம் நிர்மாணித்து அம்மன் விக்கிரகம் பிரதிஸ்டை செய்யப்பட்டதுடன் ஏனைய பொருட்கள் ஆலயத்தில் சேர்க்கப்பட்டன என்றும் மரபுரை ஒன்று குறிப்பிடுகின்றது.

9. திராவிடக்கட்டிடக்கலை - பக்.38 கா. இந்திரபாலா - 1970

10. ஆலையடிவேம்பு பிரதேச வரலாற்றுப் பின்னணி - கட்டுரை - நா. நவநாயகமூர்த்தி. கலாசார விழாமலர் 'ஏர்முனை', ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் - 1997

11. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்.95. நா. நவயகமூர்த்தி - 2002

   - கி.பி. 1300ம் ஆண்டளவில் மட்டக்களப்பின் தென்பகுதியில் வீரமுனை காரைதீவு, தம்பிலுவில், பட்டிநகர், பாணகை ஆகிய இடங்களில் சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு (ஆலயங்கள்) செழித்திருந்து.

12. கி.பி. 1215ல் மாகோனால் மேற்கொள்ளப்பட்ட படை யெடுப்பைத் தொடர்ந்து முள்ளிக்குளத்து மலைப் பிரதேசம் பொலிவிழந்து போனது ஆயினும் இன்று இங்கு காணக்க கிடைக்கும் தொல்லியல் சான்றுகள் வரலாற்று உண்மைகள் பலவற்றைத் தெளிவுறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வளர்ச்சியும் வழிபாடும் (கி.பி. 1320 - 1450)

கி.பி. பதினாலாம் பதினைந்தாம் நூற்றண்டுகளில் பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலயம் சிறப்புடன் விளங்கியிருந்தது. இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ்ச் சைவர்கள் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த இக்காலத்தில் சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடானது இப்பிராந்தி யங்களில் வாழ்ந்து வந்த தமிழ்ச் சைவரிடையே தாய்த் தெய்வ வழிபாட்டின் கூறுகளிலொன்றாக மலர்ந்து அதாவது அன்னை பராசக்தியின் வடிவங்களிலொன்றாக கண்ணகை அம்மனாக வழிபடும் வழக்கம் தோற்றம் பெற்றுச் சிறந்திருந்தது.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களது அரசியல் செல்வாக்கு நிலைத்திருந்த இக்காலத்தில் வடக்கில் புதிய கண்ணகை அம்மன் ஆலயங்கள் தோற்றம் பெற்றிருந்ததுடன் கண்ணகை அம்மன் இலக்கியங்களும் உருவாகி வந்தன. இக்காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) நிலவி வந்த கண்ணகி ஆலயங்களில் கண்ணகை அம்மனாகவும் பத்தினி அம்மனாகவும் கண்ணகியை மக்கள் வழிபட்டு வந்ததுடன் இலக்கியங்களும் உருவாகி வந்துள்ளன. இக்காலத்தில் வட இலங்கைக்கும் மட்டக்களப்புக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே இருந்து வந்த நெருக்கமான சமூக சமய கலாசார அரசியல் தொடர்புகள் இதற்குக் காரணிகளாயின. இது பற்றி நோக்கலாம்.

பொலநறுவை அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மாகன் வட இலங்கையில் யாழ்ப்பாணத்தில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தான். இவ்வரசானது இக்காலத் திலேயே சுதந்திரமான அரசாக விளங்கியது. கலிங்க மாகனும் அவனது உரிமையோரும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் ஆட்சியை ஒருபோதும் இழக்கவில்லை என்பதும் யாழ்ப்பாணத்தில் அவர்களது அரண்கள் ஊகாவற்றுறை, வலிகாமம் என்பன இருந்தன என்பதும் அறிய முடிகின்றது1.

இதனைத் தொடர்ந்து மாகனும் அவனது சகாக்களும் (ஜயபாகு என்ற குளக்கோட்டன் உள்ளிட்ட) கிழக்கிலங்கையின் பல பாகங்களிலும் மக்களைக் குடியேற்றி சிற்றரசுகளைத் தோற்றுவித்தனர். இச்சிற்றரசுகள் தென்னிந்தியப் பண்பாடு மட்டக்களப்பில் பரவுவதற்கு உதவின2. கலிங்கமாகன் பொலநறுவை ஆட்சியை இழந்தபோதும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து இவனது அதிகாரத்தின் கீழ் இருந்து வந்துள்ளது.

சாவகமன்னன் சந்திரபானு யாழ்ப்பாண அரசை மாகனிடமிருந்து கைப்பற்றி தான் ஆட்சி செய்தான். பின் வந்த பாண்டியப் படையெடுப்புக்கள் சிங்கள அரசை பாண்டியருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறை கொடுக்க வைக்க வழிவகுத்த அந்த நேரத்தில் ஈழத்தின் வடபகுதியையும் பாண்டிய அரசின் ஆணையை ஏற்க வைத்தன எனினும் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியப் பேரரசு நிலை குலைய ஈழத்தின் வடபகுதி ஆரியச் சக்கரவர்த்திகள் வசம் வர, சிங்கள அரசும் பாண்டியப் பிடியிலிருந்து விடுதலை பெற்றது. (The Kingdom of Jaffna. S. Pathmanathan. Colombo - 1978 ) கி.பி. பதினாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து விஜயநகர அரசின் ஆதிக்கம் இலங்கையில் காணப்பட்டது. எனினும் யாழ்ப்பாண அரசுதான் விஜயநகர அரசின் பிரதிநிதிகளாக மதுரை, தஞ்சாவூர் (ஆகிய) பகுதிகளில் ஆட்சி செலுத்திய நாயக்கர்களுடன் தொடர்பு வைத்திருந்தது.

இக்காலத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளும் வன்னிச் சிற்றரசுகளும் வடக்கே ஆட்சிசெய்ய கிழக்கே வன்னிச் சிற்றரசுகள் எழுச்சிபெற வடக்கு கிழக்குப் பகுதிகள் தனித் தமிழ்க் கலாசாரப் பிராந்தியங்களாக மாறின. இக்காலத்தில் சிங்கள அரசு தென்மேற்கு நோக்கி புலம்பெயர தமிழ் சிங்கள அரசுகளைப் பிரித்து வைக்கும் பகுதியாக வடமத்திய மாகாணம் காடடர்ந்த பகுதியாகியது. எனினும் கி.பி. பதினாலாம் நூற்றாண்டில் இலங்கையில் நிலவியிருந்த அரசுகளில் வலிமை பெற்றதாக யாழ்ப்பாண அரசு எழுச்சியடைந்ததன் விளைவாக சிங்கள அரசின் மீதும் இதன் ஆதிக்கம் பரந்தது. இதனை கோட்டகம, மடவாக்கை கல்வெட்டுக்கள் மட்டுமன்றி இராஜாவளிய, நிக்காயசங்கிராவ போன்ற இலக்கியங்களும் உறுதி செய்கின்றன3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1344ம் ஆண்டளவில் யாழ்ப்பாண மன்னர்கள் சிங்கள அரசர்களிடம் திறை பெற்று வந்தனர். கி.பி. 1349ம் ஆண்டு கம்பளையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த நாலாம் புவனேகபாகுவும் அவனுக்குப் பின் வந்தோரும் ஆட்சி நடாத்திய காலத்தில் யாழ்ப்பாணத் தமிழ் அரசருக்குத் திறை செலுத்தி வந்தனர்5. இவ்வாறு பதினான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் யாழ்ப்பாணத் தமிழ் அரசு உன்னத நிலையினை எய்தியிருந்த காலத்தில் கிழக்கிலும் தமிழ்ச் சிற்றரசர் ஆட்சி நிலைத்திருந்த வேளையில் வடக்கு கிழக்கில் தமிழ்ச்சைவர்கள் தனிப்பெரும் பான்மையினராக வாழ்ந்திருந்த இக்காலத்தில் இப்பிராந்தி யங்களில் நிலவி வந்த கண்ணகி வழிபாட்டிலும் மாற்றம் ஏற்பட்டது.

சிலம்பு கூறும் பத்தினித் தெய்வமான கண்ணகியைத் தெய்வப் பெண்ணாகச் சித்திரித்து அதாவது அன்னை பராசக்தியின் வடிவங்களிலொன்றாக கண்ணகை அம்மனாகப் போற்றி வழிபடும் மரபு இக்காலத்தில் தோற்றம் பெற்றது. இதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு தமிழ்ச் சைவர்களிடையே பத்தினி வழிபாடாகவும் அம்மன் வழிபாடாகவும் கண்ணகி வழிபாடு விளங்கி வந்தது6. வட இலங்கை யாழ்ப்பாண அரசர்களும் கிழக்கிலங்கை தமிழ்ச் சிற்றரசர்களும் கண்ணகி வழிபாட்டை ஆதரித்து வந்தனர். கண்ணகையம்மன் இலக்கியங்களும் உருவாகி வந்தன.

வட இலங்கையில் அங்கணாகடவை, செட்டிபுலம், மச்சூழ், வற்றாப்பளை, கொம்படி, சங்குவயல், கோலங்கிராய் ஆகிய இடங்களில் அமைந்திருந்த பத்தினி ஆலயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகையம்மன் வழிபாடு நிலவியிருந்ததுடன் திருமலையில் நிலாவளி, சம்பூர், கும்புறுப்பிட்டிய, பாலம்போட்டாறு, உவர்மலை போன்ற பழைய பத்தினி ஆலயங்களிலும் கண்ணகை அம்மன் வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்தது.

இக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி புரிந்த குணபூஷணசிங்கையாரியன் (கி.பி. 1347 - 1371) என்பவன் யாழ்ப்பாணப் பகுதியில் பல கண்ணகை அம்மன் ஆலயங்களை நிர்மாணித்தான். இவனுக்குப் பின் ஆட்சி செலுத்திய இவனது மகனான வரோதய சிங்கையாரியனும் (கி.பி. 1371 - 1380) பல கண்ணகை அம்மன் ஆலயங்களை நிர்மாணித்துள்ளான். என அறிய முடிகின்றது7. வடக்கு, கிழக்கு பகுதிகளில் கண்ணகை அம்மன் வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்த இக்காலத்தில் கண்ணகி அம்மன் வழிபாட்டு இலக்கியங்களும் உருவாகி வந்தன.

வரோதய சிங்கையாரியனுக்குப் பின் ஆட்சி புரிந்த யாழ்ப்பாண அரசனான ஜெகவீரசிங்கம் (கி.பி. 1380 - 1417) என்ற செகவிரர் என்பவரால் 'கோவலனார் கதை' என்ற இலக்கியம் இயற்றப்பட்டது. இதனைத் தழுவியதாக சிலம்பு கூறல் என்ற கண்ணகி இலக்கியம் வன்னிப் பகுதியில் உருவானது8. இதனைத் தொடர்ந்து வன்னி உள்ளிட்ட வட இலங்கையில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவர்களிடையே சிலம்பு கூறும் பத்தினித் தெய்வமான கண்ணகியை கண்ணகி அம்மனாகப் போற்றி (பராசக்தியின் வடிவங்களிலொன்றாக) வழிபடும் மரபு உன்னத நிலையை எய்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை இக்காலத்தில் (கி.பி. பதினாலாம் பதினைந்தாம் நூற்றாண்டுகள்) மட்டக்களப்பில் வாழ்ந் திருந்த தமிழ்ச் சைவர்கள் சிலம்பு கூறும் பத்தினித் தெய்வமான கண்ணகியைக் கண்ணகை அம்மனாகவும் பத்தினித் தெய்வமாகவும் போற்றி வழிபட்டு வந்தனர்9. தம்பிலுவில், பட்டிநகர், வீரமுனை, காரைதீவு, பாணகை போன்ற பழந்தமிழ்க் கிராமங்களில் நிலவியிருந்த கண்ணகி அம்மன் ஆலயங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன. இக்காலத்தில் குறிப்பாக மட்டக்களப்பின் தென் பிரதேசத்திலேயே கண்ணகையம்மன் வழிபாடு பிரபல்யம் பெற்றிருந்தது எனலாம்.

இக்காலத்தில் மட்டக்களப்பின் தென் பிரதேசத்தில் அதிகாரம் செலுத்தி வந்த சம்மாந்துறை, பாணகை, சிங்காரபுரி (அட்டப்பள்ளம்) வன்னிச் சிற்றரசர்கள் கண்ணகி வழிபாட்டை ஆதரித்து வந்தனர். (கண்ணகை அம்மன்) இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களது அரசியல் செல்வாக்கு நிலைத்திருந்த இக்காலத்தில் மட்டக்களப்பின் தென் பகுதியில் தம்பிலுவில் கிராமத்ததில் வாழ்ந்திருந்த புலவரொருவரால் கண்ணகி வழக்குரை என்ற கண்ணகி இலக்கியம் உருவாக்கப்பட்டது.

மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்தி வந்த வன்னியர் என்ற சிற்றரசர்கள் யாழ்ப்பாண மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த இக்காலத்தில் வட இலங்கைக்கும் தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்திற்கு மிடையில் கடல் வழியாகவும் தரை வழியாகவும் நெருக்கமான சமூக சமய வாணிப உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவியிருந்தன. இந்நிலையிலேயே கோவலனார் கதை இலக்கியம் இப்பிரதேசத்தில் அறிமுகமானது. இதனைத் தொடர்ந்து திருக்கோவில் பிரதேசத்தில் தம்பிலுவில் கிராமத்தில் வாழ்ந்திருந்த புலவரொருவரால் கோவலனார் கதை இலக்கியத்தைத் தழுவியதாக கி.பி. 1410க்கும் 1425க்கும் இடைப்பட்ட காலத்தில் கண்ணகி வழக்குரை இலக்கியம் இயற்றப்பட்டது.

கி.பி. பதினாலாம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்தி வந்த வன்னியர் என்ற சிற்றரசர்கள் யாழ்ப்பாண அரசர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர்10. யாழ்ப்பாண அரசில் தமிழ்மொழியே உத்தியோக மொழியாக விளங்கியிருந்தது. இக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த தமிழ்ச்சைவர்கள் தங்கள் மொழியையும் சமயத்தையும் கண்ணகை அம்மன் வழிபாட்டையும் பேணிக்காக்க ஆர்வம் கொண்டவர்களாக விருந்தனர். இவர்களுக்கு வன்னியர்களது ஆதரவு மட்டுமன்றி யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களது ஆதரவும் இருந்து வந்தது.

கி.பி. பதினாலாம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் மட்டக்களப்பில் யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களின் அரசியல் செல்வாக்கு நிலைத்திருந்த காலத்தில் (கி.பி. 1450 வரை) மட்டக்களப்பின் தென்பகுதியில் அமைந்திருந்த பிரபல்யம் பெற்ற கண்ணகையம்மன் ஆலயங்களுள் பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்றாக விளங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயத்துடன் நெருக்கமான உறவினையும் இவ்வாலயம் கொண்டிருந்தது. அந்தக்காலத்தில் இவ்விரு ஆலயங்களிலும் ஒருத்தரே கட்டாடியாராகக் (கப்புகன்) பணி புரிந்து வந்துள்ளனர். முதலாம் விஜயபாகு மன்னன் காலத்தில் (கி.பி. 11ம் நூற்) பாண்டிய நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு பட்டிநகர் பகுதியில் குடியேற்றப்பட்ட மழவராயன் என்ற குடியினரின் வழித்தோன்றல்களாக இவர்கள் இருந்துள்ளனர். மேலும் இவ்வாலயங்களில் வருடா வருடம் இடம்பெற்று வந்த சடங்கு நிகழ்வுகள் (பூசை, வழிபாடு) இதற்கேற்றவாறு வெவ்வேறு தினங்களில் இடம்பெற்று வந்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

பட்டிநகர், கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, மீனோடைக்கட்டு, பாலமுனை ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) பிரதேசத்தில் தமிழ்ச்சைவர்கள் தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த அக்காலத்தில் இப்பிரதேச மக்களின் கண்ணகை அம்மன் வழிபாட்டு மையமாக பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் விளங்கியிருந்தது.

இக்காலத்தில் தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களுடன் கருங்கொடித்தீவு பிரதேச மக்கள் நெருக்கமான சமூக, சமய, கலாசார உறவுகளைக் கொண்டிருந்ததுடன் சம்மாந்துறை, சிங்காரபுரி (நிந்தவூர்) ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்திருந்த மக்களுடனும் நல்லுறவுகளைக் கொண்டிருந்தனர். இதற்கு மொழி, பண்பாட்டு அம்சங்கள் (இவர்களிடையே நிலவியிருந்த ) மட்டுமன்றி இப்பிரதேசங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவியிருந்த கண்ணகி வழிபாட்டு அம்சங்களும் நம்பிக்கைகளும் காரணிகளாயின. மேலும் இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் முருக வழிபாட்டு மையமாக திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம் விளங்கி வந்தமையும் ஆகும்11.

**குறிப்புகள்:**

1. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.85. எச்.டபிள்யு. கொடிறின்றன். மறுபதிப்பு - 1960
2. இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை - பக்.38. கா. இந்திரபாலா - 1970
   - ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்.94. நா. நவநாயக மூர்த்தி - 2002
3. ஈழமும் இந்து மதமும் - பொலநறுவை அரசுக்குப் பிற்பட்ட போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம் 1250 - 1505 - கட்டுரை சி.க. சிற்றம்பலம் - சிந்தனை இதழ் கார்த்திகை - 1984
4. போர்த்துக்கேயர் வந்த காலத்தில் (1505) இத்தமிழ் இராச்சியத்தை பரராசசேகரன் (கி.பி. 1478 - 1519) ஆட்சி புரிந்து வந்துள்ளான். இத்தமிழ் அரசின் தலைநகராக நல்லூர் விளங்கியது (நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பாகம்2 பக்.131. பேராசிரியர் எஸ்.ஓ. பேக்மன் - ஜி.சி. மெண்டிஸ் - 1966)
5. கி.பி. 1450ம் ஆண்டு கோட்டை மன்னனான ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வரை இந்நிலை நீடித்திருந்தது. (தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்.71. நா. நவநாயகமூர்த்தி - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தமிழ்ப் பெண் கண்ணகி பத்தினித் தெய்வமானாள். - கட்டுரை - நா. நவநாயகமூர்த்தி - தினக்குரல் வாரமலர் 10.06.2012

7. பல்துறை ஆய்வுகள் - பக்.101. தமிழ் அறிஞர் ம. சற்குணம் - 1999

8. கோவலனார் கதை, சிலம்பு கூறல் ஆகிய கண்ணகி அம்மன் இலக்கியங்களைத் தொடர்ந்து வட இலங்கையில் அங்கணாகடவை கண்ணகை அம்மன் காவியம், வற்றாப்பளை கண்ணகை அம்மன் காவியம், வற்றாப்பளை கண்ணகி அம்மன் தோத்திரம் முதலான இலக்கியங்கள் தோற்றம் பெற்றிருந்தன.

9. சிலம்பு கூறும் பத்தினித் தெய்வமான கண்ணகியைக் கண்ணகை அம்மனாகவும் பத்தினித் தெய்வமாகவும் போற்றி வழிபடும் மரபானது மட்டக்களப்பு தமிழ் சைவர்களிடையே இன்றுவரை நிலவி வருகின்றது.

10. யாழ்ப்பாண சரித்திரம் - பக்.87. முதலியார் செ. இராசநாயகம் - 1933

- கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரம பாகுவின் (கி.பி. 1415 - 1467) வளர்ப்பு மகனான செண்பகப்பெருமாள் என்பவன் வட இலங்கையைக் கைப்பற்றி பதினேழு வருடங்கள் ஆட்சி புரிந்தான். இந்நிலையில் மட்டக்களப்பில் நிலைத் திருந்த யாழ்ப்பாண தமிழ் மன்னரின் அரசியல் செல்வாக்கு இல்லாதொழிந்து போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவ்வேளை பாண்டிய நாட்டில் வாழ்ந்திருந்த யாழ்ப்பாண அரசன் கனகசூரியசிங்கையாரியன் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த சிற்றரசர்களின் உதவியுடன் மீண்டும் வட இலங்கையை கைப்பற்றியதாக யாழ்ப்பாண வைபவ மணிமாலை கூறும்.

11. அக்கரைப்பற்று வன்னிச் சிற்றரசு தோற்றம் பெற்றிராத இக்காலத்தில் சம்மாந்துறை, சிங்காரபுரி, வன்னிச் இராசாக்களின் ஆதிக்கம் தெற்கே திருக்கோவில் வரை நிலைத்திருந்தது. இவர்கள் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் மட்டுமன்றி கண்ணகை அம்மன் ஆலயங்களின் (வீரமுனை, காரைதீவு, பட்டிநகர்) வளர்ச்சியிலும் தங்கள் ஆதரவை நல்கி வந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி. 1450 - 1600 வரையுள்ள காலம்
## (கோட்டை, சீதாவாக்கை மன்னர் காலம்)

கி.பி. பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் மட்டக்களப்பில் கண்ணகை அம்மன் வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்தது சிலம்பு கூறும் பத்தினித் தெய்வமான கண்ணகியை இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவர்கள் அன்னை பராசக்தியின் வடிவங்களிலொன்றாகக் கண்ணகை அம்மனாகவும் பத்தினித் தெய்வமாகவும் போற்றி வழிபட்டு வந்தனர் இக்காலத்தில் (கி.பி. 1450 - 1600) மட்டக்களப்பின் தென்பகுதியில் கண்ணகை அம்மன் வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்ததுடன் இப்பகுதியில் (தற்போதைய அம்பாரை மாவட்டம்) அமைந்திருந்த தம்பிலுவில் பட்டிநகர் காரைதீவு, வீரமுனை, பாணமை, கண்ணகை அம்மன் ஆலயங்கள் பிரபல்யம் பெற்றிருந்தன.

கோட்டை சீதவாக்கை இராச்சியங்கள் நிலவியிருந்த இக்காலத்தில் தென்னிலங்கை பௌத்த சிங்களமக்களிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு உன்னத நிலையில் இருந்து வந்ததுடன் அரசர்களின் ஆதரவையும் பெற்றிருந்தது பத்தினித் தெய்யோ என்று கண்ணகியைப் பௌத்த சிங்கள மக்கள் பக்தியுடன் போற்றி வழிபட்டுவந்தனர். இக்காலத்தில் உருவான சிங்கள இலக்கியங்கள், சிலவற்றில் பத்தினி வழிபாடு பற்றிய செய்திகள் உள்ளன. இவ்வாறு இலங்கையில் வாழ்ந்திருந்த தமிழ் சிங்கள மக்களிடையே கண்ணகி வழிபாடு செழித்திருந்த அக்காலத்தில் (கி.பி. 1450 - 1600) மட்டக்களப்பில் வன்னியர் என்ற தமிழ் சிற்றரசர் ஆட்சி நிலைத்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி. 1450 ஆம் ஆண்டில் இடம் பெற்ற கோட்டை மன்னனின் படையெடுப்பினால், யாழ்ப்பாண இராச்சியம் சிதைவுற்றதைத் தொடர்ந்து மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்கள்கோட்டை மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்கும் நிலைக்குத்தள்ளப்பட்டனர்1. ஆயினும் இவர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்திவந்தனர்.

ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் கீழிருந்த "கந்தஉடரட்டை" சபுமல் குமாரய்யா" ஆறாம் புவனேகுபாகு என்ற பெயரில் கோட்டை மன்னனான போது கோட்டை இராச்சியத்தில் இருந்து விலகி விக்கிரமபாகு என்பவனின் தனியரசானது கண்டி நகரம் இவ்விராச்சியத்தின் தலைநகரானது ஒரு சிறிய பிரதேசத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கண்டி இராச்சியம் மாத்தளைப் பகுதியையும் வளவைப்பகுதிக்கும், திருகோணமலைக்கும் இடையில் உள்ள பிரதேசத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிகரித்துக் கொண்டது2. இவ்வேளை மேலதிகமாக யாள, ஊவா, வெல்லச, போன்ற சிற்றரசுகளையும் விக்ரமபாகு கண்டி அரசுடன் சேர்த்துக் கொண்டதாக அறிய முடிகின்றது.

ஆறாம் புவனேகபாகு காலத்திலேயே (கி.பி. 1472 - 1480) உடரட்ட என்ற மலைநாடும் தனி இராச்சியமாக பிரிந்தது. செங்கடகலவை (கண்டி) நிறுவியவனாகச் சூளவம்சம் குறிப்பிடும் விக்கிரமபாகுவும் உடரட்டை தனியரசைத் தோற்றுவித்த சேனாசம்மத விக்கிரமபாகுவும் ஒருவனாக விருக்கலாம் என்பர்3. இவ்வாறு விக்கிரமபாகு காலத்தில் கண்டியரசானது தனியரசாகத் தோன்றி நிலவியிருந்த காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியமானது வன்னித் தமிழ் சிற்றரசர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது

இக்காலத்தில் (கி.பி. 1450 - 1500) தென்னிந்தியாவுடன் நெருங்கிய சமூக, சமய, கலாசார தொடர்புகளை மட்டக்களப்பு கொண்டிருந்தது தென்னிந்தியப் பண்பாடே இங்கு நிலைத்திருந்தது. இதற்கு முந்திய காலத்தில் தென்னியாவிலிருந்து இங்கு அறிமுகமாகிய ஆடல் வகைகள் வளர்ச்சியுற்று விளங்கியிருந்ததுடன் தாய்த் தெய்வ வழிபாட்டு அம்சங்களும் சிறந்திருந்தன. (மாரி, காளி, பேச்சி, கடல் நாச்சி, மீனாட்சி) தென்னிந்தியாவுக்கும் மட்டக்களப்புமிடையே வாணிபத் தொடர்புகளும் இருந்துவந்தன.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் போர்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்த வேளையில் (கி.பி. 1505) இலங்கையில் மூன்று பெரிய அரசுகள் காணப்பட்டன. இவை முறையே கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம் என்பனவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மூன்றும் தனியான பிரதேசங்களை ஆட்சி செய்து வந்தன. அத்துடன் ஒன்றை மற்றொன்று அழிக்க முடியாததாகத் தம்மளவில் பலமுள்ள அரசுகளாகவும் விளங்கின4. இம் மூன்று பெரிய அரசுகள் தவிர வன்னியர் என்ற தமிழ் அரசர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்த வன்னிச் சிற்றரசுகள் கிழக்கிலங்கையிலும் வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் நிலைத்திருந்தன மேலும் குறுநில அரசுகளும் இருந்தன5. இவ்வேளை கண்டி இராச்சியத்தை விக்கிரமபாகு (கி.பி. 1469 - 1511) ஆட்சிபுரிந்து வந்தான்.

இவ்வேளை (கி.பி. 1505 இல்) மட்டக்களப்பில் (அம்பாறை உள்ளிட்ட) வன்னியர் ஆட்சி சிறப்புற்றிருந்தது இவர்கள் ஏறாவூர் பளுகாமம், சம்மாந்துறை, சிங்காரபுரி, பாணமை ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் தம்மளவில் பலம் மிக்க சுதந்திரமுள்ள அரசர்களாக அதிகாரம் செலுத்தி வந்தனர். இக்காலத்தில் (கி.பி. 1505) தமிழர்களது பாரம்பரியப் பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழரது ஆட்சியின் கீழிருந்தன எனலாம்.

வாவியின் தென் எல்லைப் பிரதேசமே இக்காலத்தில் மட்டக்களப்பு என்ற பெயரினைப் பெற்றிருந்தது, சம்மாந்துறை, வீரமுனை, வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு, மல்வத்தை, மலுக்கம் பிட்டி ஆகிய இடங்களை உள்ளடக்கியிருந்த இப்பிரதேசத்தில் தமிழ்ச் சைவர்களே வாழ்ந்திருந்தனர். சம்மாந்துறை காளியம்மன் ஆலயம், வீரமுனை கண்ணகை அம்மன் ஆலயம். சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலயம் என்பன சிறப்புடன் விளங்கியிருந்தன. இப்பிரதேசத்தை அண்மித்திருந்த காரேறுமூதூர் (காரைதீவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தவூர், அட்டப்பளம், (சிங்காரபுரி) காளியோடை, செங்கற்படை, நாகமேடு ஒலுவில், திராய்க்கேணி, பாலமுனை ஆகிய இடங்களில் தமிழர் நாகரீகம் செழித்திருந்ததுடன் சைவமும் நிலைத்திருந்தது.

இக்காலத்தில் சிங்காரபுரி இராஜதானியிலிருந்து அதிகாரம் செலுத்தி வந்த வன்னியர் என்போர் சைவ ஆலயங்களின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தி வந்தனர். நிந்தவூர் பிள்ளையார் ஆலயம், மடத்தடி மீனாட்சி அம்மன் சிங்காரபுரி மாரியம்மன் ஆகியனவும் சிறப்புடன் விளங்கின, தீகவாபி, இறக்காமம், தொட்டம், தோணிக்கல் பொத்தானை ஆகிய இடங்களை உள்ளடக்கியதாய் தெற்கே கழுகாமத்துமலை வரை பரந்திருந்த நடுக்காடு என்ற பெரும் பிரதேசம் காடாக விருந்தது (நா. நவநாயகமூர்த்தி 2002) என்பதும் கூறிப்பிடத்தக்கது எனலாம்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (கி.பி. 1545, 46 களில்) மட்டக்களப்பில் ஆட்சி புரிந்து வந்த வன்னிச்சிற்றரசர்கள் சுதந்திரமுள்ளவர்களாகவே இப்பிரதேசத்தில் அதிகாரம் செலுத்தி வந்தனர். இக்காலத்தில் கண்டியை செயவீரன் என்பவன் ஆட்சி (கி.பி. 1521 - 1551) புரிந்து வந்தான் 05.10.1545 இல் கண்டியில் தங்கியிருந்த அன்ரோனியா பெரையா" என்பவர் கோவாவிற்கு (போர்த்து கீசரின் கிழக்காசியத் தலைப்பீடம் இருந்த இடம்) எழுதிய கடிதத்தில் மட்டக்களப்பு கண்டி மன்னனுக்கு உரியதல்ல எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்6.

இக்காலத்தில், கண்டி அரசனின் சபைக்குச் சென்றிருந்த கத்தோலிக்க குருவான "சைமோவோ, டி கொயிம்பரா" என்னும் பாதிரியார் அவருடன் சென்ற ஆந்திரேடி சுசா என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துகீச வீரன் கண்டி மன்னன் சபையில் மட்டக்களப்பு மன்னனின் தூதுவர்களும் இருந்ததாக கோவாவிலிருந்த போர்த்துக்கீச ஆளுநருக்கு 27.05.1546 இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார். மேற்குறிப்பிட்ட பாதிரியார் கோவாவிற்குத் திரும்பிய பின்னர் போர்த்துக்கல் நாட்டு மன்னனுக்கு 25.12.1546 இல் எழுதிய கடித்தில் தாம் கண்டியிலிருந்து கண்டி மன்னனின் நண்பனான மட்டக்களப்பு மன்னனின் இராச்சியத்துக்குச் சென்றதாகத் தெரிவிக்கின்றார்7.

கத்தோலிக்க குருவான சைமோவோ டிகொயிம்பரர் பாதிரியார் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்படும் மட்டக்களப்பு மன்னன் எதிர்மன்னன் சிங்கன் (கி.பி. 1542 - 1586) என்பவனாவான் இக்காலத்தில் மட்டக்களப்பில் ஆட்சி புரிந்த வன்னிய இராசாக்களில் முதல்வனாக இவன் கருதப்படுகின்றான் பளுகாமத்திலிருந்து ஆட்சி புரிந்து வந்த இவனது செல்வாக்கு மட்டக்களப்பு முழுவதிலும் பரந்திருந்தது. பாணமை, சிங்காபுரி, சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த வன்னியர்கள் இவனது சமூக, சமய, கலாசார, அரசியல் வழிகாட்டுதல்களை ஏற்றிருந்தனர்8.

இவனது காலத்திலேயே பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம் தோன்றியது தென்னிந்தியாவுடன் மட்டக்களப்பு நெருக்கமான சமய, கலாசார உறவுகளைக்கொண்டிருந்த இக்காலத்தில் வாவியூடாக போக்குவரத்து, வாணிபம் ஆகியன இடம் பெற்றுவந்தன. இக்காலத்தில். (கி.பி. 1550 - 1590) மட்டக்களப்பில் ஆட்சி புரிந்து வந்த வன்னியர் கோட்டை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனுக்கோ அன்றிக் கண்டி மன்னனுக்கோ திறை செலுத்தாத சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இருந்து வந்துள்ளனர் (நா. நவநாயகமூர்த்தி - 2002) கி.பி. 1580 களில் கோட்டை மன்னன் உரிமை கொண்டாடிய அரசுகள் பற்றி தர்மபாலனின் கொடையோடு இணைக்கப்பட்ட பத்திரம் குறிப்பிடுகின்றது. இதில் பானமை, பளுகாமம், மட்டக்களப்பு, சிற்றரசுகள் அடங்கியுள்ளன9. இவ்வாறு இப்பத்திரம் குறிப்பிட்டபோதும் இக்காலத்தில் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகள் சுதந்திரமுள்ள அரசுகளாகவே செயற்பட்டுவந்தன என்பது வரலாற்று உண்மையாகும்.

சுதந்திரமுள்ள தமிழ்ச் சிற்றரசர்களது ஆட்சியும், அம்மன் வழிபாடும், அதாவது மாரி, காளி, மீனாட்சி திரௌபதி போன்ற தாய்த் தெய்வ வழிபாட்டு அம்சங்களும் சிறப்புடன் விளங்கியிருந்த இக்காலத்தில் (கி.பி. 1450 - 1580) மட்டக்களப்பின் தென்பகுதியில் கண்ணகி வழிபாடு செழிப்புடன் விளங்கியிருந்தது. இப்பகுதியில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவர்களிடையே கண்ணகையம்மன் வழிபாட்டுப் பாரம்பரியம் நிலைத்திருந்தது.

இப்பகுதியில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவர்கள், சிலப்பதிகாரம் குறிப்பிடும் பத்தினித் தெய்வமான கண்ணகியை அன்னை பராசக்தியின் வடிவங்களுள் ஒன்றாக கண்ணகை அம்மனாகவும் பத்தினித் தெய்வமாகவும் வழிபட்டு வந்தனர். தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம், பட்டிமேடு கண்ணகை அம்மன் ஆலயம் ஆகியன சிறப்புடன் விளங்கியிருந்தன. இக்காலத்தில் (கி.பி. 1540 - 1595) திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்திலும், பட்டி நகரிலும் (அக்கரைப்பற்று பிரதேசம்) கண்ணகி வழிபாடு செழித்திருந்தது10. மேலும் இக்கால கட்டத்திலேயே பனங்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் ஐயனார் வழிபாடு தோற்றம்பெற்று சிறப்புற்றிருந்த துடன் சிங்காரபுரி வன்னிய ராசாவால் மானியமாக காணியும் வழங்கப்பட்டிருந்தது11.

இதேவேளை, கி.பி. 1580க்கும் 1597க்கமிடைப்பட்ட காலத்தில் சீதாவாக்கையிலிருந்து எடுத்து வரப்பட்ட பத்தினி அம்மன் பூஜை வழிபாட்டிற்குரிய சில புனிதப் பொருட்கள், தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்திலும் பட்டிமேடு கண்ணகை அம்மன் ஆலயத்திலும், ஏற்கனவே நிலவியிருந்த கண்ணகையம்மன் வழிபாட்டு கூறுகளுடன் வைக்கப்பட்டு பூஜை வழிபாட்டுக் குரியனவாக இப்புனிதப் பொருட்களும் நிலவி வந்ததை அறிய முடிகின்றது. இவை அக்காலத்தில் சீதாவாக்கை இராச்சியத்தின் மீது போர்த்துக்கேயர் மேற்கொண்ட படையெடுப்பின் போது தரைமட்டமாக்கப்பட்ட பத்தினி ஆலயமொன்றிலிருந்து எடுத்து வரப்பட்டனவாகவிருக்கலாம் என்பதை கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மட்டக்களப்பின் தென்பகுதியில் (அம்பாறை மாவட்டம்) நிலவி வந்த ஐதீகக்கதையொன்று உணர்த்தும்12.

சீதாவாக்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட கண்ணகை தம்பிலுவில் வந்தடைந்து கோயில் கொண்டதாகவும், மேலும் இதேகாலத்தில் பட்டிமேடு கண்ணகை அம்மன் கோயிலில் கண்ணகை தெய்வம் தங்கப்புறா வடிவத்தில் வணங்கப் பட்டதாகவும் மேற்படி கதை கூறுகின்றது. இக்கதையில் இந்தியாவிலிருந்து இங்கு குடியேறி வாழ்ந்திருந்த மழவராயன் குடியைச் சேர்ந்த ராஜபுத்திரரான (சிற்றறசர்) மங்கலப் போடி என்ற பிரபுவும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார்13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் கண்ணகை அம்மன் ஐந்து தலை நாகமாக ஊர்ந்து சென்று வழிபடப்பட்டதை போலவே பட்டிமேடு கண்ணகைக்கு பொற்புறா வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது இது சீதாவாக்கை ஐதீகக் கதையிலிருந்து தோன்றியிருக்கலாம் என இலங்கை சமூக சேவையின் கியூநெவில் (Mr. NEVILL) அவர்கள் (கி.பி. 1871) கருதுகின்றார்.

சீதாவாக்கை ஐதீகக்கதையிலிருந்து (புராண கதை) நாம் பெறும் உண்மை யாதெனில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிலங்கையில் போர்த்துகேயரால் பௌத்த, இந்து, ஆலயங்கள் அழிக்கப்பட்டவேளை அங்கு சிறப்புடன் விளங்கியிருந்த பத்தினி ஆலயங்களும் அழித்தொழிக்கப்பட்டன. இக்காலத்தில் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம் பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் ஆகியனவற்றில் மழவராயன் குடியைச் சேர்ந்த மங்கலப்போடி என்பவர் கட்டாடியாராக (கப்புகன்) பணி புரிந்து வந்தார்.

இவர் சீதாவாக்கையிலிருந்து சில பத்தினி வழிபாட்டு அம்சங்களை (சின்னங்கள்) எடுத்து வந்து தான் பணி புரிந்து வரும் ஆலயங்களில் கண்ணகை அம்மன் வழிபாட்டுடன் இவற்றையும் புகுத்தினார். இவ்வேளை சீதாவாக்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட பொற்புறாசின்னம் பட்டிமேடு கண்ணகை, அம்மன் ஆலயத்தில் வழிபாட்டிற்கென வைக்கப்பட்டிருந்தது என்பதாகும். பட்டிமேடு அம்மன் கோயிலில் கண்ணகைத் தெய்வம் தங்கப்புறா சின்னத்தில் (வடிவம்) வணங்கப்படுகின்றது என்ற சீதாவாக்கை ஐதீகக்கதை இதனை உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இக்கதையில் தோடர்புபடுத்தப்படும் மழவராயன்குடி மங்கலப்போடி பிரபு என்பவர் இந்தியாவிலிருந்து வந்து இப்பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்து வந்தவர் என்று கூறப்படுகின்றது. இவருடைய முன்னோர் பாண்டிய நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டவர்கள் என்பதை முன்னர் கண்டோம் இதேவேளை மேற்படி ஐதீகக் கதையானது பட்டிமேடு கண்ணகை ஆலயத்தில் தங்கப்புறா சின்னமாக தோன்றும் (வடிவில்) கண்ணகைத் தெய்வம் சீதாவாக்கையிலிருந்து வெளியேற்றப்பட்டதாக குறிப்பிடுகின்றது போர்த்துக்கேயரால் அக்காலத்தில் அழிக்கப்பட்ட பத்தினி ஆலயமொன்றிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டதையே (பொற்புறா) இது குறிக்கும் எனலாம்.

சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னையின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1521 - 1551) சிறப்புடன் விளங்கிய நவகமுவ பத்தினி அம்மன் ஆலயம் இவனது காலத்திலேயே போர்த்துகேயரால் அழிக்கப்பட்டது புராதன ஆலயம் அமைந்திருந்த இடத்தில் இன்று காணப்படும் சிறிய பத்தினி ஆலயத்தில் வெண்கலத்திலான பத்தினி சிலையுடன் (அம்மன்) அம்மன் காற் சிலம்புகள் சிலவும் இங்கு பூஜைக்குரிய புனிதப் பொருட்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் வேல் முச் சூலம் போன்ற ஆயுதங்களும் இங்கு உள்ளன14. இதே போன்றே சீதாவாக்கை ஐதீகக் கதையில் குறிப்பிடப்படும் தங்கபுறா உள்ளிட்டபுனிதப் பொருட்கள் அக்காலத்தில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பத்தினி ஆலயத்தில் இருந்துள்ளமை தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் தென்னிலங்கையில் பத்தினி வழிபாடு உன்னதநிலையிலிருந்தது அத்துடன் அரசர்களது ஆதரவையும் பெற்றிருந்தது. கி.பி. 1415 முதல் 1597 வரை தென்னிலங்கை இராசதானியாக விளங்கிய கோட்டை அரசில் பல பத்தினித் கோயில்கள் இருந்ததை சந்தேச இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய கோயில்களுள் ஒன்றுதான் கோட்டையில் ஆறாம் பராக்கிரமபாகுவால் (கி.பி. 1412 - 1467) நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிகளைக் கொண்ட பத்தினி ஆலயமாகும். கி.பி. 1446 இல் எழுதப்பெற்ற கோகுலசந்தேச என்னும் குயில் விடு தூது நூலில் இவ்வாலயம் பற்றிய செய்யுள்கள் (117வது செய்யுளில்) பாடப்பட்டுள்ளன. இம்மன்னனின் ஆட்சியின் போது கோட்டை இராச்சியத்தில் பல இந்துக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன15.

கஜபாகு மன்னன் காலத்தில் தோற்றம் பெற்றதென நம்பப்படும் நவகமுவ பத்தினியம்மன் ஆலயம் கோட்டை இராச்சியத்தை ஆட்சி புரிந்த ஏழாம் புவனேகபாகு மன்னன் காலத்தில் (கி.பி. 1521 - 1551) சிறப்புடன் விளங்கியிருந்து இதே காலத்தில் சீதாவாக்கை இராச்சியத்தை ஆட்சிபுரிந்து வந்த இவனது சகோதரனான. மாயாதுன்னை (கி.பி. 1521 - 1581) போர்த்துக் கேயருக்கு எதிராகப் போர் புரிந்து வந்தான் இம் மன்னன் போர்த்துக்கேயருடன் போர்புரிய கொழும்புக் கோட்டைக்குப் படையெடுத்து வந்தவேளை நவகமுவ பத்தினி அம்மனைத்தரிசித்து ஓர் நேர்த்திக் கடனையும் வைத்துச் சென்றுள்ளான். இவ்வாறு பிரசித்தி பெற்ற இவ்வாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயாதுன்னையின் காலத்திலேயே போர்த்துகீசரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதை அறியமுடிகின்றது16.

சீதாவாக்கை மன்னன் முதலாம் முதலாம் இராசசிங்கன் (கி.பி. 1581 - 1592) பௌத்தனாக விருந்து சைவனாக மாறியவன் சீதாவாக்கையிலிருந்து ஆட்சி புரிந்து வந்த மாயாதுன்னை என்ற மன்னனை கொன்று விட்டு அவனது மகனான இராசசிங்கன் சீதவாக்கை மன்னனானான். தந்தையைக் கொன்ற பாவத்தைப் போக்கச் சைவசமயத்தைத் தழுவியதுடன் உடல் முழுவதும் சாம்பலைப் (திருநீறு) பூசிச் சைவனாகிச் சிவனை வழிபாடு செய்பவனாகினான் இவ்வாறு சூளவம்சம் (அத்தியாயம் : 16) இவனைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.

முதலாம் இராசசிங்கன் சைவனாக மாறியிருந்த வேளை பல சைவக் கோயில்களைக் கட்டியுள்ளான். அவன் தந்தையுடன் சேர்ந்து அரசியல் நடாத்திய காலத்தில் (கி.பி. 1554 - 1581) மதக் கொடை என்னுமிடத்தில் கி.பி. 1577 இல் ஒரு பத்தினிக் கோயிலை நிர்மாணித்துள்ளான். இவன் தனது காலத்தில் கண்ணகிக்கு நாப்பத்தெட்டு கோயில்கள் அமைத்தான் என அறியக் கிடக்கின்றது.

கி.பி. 1521இல் சிறிய பிரதேசம் ஒன்றில் ஆரம்பமான சீதாவாக்கை அரசு மாயாதுன்னை மன்னன் காலத்தில் கி.பி. 1579 இல் நாட்டின் முக்கிய இராச்சியமாக விளங்கியது கொழும்பு தவிர்ந்த கோட்டை இராச்சியத்தின் ஏனைய பகுதிகளான கோட்டை, சீதாவாக்கை, றைகம, தெனவக்க, ஏழுகோறளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன சீதாவாக்கை இராச்சியத்துக்குள் அடங்கியிருந்தன முதலாம் இராசசிங்கன் கண்டியை ஆட்சிபுரிந்த கரலியட்ட பண்டாரனையும் தோற்கடித்து கி.பி. 1582 கண்டி இராச்சியத்தையும் தனது சீதாவாக்கையுடன் சேர்த்துக் கொண்டான் கி.பி. 1592 கண்டி மன்னன் முதலாம் விமலதர்ம சூரியனிடம் தோல்வியுற்ற இவனது மரணத்தைத் தொடர்ந்து சீதவாக்கை சிம்மாசனத்துக்கு உரிமையாளர் பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்கினர். இந்நிலையில் போர்த்துகேயர் சீதாவாக்கையிலிருந்த பெறுமதி மிக்க சொத்துக்களை (ஆலயங்கள் உள்ளிட்ட) கொள்ளையிட்ட பின் சிதாவாக்கையை தமது காவல் நிலையமாகப் பயன்படுத்தினர்17.

**குறிப்புக்கள்**

1) யாழ்ப்பாண இராச்சியம் - பக்கம் (iv) பதிப்பாசிரியர் சி.க. சிற்றம்பல் - 1992

2) இலங்கை சரித்திரம் - பாகம் (I) பக்கம் 23, எஸ்.எவ்.டி. சில்வா - 1952

- கி.பி. 1462 இல் விக்கிரமபாகு மன்னனால் தோற்று விக்கப்பட்டதே கண்டி இராச்சியமாகும்.

3) பண்டைய ஈழம் - பாகம் II பக்கம் 430 வே.க. நடராசா - 1970

4) யாழ்ப்பாண இராச்சியம் - பக்கம் 132 பதிப்பாசிரியர் சி.க. சிற்றம் பலம் - 1992

5) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்கம் 79 நா. நவநாயகமூர்த்தி - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) மட்டக்களப்பு குகன் குலமுற்குகர் வரலாறும் மரபுகளும் - பக்கம் 35 ஞா. சண்முகம் - 1999

7) மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழாமலர் - 1993. திரு. டி. சிவராம் எழுதிய 16 ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பு - போர்த்துகீச ஆவணங்கள் போடிமார் கல்வெட்டு பற்றிய ஒப்பீடு, கட்டுரை

8) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்கம் 98 நா. நவநாயக மூர்த்தி - 2002

9) இலங்கையின் சுருக்க வரலாறு - பக்கம் 92 எச்.டபிள்யு. கொடிறின்றன் - 1960

   - கி.பி. 1597 இல் தர்மபாலன் மரணமானதை அடுத்து - 1580 இல் போர்த்துக்கீசரிடம் தர்மபாலன் அளித்த நன்கொடை பத்திரத்தை பிரதானிகளிடம் காண்பித்து அன்றிலிருந்து போர்த்துகீச மன்னரே இந்நாட்டினதும் மன்னராவார் என்று பிரகடனப்படுத்தினர்.

10) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்கம் 88 நா. நவநாயக மூர்த்தி - 1999

11) இக்காணியில் நெல்வயல், குளம், ஆலயம் ஆகியன அமைந்திருந்தன. இவை முறையே ஐயனார் வெளி ஐயனார் குளம் என வழங்குகின்றன. (இலங்கை வரலாற்றில் பனங்காடும் பழைய ஐயனார் வழிபாடும் - கட்டுரை. நா.நவநாயகமூர்த்தி கலாசார விழா மலர் ஏர்முனை ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் 1999, 2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் அம்மன் சிலையுடன் பூசை வழிபாட்டிற்குரிய புனிதப் பொருட்களாக காற்சிலம்பு அம்மானைக்காய், தங்க மாம்பழம் ஆகியன இருந்து வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

13) MONOGRAPH OF THE BATTICALOA DISTRICT = Page = 32 - 82 Mudaliar S.O. CANAGARATNAM - 1921

14) தென்னிலங்கையில் புராதன இந்துக் கோயில்கள் - பக்கம் 56, 57 என்.கே.எஸ் திருச்செல்வம் - 2010

15) தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள் - பக்கம் 20, என்.கே.எஸ். திருச்செல்வம் - 2010

16) மேற்படி நூல் பக்கம் 56 என்.கே.எஸ். திருச்சொல்வம்

17) கி.பி. 1554 தொடக்கம் 1592 வரையுள்ள காலத்தில் இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்த சீதாவாக்கை இராச்சியத்தையே சீதாவாக்கை ஐதீகக்கதை சீதாவாக்கை யிலிருந்து வெளியேற்றப்பட்டு தம்பிலுவிலுக்கு வந்து என்று குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி மன்னர் காலத்தில்
## (கி.பி. 1600 - 1796)

கி.பி. 1597 வரை மட்டக்களப்பில் ஆட்சி செய்த வன்னிய அரசர்கள் சுதந்திர முள்ளவர்களாகவே, செயற்பட்டு வந்தனர். இதேவேளை, பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கோட்டை நிர்வாகம் சீர்குலைந்த போது கண்டிப்பிரதேசத்தின் பிரதிநிதியாக விருந்த விக்கிரமபாகு (கி.பி. 1469 - 1511) கண்டியைச் சுதந்திர அரசாகப் பிரகடனப்படுத்திக் கண்டியை தலை நகராகக் கொண்டு மன்னனானான் இவன் கண்டியைச் சூழவுள்ள பல ஆட்சிப் பிரதேசங்களை (சிற்றரசுகள்) தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான்.

இதனைத் தொடர்ந்து கண்டி மன்னரின் தலையீடு மட்டக்களப்பில் தொடங்கியது இத்தலையீட்டை விரும்பாத மட்டக்களப்பு தமிழ் அரசுகள் கண்டியினால் தமக்கு பாதிப்பு ஏற்படுமோ என அஞ்சி மட்டக்கப்பிலிருந்த போர்த்து கீசருடன் இரகசியத் தொடர்பை வைக்கத் தொடங்கினர். கி.பி. 1597 இல் போர்த்து கீசர் கண்டிக்கு எதிராகப் படையெடுத்துச் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது மட்டக்களப்பு அரசன் (சம்மாந்துறைவன்னியன்) போர்த்துகீசருக்கு முன்னூறு அவணம் நெல்கொடுத்து உதவினான்1. கி.பி. 1592 இல் வலுவான அரசாக மாறிய கண்டிக்கு எதிராகவும் தன் தனித்துவத்தைப் பேணவே மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகள் போர்த்துகீசர் தொடர்பை மேற்கொண்டு வந்ததென்பது இதனால் தெளிவாகின்றது.

கண்டி தனி இராச்சியமாகி வலுவடைந்ததும் கண்டி அரசர்களுடன் மட்டக்களப்பு வன்னிய அரசர்கள் நல்லுறவு பூண்டவர்களாகவேயிருந்தனர். இவர்கள் சிலவேளைகளில் கண்டி அரசுக்கு சிறிதளவு திறை செலுத்துபவர்களாகவும், சில வேளைகளில் திறை செலுத்தாதவர்களாகவும் இருந்துள்ளனர். போர்த்துகீச சரித்திர ஆசிரியரான பிதா குயரோஸ் அவர்கள் தெரிவிக்கையில் மட்டக்களப்பு மன்னர்கள் மட்டக்களப்பில் நெசவு செய்யப்பட்ட துப்பட்டி, உடு துணிகள் சிலவற்றையே கண்டி மன்னனுக்கு திறையாகக் கொடுத்ததாகக் கூறுகின்றார்2.

கண்டி அரசானது தனியரசாகப் பலம் பெற்ற காலத்தில் மட்டக்களப்பு தமிழ் சிற்றரசர்கள் கண்டியரசின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்றுக் கொண்டனர். குறிப்பாக கண்டி மன்னனான விமலதர்ம சூரியன் (கி.பி. 1592 - 1604) கண்டி தனி இராச்சியமாகி வலுவடைந்த வேளையிலேயே (கி.பி. 1600) மட்டக்களப்பு வன்னிய இராசாக்கள் கண்டி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றனர். இதனைத் தொடர்ந்து கண்டி மன்னர்களுடன் நல்லுறவு பூண்டவர்களாக இவர்கள் இருந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மன்னன் முதலாம் விமலதர்ம சூரியன் சம்மாந்துறை பட்டினத்துக்கும் மட்டக்களப்பிலுள்ள முக்கிய இந்துக் கோயில் களுக்கும் விஜயம் செய்துள்ளான். இவ்வாறு வரலாற்றாசிரியர் பீ.ஈ. பீரிஸ் குறிப்பிடுன்றார். இவன் தனது ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்புக்கு இரு தடவைகள் விஜயம் செய்துள்ளான். இதனை வரலாற்றுக் குறிப்புக்கள் உணர்த்துகின்றன3. 1602 இல் விமலதர்ம சூரியன் சம்மாந்துறைக்கு விஜயம் செய்து வன்னிய இராசாவின் மாளிகையில் தங்கிருந்த வேளையில் கல்முனைத்துறையை வந்தடைந்த டச்சுத் தளபதியான கபில் பேர்கன் சம்மாந்துறை வன்னிச் சிற்றரசனின் உதவியுடன் கண்டி மன்னனைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளான்.

கி.பி. 1603 இல் விமலதர்ம சூரியன் மட்டக்களப்புக்கு வருகை தந்து சம்மாந்துறையில் தங்கிருந்த வேளை சம்மாந்துறை வன்னிய இராசாவின் உதவியுடன் திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆகிய ஆலயங்களுக்கும் விஜயம் செய்து ஆலயத்திருப்பணிகளுக்கு நன்கொடைகள் வழங்கியுள்ளான் இதனை பட்டயங்கள் கூறும் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்துக்கு விமலதர்ம சூரியன் வழங்கிய நன்கொடைகள் பற்றி தாதன் கல்வெட்டு விபரிக்கும்4. கி.பி. 1603 இல் போர்த்துக்கீச தளபதியான அசிவிடோ கண்டிமீது படையெடுப்பொன்றை மேற்கொண்டவேளை கண்டி மன்னன் விமலதர்ம சூரியனுக்கு மட்டக்களப்பு வன்னிய அரசர்கள் ஆளணிகள் (போர்வீரர்) அனுப்பியிருந்தனர்5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு முதலாம் விமலதர்ம சூரியன் காலம் தொட்டு ஆங்கிலேயர் காலம் வரையும் (கி.பி. 1803) கண்டிக்கும் மட்டக்களப்புக்குமிடையே நெருக்கமான சமூக, சமய, அரசியல் உறவுகள் இருந்து வந்தன. இதேவேளை கண்டிக்கும் மட்டக்களப்புக்குமிடையே நிலவி வந்த இந்நல்லுறவுகளுக்கு கண்டி இராச்சியத்திலும் மட்டக்களப்பிலும் இக்காலத்தில் சிறப்புடன் விளங்கி வந்த கண்ணகி வழிபாடு பக்கபலமாக மிளிர்ந்து வந்தது இதனை கண்டி மன்னர் காலத்தில் மட்டக்களப்பில் தோன்றிய கண்ணகி இலக்கியங்கள் தெளிவுறுத்தும் இக்காலத்தில் (கிபி. 1600 - 1803) கண்டியில் ஆட்சி புரிந்து வந்த சிங்கள மன்னர்களும் நாயக்க மன்னர்களும் மட்டக்களப்பில் நிலவிவந்த கண்ணகி வழிபாட்டை ஆதரித்து மானியங்கள் வழங்கி வந்துள்ளனர்.

முதலாம் விமலதர்ம சூரியன் காலத்தில் கண்டி நகரிலும் கண்டி இராச்சியத்தை உள்ளிட்ட ஊவா போன்ற பிரதேசங்களிலும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்தது கண்டியில் ஆடித்திங்கள் தோறும் கண்டிப் பெரஹரா விழாவில் பத்தினி விழா, எடுக்கப்பட்டு வந்துள்ளது. இவ்விழாவில் நாத தெய்யோ (சிவன்) விஷ்ணு தெய்யோ (விஷ்ணு) கதிர்காம தெய்யோ (முருகன்) முதலிய தெய்வங்களும் இடம் பெற்று வந்தன பிற்காலத்தில்தான் புத்தரின் புனித சின்னங்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது.

இக்காலத்தில், கருங்கொடித்தீவு பிரதேசத்தில் (அக்கரைப்பற்று பகுதி) வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவரிடையே நம்பிக்கைக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வமாக பட்டிமேடு கண்ணகை அம்மன் விளங்கியிருந்தார். மட்டக்களப்பின் தென்பகுதியில் அக்காலத்தில் அமைந்திருந்த கண்ணகையம்மன் ஆலயங்களுள் ஒன்றாக இவ்வாலயமும் பிரபல்யம் பெற்றிருந்தது. சிறியதொரு மண் குடிசையிலான மடாலயமாக, விளங்கி வந்த இவ்வாலயத்தில் வைகாசிப் பூரணையில் கண்ணகிக்கு விழா எடுக்கப்பட்டுவந்தது. இவ்வேளை பக்தி என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மடை, பொங்கல், பூஜை வழிபாடுகள் நிகழ்ந்துவந்தன. ஆலயக்கட்டாடி (கப்புகன்) யாரே அம்மனின் பிரதிநிதியாக மதிக்கப்பட்டு வந்தார்.

முதலாம் விமலதர்ம சூரியனுக்குப் பின் செனரதன் என்பவன் (கி.பி. 1605 - 1635) கண்டி மன்னனானான். இவன் இறந்துபோன சகோதர மன்னனின் மனைவியைப் பட்டத்து இராணி ஆக்கிக் கொண்டான். இவனது காலத்தில் மட்டக்களப்பில் பல வரலாற்று சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. மட்டக்களப்பில் ஆட்சி புரிந்து வந்த வன்னிய அரசர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்த செனரதன் கி.பி. 1615 இல் வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயத்துக்குத் தானம் ஒன்று வழங்கியுள்ளான், இதனை வீரமுனை செப்பேடு குறிப்பிடும். மேலும் கி.பி. 1626 இல் மட்டக்களப்பு வன்னி சிற்றரசர்களின் ஆதரவுடன் நாலாயிரம் முஸ்லீம் மக்களை செனரதன் மட்டக்களப்பில் குடியேற்றினான் என்பதையும் அறியமுடிகின்றது.

இதேவேளை இவனது காலத்தில் மட்டக்களப்பின் வடபகுதியில் இடம் பெற்று வந்த நாடார் குடியேற்றங்களினால் மட்டக்களப்பின் வடபகுதியில் கண்ணகி வழிபாடு அறிமுகமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெற்றது (கி.பி. 1605 - 06களில்) யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஏழு கண்ணகை அம்மன் விக்கிரங்கள் மட்டக்களப்பின் வடக்குப் பகுதியிலுள்ள ஏழு கிராமங்களில் ஆலயங்கள் அமைத்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டதாக அறியமுடிகின்றது6. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு பிரதேசம் முழுவதிலும் கண்ணகி வழிபாடு பரந்திருந்ததெனலாம்.

செனரதனுக்குப்பின் கண்டி அரசனான இரண்டாம் இராச சிங்கன் (கி.பி. 1635 - 1687) இலங்கையில் ஆட்சி புரிந்த சிறந்த மன்னர்களுள் ஒருவனாவான். இதனை சூளவம்சம் (அத்தியாயம்:17) கூறும் இவன் மதுரையிலிருந்து தமிழ் இளவரசி ஒருத்தியை வரவழைத்துத் தன் பட்டத்து இராணியாக்கிக் கொண்டான். ஐம்பத்திரண்டு ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தான் என்றும் மேலும் இந்நூல் கூறும் மட்டக்களப்புடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்த இவன் பல தடவைகள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளான்.

கி.பி. 1656 இல் மட்டக்களப்புக்கு அரசியல் விடயங்கள் தொடர்பாக விஜயம் செய்து திரும்பியவேளை இராசமலையில் (ரஜகல) தனது குலம், கோத்திரம், நாமம், போர்த்துகீசர், ஒல்லாந்தரை, வெற்றி கொண்ட யாவற்றையும் பொறித்துச் சென்றுள்ளான் இதனை மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும் (பக்கம் 64) இதேவேளை இவன் தீகவாபியில் தங்கியிருந்து சென்றதாக சூளவம்சம் (அத்தியாயம் 17) குறிப்பிடுகின்றது. கி.பி. 1683 இல் (ஏப்ரல் 26) இரண்டாம் இராஜசிங்கன் சம்மாந்துறைக்கு விஜயம் செய்தவேளை சம்மாந்துறையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த இராமநாதர் என்ற பிராமணருக்கு இரண்டாம் இராஜசிங்கனால் அளிக்கப்பட்ட நன்கொடை பற்றி சம்மாந்துறை செப்பேடுகள் குறிப்பிடுகின்றன7.

இரண்டாம் இராஜசிங்கன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (1635) இல் மட்டக்களப்பில் போர்த்துகேயர் ஆதிக்கம் நிலைத்திருந்தது. இவர்களைத் தாக்கி வெளியேற்றுவதாற்கு ஒல்லாந்தர் கண்டி மன்னனுக்கு உதவியளித்தனர். இதற்குப் பிரதியுபகாரமாக ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை பெற்றனர் ஆனால் மட்டக்களப்பு (அம்பாரை உள்ளிட்ட) திருமலை மாவட்டங்களை கண்டி மன்னன் இராசசிங்கன் தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தான்8. இவ்வாறு வரலாறுகள் குறிப்பிடுகின்ற போதும் மட்டக்களப்பை இக்காலத்தில் ஆட்சி புரிந்துவந்த வன்னியர்கள் சுதந்திரமுள்ளவர்களாகவே செயற்பட்டு வந்தனர். மேலும் இவர்கள் கண்டி மன்னனுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தனர். இதன் காரணமாகவே கண்டி மன்னனின் செல்வாக்கு மட்டக்களப்பில் நிலைத்திருந்த தென்பது வரலாற்றுண்மையாகும்9.

மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்த இக்காலத்தில் தம்பிலுவில் பகுதியில் கண்ணகி இலக்கியங்கள் பல உருவாகி வந்துள்ளன. இவற்றில் தம்பிலுவில் கண்ணகை அம்மன் மழைக்காவியம், கண்ணகை அம்மன் குளிர்த்தி ஆகியன இன்று காணக்கிடைக்கின்றன. தம்பிலுவில் கண்ணகை அம்மன் மழைக்காவியம் இரண்டாம் இராசசிங்கனது ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் தோன்றியது ஆகும். அக்காலத்தில் இப்பிரதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை குறைவடைந்து கடும் வரட்சி நிலவியிருந்தவேளை மழை பொழிந்து வரட்சி நீங்க அம்மனை வேண்டிப் பாடப்பட்ட இலக்கியமே தம்பிலுவில் கண்ணகை அம்மன் மழைக் காவியமாகும். இவ்விலக்கிய வரலாற்றுப்பின்னணி பற்றி தம்பிலுவில் கண்ணகி வழிபாடு நூல் (பக்கம் 40 - 43) விபரமாகக் கூறும்.

இக்காலத்தில், தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம் பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம், ஆகியனவற்றில் கப்புகனாராகக் (கட்டாடியார்) கடமை புரிந்து வந்த கண்ணப்பர் என்பவர் பாடிய மழைக்காவியம் இலக்கியத்தில் ஒரு பாடலில் கண்ணப்பர் தனக்காகவாயினும் அதாவது "கட்டாடி கண்ணப்பனு காயினுமிரங்கி மோது குளிர் தாரைமழை நீயருளவே வேணும்" (பாடல் 14 : வரி 6 - 7) என்று அம்மனை வேண்டுகின்றார் மேலும் இவர் தனது காவியத்தில் மட்டக்களப்புடன் நல்லுறவுகள் கொண்டிருந்த கண்டி மன்னனையும் புகழ்ந்துரைக்கின்றார்[10].

இரண்டாம் இராசசிங்கனது ஆட்சிக் காலத்தில் தம்பிலுவில் பகுதியில் தோன்றிய கண்ணகை அம்மன் குளிர்த்தி குறிப்பிடத்தக்கதொரு இலக்கியமாகும். சிலம்புகூறும் பத்தினித் தெய்வமான கண்ணகியை இப்பகுதி மக்கள் தாய்த் தெய்வ வழிபாட்டு அம்சங்களிலொன்றாக கண்ணகை அம்மனாக வழிபட்டு வந்த போதும் பத்தினித் தெய்வமாகவும் நம்பிக்கையுடன் போற்றி வந்துள்ளனரென்பதை 'கண்ணகை அம்மன்குளிர்த்தி' இலக்கியம் நன்கு தெளிவுறுத்தும்.

"பத்தினி என்று பலரும் போற்ற
பாவை நின்றம்மானை யாடினாளே" (பாடல் 24 : வரி 3 - 4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீறாடும் பத்தினி வந்தாள்
விளையாடும் வீதியில் வந்தாள், வந்தாள் (பாடல் 32 : வரி 1 - 2)
போன்ற வரிகள் இதற்குச் சான்றுகள் எனலாம்.

இராஜ சிங்கனுக்கு பின்னர் அவனது மகனான இரண்டாம் விமலதர்ம சூரியன் ஆட்சிபீடம் ஏறினான். மதுரையிலிருந்து அரசகுமாரி ஒருத்தியை வரவழைத்து தன் பட்டத்து இராணி ஆக்கிக் கொண்டான் மக்களின் அபிமானத்தைப் பெற்று நீதியாகவும் சமத்துவமாகவும் ஆட்சிபுரிந்தான் புனித தந்ததாதுவுக்கு பெருவிழா ஒன்றினை நடாத்த முடிவு செய்தான் முதல் கட்டமாக மூன்றடுக்கில் ஒரு கோயிலைக் கட்டி (தலதாமளிகை) அதில் பிரதிஸ்டை செய்தான் ஆண்டு தோறும் புனித தாதுவுக்கு விழா எடுத்தான் இருபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான்.

இவனுக்கு பின் இவனது மகனான வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் ஆட்சி பீடம் ஏறினான் அவனும் மதுரையிலிருந்து இளவரசிகளை வரவழைத்து மணந்து கொண்டான் முப்பத்தி மூன்று ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி புரிந்தான் (சூளவம்சம் : அத்தியாயம் 17)

இரண்டாம் இராசசிங்கன் (கி.பி. 1635 - 1687) இரண்டாம் விமலதர்தம சூரியன் (1687 - 1706) வீரநரேந்திர சிங்கன் (கி.பி. 1706 - 1739) ஆகியோரது காலத்தில் தம்பிலுவில் பகுதியில் உருவான இன்று காணக்கிடைக்கும் தம்பிலுவில் கண்ணகை அம்மன் மழைக்காவியம், கண்ணகை அம்மன்குளிர்த்தி நரேந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கன் பள்ளு தம்பிலுவில் கண்ணகை அம்மன் பள்ளு, போன்ற இலக்கியங்கள் வாயிலாக இக்கால கட்டத்தில் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம் சிறப்புடன் விளங்கியிருந்ததையும் மேலும் இம் மன்னர்கள் இப்பிரதேசத்துடன் கொண்டிருந்த நெருக்கமான உறவுகள் பற்றியும் அறியமுடிகின்றது.

வீரநரேந்திர சிங்கன் தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்ததுடன் தனது அரசவையில் தமிழுக்கும் இடம் அளித்திருந்தான் இவனது காலத்தில் கண்டி நகர் சென்றிருந்த தம்பட்டை புலவரொருவர் வீர நரேந்திர சிங்கன் அரசவை சென்று அவனைச் புகழ்ந்து பாடி பரிசிலும் பெற்றுள்ளார் இச்சிற்றிலக்கியமே “நரேந்திரசிங்கன் பள்ளு” இலக்கியமாகும்11.

இதேவேளை தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்ததும் மட்டக்களப்பில் அக்காலத்தில் பிரசித்தி பெற்ற கண்ணகி ஆலயமாக விளங்கியிருந்ததும் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டதுமான பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயத்தை மையமாக கொண்டு உருவான கண்ணகி இலக்கியங்கள் எதுவும் இன்று காணக்கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது எனலாம்.

ஆனால், இக்கால கட்டத்தில் (கி.பி. 1635 - 1739) இவ்வாலயத்தில் குடிகொண்டு அருளாட்சி புரிந்து வந்த கண்ணகை அம்மன் பேரில் இலக்கியங்கள் உருவாக்கி நிலவி வந்துள்ளன என்பதற்கு போதிய சான்றுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் கி.பி. 1952ம் ஆண்டு வரை இவ்வாலயக் கப்புகனாராக விருந்த திரு. கதிரமலை கப்புகனார் காலத்தில் இவ்வாலயத்துக்கு உரித்தான பல இலக்கியச் சுவடிகள் இவரது பாதுகாப்பில் இருந்ததாகவும் இவை மரப்பெட்டகத்தில் சேமிக்கப்பட்டிருந்தன என்றும் அறியமுடிகின்றது. 1953 இல் திரு. கதிரமலை கப்புகனார். ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இச்சுவடிகள் யாவும் திரு. வேலுப்பிள்ளை கப்புகனார் பாதுகாப்பில் இருந்தன என்றும் பின்னர் திரு.க. சிந்தாத்துரை வண்ணக்கராக வந்த காலத்தில் ஆலய நிர்வாகத்தின் பொறுப்பில் (1971 இல்) இவை கையளிக்கப்பட்டன என்றும் தெரிய வருகின்றது12.

ஆதலால் இக்கால கட்டத்தில் அதாவது இரண்டாம் இராசசிங்கன் காலம் தொடக்கம் வீரநரேந்திர சிங்கன் காலம் வரையுள்ள காலத்தில் (1635 - 1739) பட்டிநகர் கண்ணகை அம்மன்பேரில் இலக்கியங்கள் பல இப்பிரதேசத்தில் உருவாகி நிலவி வந்துள்ளதென்பது தெளிவு, இதேவேளை வீர நரேந்திர சிங்கனுக்கு பின் கண்டியில் ஆட்சி புரிந்த நாயக்கர் குலத்துத் தமிழ் மன்னனான ஸ்ரீ விஜயராச சிங்கன் காலத்தில் தோன்றிய பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக்காவியம் என்ற இலக்கியம் இன்று காணக்கிடைக்கின்றது இதற்கு முந்திய காலத்தில் இவ்வால யத்தை மையமாகக் கொண்டு இலக்கியங்கள் உருவாகி நிலவி வந்தமைக்கு இவ்விலக்கியமும் சான்றாக மிளிர்கின்றதெனலாம்.

அக்காலத்தில், மழைவேண்டிப் பாடுவது “மழைக் காவியமாகும்” இரண்டாம் இராஜசிங்கன் காலத்தில் (கி.பி. 1635



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1687) முற்பகுதியில் இவ்வாறு மழைகுறைந்து பயிர்கள் வாடிக் கருகத் தொடங்கியிருந்த வேளையில் தம்பிலுவில் கண்ணகை அம்மன் பேரில் மழைக்காவியம் பாடியதைத் தொடர்ந்து வானம் இருண்டு மழைபொழிந்து வரட்சி நீங்கி விளைச்சல் பெருகியிருந்தது. இதன் காரணமாக தம்பிலுவில் மழைக்காவியம் மட்டக்களப்பில் பிரபல்யம் பெற்றிருந்தது.

இதனைத் தழுவியதாக ஸ்ரீவிஜயராச சிங்கன் காலத்தில் (கி.பி. 1739 - 1747) அக்கரைப்பற்று பிரதேசத்தில் வரட்சி நிலவியிருந்த வேளையில் மழை வேண்டி இப்பிரதேசப் புலவரொருவரால் பாடப்பட்டதே பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக்காவியம் இலக்கியமாகும். ஆனால் இதனைப்பாடிய புலவர் பெயர் தெரியவில்லை; இக்காவியத்தில் ஒருபாடலில் நாட்டில் மழைகுறைவு எப்போது தோன்றும் என்பதைப் புலவர் குறிப்பிடுகின்றார். கிரகநிலை மாற்றம் மன்னர்களின் நீதி தவறிய ஆட்சி மனிதர்களின் வஞ்சகச் செயல்கள் இவற்றினாலேயே மழைகுறைவு ஏற்படும் என்று புலவர் குறிப்பிடுகின்றார்.

"நிலையான நவக்கிரகம் நின்ற நிலை யாலோ
நீதிபுரி மன்னர்செய் கோல்வழுவி னாலோ
தொலையாத மானிடர்செய் வஞ்சனையினாலோ
தொல்லுலக மெங்குமழை யில்லையென வாட

(பாடல் 2 : வரி 1 - 4)

இவ்வாறு இருந்தபோதும் அம்மா கனக, பத்தினியே, வயல்களிலுள்ள நெற்பயிர்களும் மேட்டு நிலங்களிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனைப்பயிர்களும் பசுமை குன்றி வாடி வதங்கி வருகின்றன. ஆதலால் தாமதியாது உடனே மழை பொழிந்து வெள்ளம் ஓடிவரச் செய்வாய் எனப்புலவர் அம்மனை வேண்டுகின்றார்.

"கண்ணீரி னால்வந்த கனகபத்தினியே
களனியுறு வேளாண்மை புன்செய் சேனைப்பயிர்கள்.
உண்ணீர்மை குன்றிமிக வாடுதே யம்மா
ஒரு நொடியில் மழைவெள்ள மோடிவரச் செய்வாய்
(பாடல் 4 : வரி 1 - 4)

புலவர் தனது காவியத்தில் அம்மன் ஆலயத்தின் அருகாய் அமைந்திருந்த மழவராயன் குளம் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

"பரவைநிகர் மழவராயன் குளமருகில் மேவிவளர்
பட்டிநகர் தன்னிலுறை செட்டி மாதாவே,
(பாடல் 10 : வரி 7 - 8)

மேலும் அக்காலத்தில் வன்னிச் சிற்றரசு நிலைத்திருந்த அக்கரைப்பற்று நகர் பற்றியும் புலவர்தனது காவியத்தில் குறிப்பிடத் தவறவில்லை.

"மாமேவு மக்கரைப் பற்று நகர் மானிடர்கள்
வயல்களது புரனாக வாடுதே யம்மா
தேமேவு செஞ்சாலி விளைவது வுமில்லையோ
தேசமழை பெய்து நகர் செழிப்பதுவு மெப்போ
(பாடல் 5 : வரி 1 - 4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பட்டிநகர் மேவிவளர் பாவை கண்ணகையை வேண்டுகின்றார். இக்காலத்தில் மட்டக்களப்பு நாட்டில் (அம்பாரை உள்ளிட்ட) நீதி தவறாது நல்லாட்சி செலுத்தி வந்த வன்னியர்களையும் புலவர் தனது காவியத்தில் குறிப்பிடத்தவறவில்லை.

"நீதிசெறி பண்டார வன்னியர்கள் வாழி
நிமலனா ரருள் வாழி நீதிமுறை வாழி"
(பாடல் 11 : வரி 3 - 4)

இக்காலத்தில் மட்டக்களப்பில் ஏழு வன்னிய அரசுகள் (குறுநில) அமைந்திருந்தன பாணமை, அக்கரைப்பற்று சிங்காரபுரி (நிந்தவூர் பற்று) சம்மாந்துறை, மண்முனை (பளுகாமம்) ஏறாவூர் (கோறளை) நாதனை ஆகியனவாகும். இச்சிற்றரசுகள் கண்டி மன்னனுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். அத்துடன் கண்டிக்கும் மட்டக்களப்புக்குமிடையில் சமூக. சமய, கலாசார, வாணிபத் தொடர்புகளும் சிறந்தன.

நாயக்கர் குலத்துத் தமிழ் மன்னனான ஸ்ரீ விஜயராச சிங்கன் பற்றி சூளவம்சம் புகழ்ந்துரைக்கும். இவன் மதுரையிலிருந்து அரசகுலத்தவள் ஒருத்தியை (தமிழ் அரசி) வரவழைத்துத் தன்பட்டத்து இரானி ஆக்கிக் கொண்டான். மன்னனுக்குரிய கடமைகளை நன்கு ஆற்றிக் கொண்டு கண்டி நகரத்தில் வசித்து வரலாயினான். இவன் எட்டாண்டுகள் இந்நாட்டினைச் செவ்வனே பரிபாலித்தான். பௌத்த தர்மத்துக்குப் பெருந்தொண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றினான். (சூளவம்சம் : அத்தியாயம் 17) இவனது காலத்தில் தென்னிந்திய வர்த்தகர்கள். தம்பலகாமம் மட்டக்களப்பு துறைகள் ஊடாக கண்டிக் கிராமங்களுக்குச் சென்று வாணிபம் புரிந்து வந்ததை அறியமுடிகின்றது.

ஸ்ரீ விஜய இராஜசிங்கனது காலத்தில் பல சமயவிழாக்கள் இடம்பெற்றுவந்துள்ளன. பல்வேறு சமய விழாக்களை கொண்டாடிய இவன் அனுராதபுரத்திலும் மகியங்கனையிலும் சமய விழாக்களை நிகழ்த்தியுள்ளான் (சூளவம்சம் : அத்தியாயம் 17) இக்காலத்தில் தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த புலவர் ஒருவர் கண்டிநகர் சென்றிருந்தவேளை அங்கு இடம்பெற்ற அரசபவனி நிகழ்வைக் கண்டு களித்துத் திரும்பிய பின்னர் அந்நிகழ்வைப்பற்றி இயற்றிய இலக்கியம் "இராஜசிங்கன் பள்ளு" என்பதாகும் அக்காலத்தில் கண்டி நாயக்க மன்னர்கள் தமிழ்மொழிக்கும் தக்க அந்தஸ்தினை வழங்கியிருந்தனரென்பதை இவ்விலக்கியம் தெளிவுறுத்தும்.

ஸ்ரீ விஜயராச சிங்கனுக்குப் பின்னர் அவனது மனைவியின் சகோதரனும் நாயக்கர் குலத்துத் தமிழனுமான கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கன் கண்டி மன்னனாகி ஆட்சி புரிந்த காலத்தில் (கி.பி. 1747 - 1781) பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் சிறப்புடன் விளங்கியிருந்தது இக்காலத்தில் பௌத்த சிங்கள மக்களும் இவ்வாலயத்துடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்தனர். இவர்கள் இங்கு குடிகொண்டிருந்த கண்ணகை அம்மனைப் பத்தினித் தெய்வமாகப் போற்றி வழிபட்டுவந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலத்தில் இறக்காமத்துக்கருகில் "கோவில்மேடு" என்ற இடத்தில் தோற்றம் பெற்று நிலவி வந்த பத்தினி அம்மன் ஆலயம் சிறிது காலத்தின் பின்னர் பொலிவிழந்ததைத் தொடர்ந்து இவ்வாலயத்திலிருந்த அம்மனை கோவில் கட்டாடிக் குடும்பம் எடுத்து வந்து பட்டிநகர் கண்ணகை அம்மன் கோயில் அருகாய் சிறியதொரு ஆலயம் நிர்மாணித்து அதில் அம்மனை வைத்து "கோயில்மேடு" கட்டாடியார் சிறிது காலம் பூசை புரிந்து வந்ததாகவும் பின்னர் இவ்வாலயப் பொருட்கள் (புனித) பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயத்தில் சேர்க்கப்பட்டதாகவும் பரவணிக் கல்வெட்டு வாயிலாக அறியமுடிகின்றது.

ஆதலால், அக்காலத்தில் இவ்வாலயத்தில் சிறிது காலம் கண்ணகை அம்மன் பத்தாதி முறையிலும் இவ்வாலயத்தின் அருகாய் அமைந்திருந்த பத்தினி அம்மன் ஆலயத்தில் சிங்கள கட்டாடியாரால் சிங்கள பத்தாதி முறையிலும் பூசைகள் இடம்பெற்று வந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுபற்றி விரிவாக நோக்குவது பொருத்தமானதாகும்.

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்கு வந்த காலத்தில் கண்டியில் தமிழர்களது செல்வாக்கு அதிகரித்திருந்தது. இவ்வேளை, கண்டியில் கலகம் ஒன்று ஏற்பட்டது. இதனை இவனது தளபதியான கோபால முதலியார் என்பவர் அடக்கிவைத்தார். இதற்கு கைமாறாக கண்டி மன்னன் இவருக்கு நிலங்கள் வழங்கினான்13. இதே போன்று தான் ஆட்சிக்கு வந்த காலத்தில் தனக்கு விசுவாசமாக விருந்து வந்தவர்களுக்கு கைமாறாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்களும் வெகுமதிகளும் வழங்கினான். இவர்களில் இராஜபக்ஷ முதலியார் என்பவரும் ஒருவராவார்.

கண்டி இராச்சியத்துக்கும், மட்டக்களப்புக்கும் (அம்பாறை உள்ளிட்ட) நடுவில் காடாகவிருந்ததும் தெற்கே களிகாமத்து மலை தொடக்கம் வடக்கே வெல்லாவெளி பிரதேசம் வரை பரந்திருந்ததும் அம்பாறை, கொன்றை வட்டான், கடவத்தை இறக்காமம், வம்மியடி, பொத்தானை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருந்ததுமான பெரும் பிரதேசத்தை இராஜபக்ஷ முதலியாருக்கு கண்டி மன்னன் அளித்தான். இவர் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்களது ஆதரவுடன் மேற்கொண்ட சிங்கள குடியேற்றம் பற்றி பரவணிக் கல்வெட்டு விபரிக்கின்றது14.

அக்காலத்தில் (கி.பி. 1751, 52களில்) சம்மாந்துறை வன்னிச் சிற்றரசனின் ஆட்சியின் கீழ் நடுக்காடு என்ற பெயருடன் விளங்கி வந்த இப்பிரதேசத்தில் சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் குடியேறி ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர். இதனை மேற்படி பரவணிக் கல்வெட்டு நன்கு தெளிவுறுத்தும், இக்காலத்தில் மட்டக்களப்பில் ஏழு வன்னிச் சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்ததாகவும் இவர்கள் கூடும் இடமாக சிங்காரவத்தை (அட்டப்பள்ளம்) இருந்து வந்ததாகவும், இவர்கள் தங்களுக்கு ஒருவெளி (வயல்) வெட்டித்தர வேண்டும் என்று இராஜபக்ஷ முதலியாரைக் கேட்டவேளை, அவர் வேடர்களைக் கொண்டு வெட்டுவித்து மேட்டுவெளி, பள்ளவெளி ஆகிய இரண்டு வெளியையும் வன்னி இராசாக்களுக்கு கொடுத்தார் என்று பரவணிக் கல்வெட்டு மேலும் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1752 ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி. 1781 வரை இராஜபக்ஷ முதலியாரின் நிர்வாகத்தின் கீழ் நடுக்காடு பிரதேசம் சிறப்புடன் விளங்கியிருந்தது மக்கள் செழிப்புடன் இங்கு வாழ்ந்திருந்தனர். இக்கால கட்டத்தில் இப்பிரதேசத்தை "கல்மடு" என்னும் இடத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டு வன்னியர்களது ஆதரவுடன் இராஜபக்ஷ முதலி நிர்வகித்து வந்தார் இவ்வேளை நாடுகாட்டு தலைமைப் போட்டிகளாக (ஊர்) சின்னத்தம்பிபோடி, மன்னிப்போடி, மங்கலப்போடி, வேலாப்போடி, பக்திப்போடி, செம்பகக்குட்டிபோடி, கண்ணாப்போடி என்போர் பதவி வகித்து வந்தனர்.

இக்காலத்தில் "கோவில்மேடு" என்னுமிடத்தில் பத்தினி ஆலயம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, சிங்களக்கட்டாடி ஒருவரால் சிங்கள பத்தாசி முறையில் பூசைகள் இடம்பெற்றுவந்தன. இந்த கோவில்மேட்டுக்கு அம்மன் விக்கிரகம் மதுரையிலிருந்து சின்னத் தம்பி போடியாரால் கொண்டு வரப்பட்டது. இவ்வாலயத்துக்கு இராஜபக்ஷ முதலியார் கட்டாடி வெளியை (வயல்) மானியமாக வழங்கினார் இவ்வாலயத்தில் பணி புரிந்துவந்த கட்டாடியார் (கப்புகன்) கட்டாடி வெளியைவிதைத்துப் பயன் பெற்று வந்தார் இவ்வாறு இவர்கள் அனுபவித்து வரும் வேளையில் (கட்டாடி குடும்பம்) இவர்களது வாழ்க்கை நிலை நலிவுற்றதுடன் ஆலயமும் பொலி விழக்கத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து இக்கட்டாடிக் குடும்பத்தினர் பட்டி மேட்டுக்கு இராக் கொண்டு (இரவோடு இரவாக) தெய்வத்தையும் கொண்டு போய் கோயில் கட்டிக்குடியிருந்தனர் இதற்குப் பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜபக்ஷ முதலியார் கோவில்மடு அம்மன் ஆலயத்துக்கு அம்மன் தரிசனம் பண்ண வந்தபோது இவர்களைக் காணவில்லை, விசாரித்துப் பார்த்தபோது பட்டிமேட்டில் இருப்பதாக அறிந்தார் இதன் பின்னர் கோவில் மேடும்கட்டாடியா வெளியும் (வயல்) சிறுவனமும் என்றென்றும் காலந்தீவு (கரைதீவு) அம்மாளுக்கு உரியதென்று இராஜபக்ஷமுதலியார் தாரை வார்த்து கொடுத்தார்15. என்பதை அறியமுகின்றது.

கி.பி. 1752 தொடக்கம் 1781 வரை இராஜபக்ஷ முதலியாரின் நிர்வாகத்தின் கீழ் சிறப்புடன் மிளிர்ந்து வந்த நாடுகாட்டு பிரதேசம் பொலிவிழந்து போனதைத் தொடர்ந்து (கி.பி. 1782) இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சென்றனர். இதன் பயனாக மீண்டும் இப்பரந்த பிரதேசம் அடர்ந்த காடாக மாறியிருந்ததுடன் நடுக்காடு என்ற பெருடன் சம்மாந்துறை வன்னிமையின் பரிபாலனத்தின் கீழ் இருந்து வந்தது.

இந்நிலையில் கி.பி. 1766 இல் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கண்டி இராச்சியத்தின் கீழிருந்த கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தர் வசமாயின. ஒல்லாந்தர் மட்டக்களப்பை இரு மாகாணங்களாகப் பிரித்து நிர்வகித்து வந்தனர் இவர்களது ஆட்சி கி.பி. 1798 வரை நிலவியிருந்தது. இக்கால கட்டத்தில் (கி.பி. 1766 - 1798) ஒல்லாந்து அரசின் ஆளுநர்களாக மட்டக்களப்பின் வடபகுதிக்கு திரு. அறுமக்குட்டிபோடி என்பவரும் தென் பகுதிக்கு திரு. கந்தப்போடி என்பவரும் ஒல்லாந்த அரசால் நியமிக்கப்பட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1766 - 1798 வரையுள்ள ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பெயரளவில் அவர்களது அரசியல் அதிகாரம் நிலைத்திருந்த போதும் வன்னிச் சிற்றரசர்களது ஆட்சியே மட்டக்களாப்பில் நிலவியிருந்தது ஒல்லாந்த அரசின் பிரதி நிதிகளான திரு. அறுமக் குட்டிபோடி, திரு. கந்தப்போடி ஆகியோருக்கும் வன்னியர்களுக்கு மிடையில் நிலவியிருந்த இனரீதியிலான புரிந்துணர்வு ஒற்றுமை, நம்பிக்கை, என்பன இதற்குக் காரணிகளாக விருந்தன. மேலும் வன்னிச் சிற்றரசர்களும் ஒல்லாந்த ஆளுநர்களுமான நிலமைப் போடிகளும் சைவத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் பேணிக்காத்து வந்ததுடன் கண்டி மன்னனுடனும் நல்லுறவுகள் கொண்டிருந்தனர்16.

இவர்களது காலத்தில் (1766 - 1798) மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்தது ஒல்லாந்த ஆளுநர்களான. போடிகள் கண்ணகி வழிபாட்டை ஆதரித்து வந்ததுடன் கண்ணகி ஆலயங்களுக்கு உதவிகளும் வழங்கி வந்தனர். திரு. அறுமக்குட்டிபோடி செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு நன்கொடைகள் வழங்கியுள்ளார் இக் காலத்தில் பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் சிறப்புடன் விளங்கியிருந்தது. இக்காலத்தில் (கி.பி. 18 ஆம் நூற்றாண்டு) தோன்றிய ஊர்சுற்றும் காவியம் என்னும் இலக்கியம் பட்டிநகர் கண்ணகை அம்மனை இவ்வாறுபோற்றுகின்றது.

தருமபரி பூரணி தாயேயுன் சரணம்
சங்காரி யேசறுவ தற்பரி சரணம்
வரிசைபெறு மானாகர் புதல்வியே சரணம்
வாகுபெறு கோவலன் மனைவியே சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியதொரு மலையுச்சி நின்றாளே சரணம்
அடியேனை ஆதரித்திடுவாளே சரணம்
பெருமைசெறி பட்டிமா நகரிலுறை கின்ற
பேதைகண் ணகையேயுன் பாதமே சரணம்

(ஊர்சுற்றும் காவியம், பாடல் 17 : வரி 1 - 8)

இதேவேளை, இக்காலத்தில் அதாவது கி.பி பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதில் கரைதீவு கிராமத்தில் தோன்றிய உடுகுச்சிந்து என்ற கிராமிய இலக்கியம் அக்காலத்தில் மட்டக்களப்பின் தென்பகுதியில் கண்ணகி கோயில் கொண்டுள்ள இடமான தம்பிலுவில் பழம் பதியில் தொடங்கி வடக்கு நோக்கி கண்ணகிகோயில் கொண்டுள்ள எல்லா இடங்களையும் வாழ்த்திச் செல்கின்றது எழுபத்திரண்டு பாடல்களைக் கொண்ட உடுகுச்சிந்து இலக்கியத்தில் முறையே 35 ஆம், 69 ஆம், 70 ஆம், 71 ஆம் பாடல்கள் தம்பிலுவில் கண்ணகி பற்றிக் குறிப்பிடுகின்றன. இவற்றில் எழுபதாம் பாடலில்

"பக்தியொடு தொழுவோர்கள் இடது கலவருள் கொண்டு
பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமாநகரம்
மொய்த்த புகழ் வீரமுனை. கல்முனை கல்லாறு"

என்றவரிகள் (பாடல் 70 : வரி 1 - 3) வாயிலாக தம்பிலுவில் பட்டிநகர் ஆகிய இடங்களில் நெடுங்காலம் தொடக்கம் கண்ணகி வழிபாடு நிலவி வருவதையும் இந்த இடங்களிலிருந்தே கண்ணகி வழிபாடு வடக்கு நோக்கி எல்லா இடங்களையும் சென்றடைந்த தையும் உணரமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கனுக்குப் பின்னர் அவனது இளைய சகோதரனான இராசாதி இராசசிங்கன் (கி.பி. 1781 - 1798) கண்டி மன்னனானான் இராசாதி இராச சிங்கனின் முடிசூட்டு விழாவில் ஒல்லாந்த ஆளுநர்களான திரு அறுமக்குட்டி போடியும் திரு. கந்தப்போடியும், வன்னியர்களும் கலந்து கொண்டதுடன் கண்டி மன்னனுக்குப் பரிசில்களும் வழங்கியுள்ளனர். இராசாதி இராசசிங்கன் தனது ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளான். இவன் காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்துக்கும் விஜயம் செய்திருந்தான் இதனை இலக்கிய மொன்று கூறும்17.

இவனது காலத்தில், மட்டக்களப்பு பிராந்தியத்தில் கலைகள், இலக்கியம், என்பன செழித்திருந்தன. அக்கரைப்பற்று பிரதேசத்தில் "கடனாச்சியம்மன் காவியம்" கடல் நாச்சிமார்பள்ளு ஆகிய இலக்கியங்கள் உருவாகியிருந்தன. கடனாச்சியம்மன் காவியம் இராசாதி இராசசிங்கனை வாழ்த்துகின்றது.

"பார்வழி கண்டிமகா ராசாதி ராச
பார்த்திபன் வாழி, செங்கோல் முறைமைவாழி"
(பாடல் 15 : வரி 3 - 4)

இக்காலத்தில் கண்ணகி வழிபாடு செழித்திருந்த தம்பிலுவில் பகுதியில் தோன்றிய இலக்கியங்களிலொன்று "தம்பிலுவில் கண்ணகையம்மன் கும்மிப்பாடல்" இலக்கியமாகும்.

இக்கால கட்டத்தில் அதாவது கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் அக்கரைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தில் வாழ்ந்திருந்த புலவரொருவர் பட்டிநகர் கண்ணகி பேரில் இயற்றிய இலக்கியம் பட்டிநகர் கண்ணகை அம்மன் காவியம் என்பதாகும். இக்காலத்தில் இவ்வாலயம் சிறப்புடன் விளங்கியிருந்ததை இக்கிராமிய இலக்கியம் நன்கு தெளிவுறுத்தும் மேலும் பதினெட்டு பாடல்கள் கொண்ட இவ்விலக்கியத்தின் வாயிலாக இவ்வாலயத்தின் புகழ், கீர்த்தி ஆகியன நன்கு புலப்படும்.

கற்பனை வளமும், இலக்கியச்சுவையும் கொண்ட இச்சிற்றிலக்கியத்தை இயற்றிய புலவர் தமிழ்ப் புலமையும், சிலப்பதிகார காப்பிய அறிவும் கொண்டவராகக் காணப்படுகின்றார். சக்தி வழிபாட்டில் பெரு நம்பிக்கை கொண்டவராகக் காணப்படும் புலவர் பத்தினியான கண்ணகியே மாகாளி ஆனார் என்று தனது காவியத்தில் குறிப்பிடுகின்றார்.

“தேறியே தாச்சிகை பிடித்திழுத் தாயே
செம்பொற் சிலம்பதைத் தானெடுத் தாயே
மாறியே படியதனி லடித்துடைத்தாயே
மாகாளி யாயுருக் கொண்டு நின்றாயே.

(பாடல் 9 : வரி 3 - 6)

தமிழ்ச்சைவரான புலவர் பத்தினி கண்ணகியை அன்னை பார்வதியாகவும் ஓங்கார சக்தியாகவும் அதாவது எல்லாம் வல்ல மகா சக்தியாகவும் காண்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்தினி யம்மா வுனக்கோல மோலம்
பார்வதி யம்மா வுனக்கோல மோலம்
உத்தமி யம்மா வுனக்கோல மோலம்
ஓங்கார சக்தி வுனக்கோல மோலம்"

(பாடல் 13 : வரி 1 - 4)

இதேவேளை பட்டிநகர் கண்ணகை அம்மன் காவியத்தில் வட்டப்பாறையம்மன் குறிக்கப்படுகின்றார்.

"செம்பவள மாதேயுனக் கோலம் ஓலம்
திரு ஒற்றி யாளே யுனக் கோலம் ஓலம்"

(பாடல் 14 : வரி 5 - 6)

எனத் தமிழகத்தின் சென்னையை அடுத்த திரு ஒற்றியூர் கண்ணகி (வட்டப்பாறையம்மன்) குறிக்கப்படுகின்றார் ஆதலால் அக்காலத் தொடர்பு பட்டிநகர் கண்ணகி ஆலயத்துக்கு இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர்18.

சென்னை நகருக்கு வடபால் உள்ள திருவொற்றியூரில் அமைந்திருக்கும் சிவாலயத்தின் வடக்கு வீதியிலே ஒரு துர்க்கை கோயில் தனியாகவுள்ளது. இதில் உறையும் தேவி பத்தினிக் கண்ணகியின் மறுவடிவம் கொண்டவளாவாள். தமிழகத்தில் வழங்கும் "கோவலன் கதையில் கூறப்படும் வரலாறும் இதற்கு சான்று பகருகின்றது. காளி அம்சமாகவிருந்த பத்தினி தேவி (கண்ணகி) திருவொற்றியூருக்கு வந்து, வட்டபுரி அம்மன் ஆகிவிழாக் கொண்டிருந்தார் என்பது அந்நூற் கதையாகும் மதுரையை எரித்த நினைவாக பொய்ப் பந்தல் ஒன்று அமைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை எரியூட்டுவதும் இக்கோவில் கண்ணகிக்கு உரித்தாக்குகின்றது19.

புகழேந்தியரால் பாடப்பட்ட "பெரிய எழுத்து, கோவலன் கதை" என்ற கிராமிய இலக்கியம் எண்பத்தைந்து உபதலைப் புக்களில் அமைந்துள்ளது சிலப்பதிகார கதையைத் தழுவி உருவாக்கப்பட்ட இந்நூலில் காளியே கண்ணகியாகப் பிறக்கின்றாள். தெய்வமாகப் பிறக்கும் இவள் மானிடம் பெண்ணுக்குரிய குணாம்சங்களைப் பெற்று வாழ்வதுடன் இறுதியில் தெய்வமாகவே போற்றப்படும் சிறப்பினைப் பெற்று உயர்ந்துவிடுகின்ற தன்மையை இந்நூல் எடுத்தியம்பியுள்ளது. மேலும் கண்ணகி சைவசமய மரபிற்குரிய பெண் தெய்வமாக இதில் போற்றப்படும் தகுதியினைப் பெறுகின்றாள்.

கண்ணகி கோவலனுக்கு மாதவியுடன் சேர்ந்து ஈமச் சடங்குகள் செய்த பின்பு கண்ணகி வேம்பூர் தாண்டி வந்து மலையாளத் தெல்லையிலே வந்து வாழ்ந்து பகவதி அம்மன் எனப் பெயர் பெற்று பின் திருவொற்றியூருக்கு வந்தாள் இங்கே தங்கி விடுகின்றார்20. இவ்வாறு கோவலன் கதை குறிப்பிடும் இதேவேளை பட்டிநகர் கண்ணகை அம்மன் காவியத்தை இயற்றிய புலவருக்கு கோவலன் கதை பற்றித் தெரிந்திருக்கலாம் அல்லது திருவொற்றியூர் வட்டபுரி நாச்சியம்மனைத் தரிசித்தவராக விருக்கலாம் என்று எண்ண இடமுண்டு இதனை,

"கம்பைதிரு வொற்றிநகர் பட்டிநக ரெங்குமுறை
கண்ணகை திருப்பதம் வாழ்கவா ழியதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கண்ணகை அம்மன் காவிய வரிகள் (பாடல் *18 :* வரி *7 - 8)* உணர்த்தும்

மேலும் கண்ணகியின் பிறப்பு, கோவலன் கண்ணகி திருமணம், மதுரை நகரில் கோவலன் சிலம்பு விற்றல் கோவலன், கொலையுண்டமை, மதுரை நகரை கண்ணகி எரித்தமை என்பன பற்றியெல்லாம் கூறும் இவ்விலக்கியம், கண்ணகி ஆதியில் பட்டிநகர், வந்து கோயில் கொண்டதாகவும் அதன் பின்பே ஏனைய இடங்களில் கோயில் கொண்டதாகவும் குறிப்பிடுகின்றது. இதன் வாயிலாக இக்காவியத்தை இயற்றிய புலவர் இவ்வம்மன் மீது கொண்டிருந்த, பக்தியும் பெருநம்பிக்கையும் புலப்படுகின்றது.

மேலும், துர்க்கை அம்மனே பட்டிநகரில் கண்ணகை அம்மனாக வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார் என்பதும் புலவரின் பெரு நம்பிக்கையாகவுள்ளது. இதன் காரணமாகவே பட்டிநகர் கண்ணகியைத் திருவொற்றியூர் தேவி துர்க்கையாகப் புலவர் தன் மனதில் உருவகித்து நம்பிக்கையுடன் கண்ணகியின் திருப்பாதம் போற்றுகின்றார்.

இதேவேளை இவ்வத்தியாயத்தில் இதுவரை குறிப்பிட்டுள்ள வற்றில் சில விடயங்கள் பற்றி வரலாற்று ரீதியாக மேலும் தெளிவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் எனலாம்.

கண்டி மன்னன் விஜயராச சிங்கன் காலத்தில் *(1739 - 1747)* உருவான பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக் காவியத்தில் இவ்வாலயத்தின் அருகாய் அமைந்திருந்த "மழவராயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (பாடல் 10 : வரி 7 - 8) ஆதலால் மழவராயன் குளம், மழவராயன்வெளி (வயல்) ஆகியன இவ்வாலயத்துக்கு உரித்தானவைகளாக இருந்து வந்துள்ளதை, அறியமுடிகின்றது. ஸ்ரீ விஜயராச சிங்கன் காலத்தில் மட்டக்களப்பை ஏழு வன்னிய இராசாக்கள் ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். இவர்களையே “நீதி செறி பண்டார வன்னியர்கள்” என்று பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக்காவியம் (பாடல் 11 : வரி 3 - 4) குறிப்பிடுகின்றது21.

இதேவேளை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட நில அளவைச் சான்று மூலமாக 58513 - 31.12.1860 இவ்வாலயத்துக்கு 138 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது இச்சாசனத்தில் “மழவராயன் குளம்” என்றே ஆலயக்குளம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை இதற்கு முற்பட்ட காலத்திலேயே இவ்வாலயத்துக்கு உரித்தான இக்குளம், “மழவராயன்குளம்” என்ற பெயரில் விளங்கி வந்ததை பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக்காவியம் உணர்த்துகின்றது.

ஆதலால், இதற்கு முற்பட்ட காலத்திலேயே அதாவது ஸ்ரீவிஜயராச சிங்கன் காலத்துக்கு முன்பே இவ்வாலயத்துக்கு நிலமானியங்கள் வழங்கப்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது வரலாற்றாய்வுகளும் இதனை உறுதி செய்கின்றன.

கண்டி மன்னர் காலத்தில் இவ்வாலயத்துக்கு நன்கொடையாக நெற்காணி (குளம் உள்ளிட்ட)கள் வழங்கப்பட்டுள்ளதாக வரலாற்றுச் செய்தி உண்டு இதனை உறுதி செய்வது போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை (1956, 57கள்) இவ்வாலயத்தில் செப்பேட்டுகூடு ஒன்று இருந்து வந்துள்ளது இதில் அடங்கியிருந்த செப்பேடானது கண்டி மன்னன் ஒருவனால் இவ்வாலயத்திற்கு நெற்காணி மானியமாக வழங்கப்பட்டதைப் குறிக்கும் உரிமைச் சாசனமாகும் தான் அறிந்தவரை வெற்றுச் செப்பேடுகூடு மட்டுமே இவ்வாலயத்தில் இருந்து வந்ததாகவும். பின்னர் அதுவும் காணாமல் போனதாகவும் 1988 ஆம் ஆண்டில் முன்னாள் வண்ணக்காரன அமரர் திரு. க. குருநாத பிள்ளையவர்கள் என்னிடம் குறிப்பிட்டார். இதனை அக்காலத்தில் இவரது சகோதாரரான திரு. க. தங்கவேல் ஆசிரியரும் உறுதிசெய்தமை குறிப்பிடத்தக்கது.

கண்டி மன்னர்களான இரண்டாம் இராசசிங்கன் (1635 - 1687) வீரநரேந்திரசிங்கன் (1706 - 1739) என்போர் இப்பிரதேசத்துடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்ததுடன் அக்காலத்தில் மட்டக்களப்பின் தென்பிரதேசத்தில் செழித்திருந்த கண்ணகி வழிபாட்டிலும் அக்கறை கொண்டிருந்ததை இலக்கியச் சான்றுகள் உணர்த்தும் ஆதலால் இவர்களில் ஒருவரால் இவ்வாலய வளர்ச்சி கருதி நிலமானியம் வழங்கப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு இந்நிலையில் இதற்குப் பிற்பட்ட காலத்தில் அதாவது வீரநரேந்திர சிங்கனுக்குப்பின் கண்டி மன்னனான விஜய இராசசிங்கன் காலத்தில் ஆலயமருகாயிருந்த குளம் மழவராயன் குளம் என்றே வழங்கி வந்துள்ளது.

இதேவேளை வரலாற்றாய்வுகள் மூலமாக நோக்குமிடத்து கண்டி மன்னர் காலத்துக்கு முன்பே மட்டக்களப்பில் வன்னியர் என்ற தமிழ்ச் சிற்றரசர் ஆட்சி உன்னத நிலையிலிருந்த காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்துக்கு நிலமானியம் வழங்கப் பட்டிருக்கலாம் என்று கருதமுடியும். ஏறாவூர், பளுகாமம், சம்மாந்துறை, சிங்காரபுரி (அட்டப்பளம்) பாணகை, ஆகிய இடங்களிலிருந்து சுதந்திரமுள்ள சிற்றரசர்களாக மட்டக்களப்பை வன்னியர்கள் ஆட்சி புரிந்து வந்த அக்காலத்தில் (கி.பி. 1470 - 1600) பனங்காடு ஐயனார் ஆலய வளாச்சியைக் கருத்தில் கொண்டு அவ்வேளை, இப்பிரதேசத்தில் அதிகாரம் செலுத்தி வந்த சிங்காரபுரி வன்னியராசா மானியமாக 49 ஏக்கர் 2 றூட் 2 பேர்ச் நிலம் வழங்கியுள்ளார்22.

இவ்வாறு மானியமாக வழங்கிய நிலப்பகுதியில் வயல்காணி குளம், ஆலய வளாகம் என்பன அடங்கும் இதனைத் தொடர்ந்து வயல் நிலம் ஐயனார் வெளி என்றும், குளம் ஐயனார் குளம் என்றும் பெயர்கள் வழங்கி வந்தன இன்றும் வழங்குகின்றன. ஆதலால். அக்காலத்தில் (கி.பி. 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டு) புகழ்பெற்று விளங்கியிருந்த பட்டிநகர் கண்ணகை அம்மன். ஆலய வளர்ச்சி கருதி வன்னியராசாக்களால் நிலமானியம் வழங்கப் பட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு இக்காலகட்டத்தில் (1470 - 1600) வன்னித் தமிழ் சிற்றரசர்கள் ஆட்சியில் அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பில் தமிழும் சைவமும், செழித்திருந்ததுடன் மட்டக்களப்பின் தென்பிரதேசத்தில் தம்பிலுவில் பாணகை, பட்டிநகர், வீரமுனை காரைதீவு முதலான இடங்களில் கண்ணகி வழிபாடும் (ஆலயங்கள்) உன்னத நிலையிலுலிருந்தமை குறிப்பிடத்தக்கது இவ்வாறான தொரு சமூக, சமய, அரசியல் சூழலில் பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயமும் சிறப்புடன் விளங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்திலேயே இவ்வாலயத்துக்கு மானியமாக நெற்காணி குளம் உள்ளிட்ட நிலமானியம் வழங்கப்பட்டதாக ஆவணச்சான்று (இல. 58523 - 31.12.1860) தெளிவுறுத்து கின்றது இதன் பின்னணி பற்றிய மரபுக் கதையொன்றும் நிலவி வந்துள்ளது. இதன் மூலமாக ஆங்கிலேயர் காலத்திலேயே நெற்காணி குளம், உள்ளிட்ட நிலம் இவ்வாலயத்துக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுகின்றது. இவைபற்றி பின்னர் விரிவாக நோக்கலாம்.

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலத்தில் சிறிது காலம் இவ்வாலயத்தில் சிங்கள கட்டாடி சிங்களப்பத்ததி கொண்டு பூசை செய்தமை பற்றி பரவணிக கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இதேவேளை தமிழ்பத்ததி (அம்மன் பத்ததி) முறையிலும் அம்மன் சடங்கு வழிபாடுகள் இடம் பெற்று வந்துள்ளன. மேற்படி நாடுகாடு பரவணி கல்வெட்டு குறிப்புக்களின்படி கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் (கி.பி. 1750 - 1770) ராஜபக்ஷ முதலியார் என்ற தனிப்பட்டவரால் நிறுவப்பட்ட கோவில்மேடு (இறக்காமம் அருகில்) ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட அம்மன் விக்கிரகமே சிறிது காலம் சிங்கள பத்ததி முறையில் பூசைகள் பெற்று வந்துள்ளது.

அக்காலத்தில், பாண்டிய நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு கோவில்மேடு அம்மன் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்ட பாண்டிய கலையம்சம் நிரப்பப் பெற்ற அழகிய அம்மன் விக்கிரகமே இன்று மூலவராகவுள்ள பட்டி நகர் கண்ணகையாவார் என்பது ஆய்வாளர்கள் சிலரது கருத்தாகும் 23.1989 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் அம்மன் பத்ததியொன்று காணக்கிடைத்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேட்டுப் பிரதியானது சின்னத்தம்பி மகன் சிவலைக்குருக்கள் என்பவரால் எழுதப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வேட்டுப் பிரதியானது சிறிதுகாலம் சிங்களபத்ததியில் பூசை இடம் பெற்ற காலத்தில் (கீர்த்திஸ்ரீஇராச சிங்கன் காலம்) இவ்வாலயத்தில் நிலவியிருந்த அம்மன் பத்ததி ஏட்டுச் சுவடியின் பிரதியாகும்.

**குறிப்புக்கள்**

1) மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழா மலர் 1993 - கட்டுரை. டி. சிவராம் 16 ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பு போர்த்துகீச ஆவணங்கள் போடிகல்வெட்டு பற்றிய ஒப்பீடு - பக்கம் 13

2) மட்டக்களப்பு குகன் குலமுற்குகர் வரலாறும், மரபுகளும் - பக்கம் 35 ஞா, சிவசன்முகம் - 1999

3) இலங்கையின் சுருக்க வரலாறு பக்கம் 100, எச்.டபிள்யு. கொடிறின்றன் - 1960
   - யாழ்ப்பாண சரித்திரம் பக்கம் 163 முதலியார் செ. இராசநாயகம் - 1933

4) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்கம் 100 நா. நவநாயக மூர்த்தி - 2002

5) இலங்கை வரலாறு பாகம் (II) - பக்கம் 64 பேராசிரியர் செ. கிருஷ்ணராசா - 2005

6) மட்டக்களப்பு மான்மியம் - பக்கம் 61, 62 பதிப்பாசிரியர் எப். எக்ஸி நடராசா - 1962

7) ஈழநாட்டுத் தமிழ்ச்சாசானங்கள் கிழக்கிலங்கைச் சாசனங்கள் - கட்டுரை கா. இந்திரபாலா சிந்தனை மலர் 2 : இதழ் : 2.3 - 1963



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) இலங்கை சரித்திரம் பாகம் (I) - பக்கம் 59, 60 எஸ்.எவ்.டி. சில்வா - 1952

9) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்கம் 43 நா. நவநாயக மூர்த்தி - 1999

10) "நீதிசெறி கண்டி மகாராச சிங்கன் வாழி நீலமயிலேறு கதிர்வேல் முருகன் வாழி (மழைக்காவியம், பாடல் 15 : வரி 3 - 4)

11) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்கம் 89, 90 நா. நவநாயக மூர்த்தி - 1999

- சந்தனப்பூ யாசலனைச் செந்தமிழினால் வழுத்தத் தம்பிலுவிற் கண்ணகைத் தாய் தஞ்ச நமக்கே (நரேந்திர சிங்கன் பள்ளு பாடல் 3 : வரி 3 - 4)
- பார்வாழி தென் திருக்கோவில் குமரன்வாழி கண்டி பார்த்திபன் நரேந்திரசிங்க மூர்த்தியும் வாழி ஊர் வாழி தம்பிலுவில் ஊர்வாழ்க வந்தருளும் பத்தினிக் கண்ணகை நிடுழி வாழ்கவே. (கண்ணகை அம்மன் பள்ளு பாடல்)
- "காம்பழகும் தாதகியின் பூப்பழகு மாலைமார்பன் கண்டி வாழ் நரேந்திரசிங்க காவலன் மீது (நரேந்திர சிங்கன் பள்ளு. பாடல் 2 : வரி 1 - 2)
- "மருவாழி புவியிலுள்ள மானிடர்கள் வாழி வரு ராசசிங்க நரேந்திரனும் வாழி (செட்டிபாளையைக் கண்ணகை அம்மன் காவியம் பாடல் 12 வரி 5 - 6)
- "வாழ்வுபெறு பண்டார வன்னியர்கள் வாழி வரிசை பெறு நரசிங்க ராசனும் வாழி (கல்லாற்று மாரியம்மன் காவியம் பாடல் 11 : வரி 5 - 6)

12) நேர்காணல் (தகவல்) திரு. கந்தையா சின்னத்தம்பி வயது 75, 13.05.2014 பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலய ஆலோசனைசபை உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) புதுமுறைச்சரித்திரம் - பக்கம் 129, 130 வி.எஸ்ராம். ரி.வி.கே. மூர்த்தி 1961

14) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்கம் 106 நா. நவநாயக மூர்த்தி - 2002

15) பரவணிக் கல்வெட்டு (தகவல்) வாசகம்

- பரவணிக் கல்வெட்டில் கோவில்மேடு என்று குறிக்கப்படும் இடம் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு வரை நகர நாகரீகம் நிலவியிருந்த இடமாகவும். பண்டைய ஈழவரலாற்றில் முக்கியத்துவம் வெற்றிருந்த இடங்களிலொன்றாக விளங்கி வந்த கிரிந்திகாமம் நகரப் பகுதியை சார்ந்த இடமாகும். கி.பி. பத்தாம் பதினொராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் சைவமும், தமிழும், செழித்திருந்த கிரிந்திகாமத்தில் சிவாலயம் பிள்ளையார் ஆலயம், பிராமணர் குடியிருப்பு (பிரம்மதேயம்) அமைந்திருந்த பகுதியே கி.பி. 1750, 51களில் கோவில்மேடு என்ற பெயருடன் விளங்கியிருந்தது.

16) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்கம் 108, 109 நா. நவநாயக மூர்த்தி - 2002

17) மட்டக்களப்பு சைவக் கோவில்கள் - பக்கம் 103 பண்டிதர் வி.சி. கந்தையா - 1983

18) திரு ஒற்றியூர் கண்ணகி சோழராட்சிக் காலத்தில் காளிவழி பாடாக மாற்றமுற்றதாக கருதப்படுகின்றது.
(மட்டக்களப்பு மாநிலத்தில் கண்ணகி வழிபாடு - ஒரு சிறப்புப் பார்வை, கட்டுரை, வெல்லவூர் கோபால் - தாந்தாமலை மாட்சி - தர்ந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய மலைப் பிள்ளையார் கோவில் குடமுழுக்கு மலர் - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) தமிழகத்தில் கண்ணகி வழிபாடு - கட்டுரை "ஆய்வரங்கம்" நா. நவநாயகமூர்த்தி - கண்ணகி கலை இலக்கிய விழா - 2013

20) "பெரிய எழுத்து கோவலன் கதை என்னும் இலக்கிய நூலில் கண்ணகி ஆய்வு கட்டுரை "றூபிவலன்ரீனா முதுநிலை விரிவுரையாளர் கூடல் - பரல் 2 - 2013
   - இன்றளவும் திருவொற்றியூர் சிவன் கோவிலுள்ள துர்க்கை அம்மனை கண்ணகித் தெய்வமாகவே கருதி விழா எடுத்திருக்கின்றனர் (மயூரமங்கலம் பக்கம் 146 கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி கும்பாபிஷேக மலர் - 2000)

21) கிழக்கிலங்கையில் பண்டாரவ்னியர்கள் என்ற தமிழ் சிற்றரசர்கள் ஆட்சி 1796 இல் ஒழிக்கப்பட்டது (கி. கணபதிப்பிள்ளை) வன்னிமை என்ற சம்பளம் பெறும் உயர் பதவிகள் மட்டக்களப்பில் 1834 ஆங்கிலேயர் காலத்தில் தோற்றுவிக்கப் பட்டவையாகும்.

22) "இலங்கை வரலாற்றில் பனங்காடும் பழைய ஐயனார் வழிபாடும்" - கட்டுரை "ஏர்முனை கலாசார விழா மலர் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம். நா. நவநாயகமூர்த்தி - 1999, 2000

23) மட்டக்களப்பு தமிழகத்தில் கண்ணகி வழிபாட்டு மரபுகள் - கட்டுரை வ. சிவசுப்ரமணியம் சிறப்பு மலர் இரண்டாவது உலக இந்து மகாநாடு - 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆலய வளர்ச்சியும் இலக்கியமும் (கி.பி. 1800 - 1900 வரை)

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி படிப்படியாக வேரூன்றி நிலை பெற்றிருந்த இக்காலத்தில் பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயம் பெருவளர்ச்சி கண்டதுடன். ஆங்கிலேயரது ஆதரவையும், நன்மதிப்பையும் பெற்று வந்துள்ளதை அறிய முடிகின்றது. மேலும் பிரதேச, மாவட்ட ரீதியிலும், தேசிய ரீதியிலும் இவ்வாலயம் புகழ்பெற்று விளங்கியிருந்தது இதனை இலக்கியத் தொல்லியல் சான்றுகள், வரலாற்றாய்வுகள் உணர்த்தும். இவ்வாலயத்தை மையமாகக் கொண்டு இலக்கியங்களும் உருவாகி நிலவி வந்துள்ளன. இவற்றில் பொற்புறாவந்த காவியம் என்ற இலக்கியம் குறிப்பிடத்தக்கது பல வரலாற்றுண்மைகளை இதன் வாயிலாக அறியமுடிகின்றது. இவை பற்றி இனிவிரிவாக நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1795 ஆம் ஆண்டு மட்டக்களப்பை ஆங்கிலேயேர் கைப்பற்றித் தங்கள் அதிகாரத்தை இங்கு நிலை நிறுத்தியிருந்த போதும் இவர்கள் தங்கள் முழுமையான ஆட்சியை இப்பிராந்தியத்தில் நிலை நிறுத்தவில்லை தொடர்ந்தும் ஒல்லாந்தரது ஆட்சி முறையே இங்கு நிலவியிருந்தது அதாவது போடிமார் நிர்வாக முறையே இங்கு நிலவியிருந்தது 1820 ஆம் ஆண்டு வரை தமிழர்களான போடிகளை வைத்தே ஆங்கிலேயர் திறைவரி வாங்கி வந்தனர் வன்னியராசாக்கள் வழிவந்தவர்களே ஆங்கிலேய ஆட்சியின் தொடக்க காலத்தில் (கி.பி. 1820 வரை) சம்பளம் பெறும் நிலமைப் போடிகளாகக் கடமை புரிந்து வந்தனர்1.

இலங்கையில் "எட்வேட்பாண்ஸ்" என்பவர் தேசாதிபதியாக விருந்த காலத்தில் (கி.பி. 1824, 25 களில்) நீதி பரிபாலனம் உள்ளிட்ட முறையானதொரு நிர்வாக ஆட்சி மட்டக்களப்பில் நிலவியிருந்தது மட்டக்களப்பு அரசாங்க அதிபராக "ஜோசப்பிரைஸ் (JOSEPHPRICE) என்பவர் கடமை புரிந்து வந்தார் கி.பி. 1833 இல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட கோல்புறாக் கமரன் சிபார்சுகள் ஏற்கப்பட்டு இலங்கை முழுவதும் ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து ஒழுங்கானதொரு சிவில் நிர்வாக ஆட்சிமுறை மட்டக்களப்பில் தோற்றம் பெற்றது வரையறுக்கப்பட்ட மாகாணப் பிரிவுகள் அமைந்திருந்தன.

ஆங்கிலேயர், பரம்பரைவன்னியர் என்ற பதவிக்குப் பதிலாக சம்பளம் பெறும் வன்னிமை என்ற பதவிகளை வழங்கினர் இதனைத் தொடர்ந்து, ஆங்கிலேயரது ஆட்சி மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதிலும் பரவியிருந்தது இவ்வேளை, களியோடை, தொடக்கம் சங்கமன் கண்டிவரை பரந்திருந்த அக்கரைப்பற்று மாகாணத்தில் தமிழும் சைவமும் செழித்திருந்தன2. அம்மன் வழிபாடும் சிறந்திருந்தது மாரி, காளி, மீனாட்சி, அம்மன் வழிபாடுகளுடன் தாய்த் தெய்வவழிபாட்டு அம்சங்களிலொன்றான கண்ணகையம்மன் வழிபாடும் (பட்டிநகர், தம்பிலுவில்) செழிப்புடன் விளங்கியிருந்தது.

சேர் ஹென்றிவார்ட் (1855 - 1860) என்ற ஆங்கிலேய தேசாதிபதி காலத்தில் நீர்ப்பாசனவேலைத்திட்டம் பாரிய முறைப்படி மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டது புனரமைப்பு, பராமரிப்பு வேலைகளுக்கு விசேட உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டனர். மட்டக்களப்பிலிருந்து கல்முனை அக்கரைப்பற்று, திருக்கோவில் வரையுள்ள நிலங்கள் வேளாண்மை நிலங்களாக மாற்றப்பட்டன3. இவ்வேளை இவ்வாலயத்துக்கு ஆங்கிலேய அரசால் வயல் காணி மேட்டு நிலம், குளம் உள்ளிட்ட நில உத்தரவுப் பத்திரம் (நில அளவை சான்று) வழங்கப்பட்டது.

ஏற்கனவே இவ்வாலயத்துக்கு உரித்தானவைகளாக விருந்து வந்த மழவராயன்வெளி என்ற வயல் காணி மழவராயன் குளம் ஆலயவளாகம் உள்ளிட்ட நிலப்பிரதேசம் நில அளவைப்படச் சான்றுடன் வழங்கப்பட்டது. இவ்வாலயத்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்டவரும் இவ்வாலயத்தைத் தோற்றுவித்த மழவராயன் குடியைச் சேர்ந்தவரும். இக்காலத்தில் குடிமுதல்வராக விளங்கியவருமான திரு கதிர்வேலாப்போடி நல்லதம்பி கப்புகன் பெயரில் இக்காணி (நிலம்) உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதைய ஆங்கில அரசால் (இல. 58513 - 31.12.1860) வழங்கப்பட்டது இதனை மழவராயன்குடியினர் சார்பில் கப்புகனாரான திரு. நல்லதம்பியவர்கள் பெற்றுக் கொண்டார் எனலாம்.

இதேவேளை இவ்வாலயத்துக்கு ஆங்கிலேயரால் நெற்காணிகள் வழங்கப்பட்ட பின்னணிபற்றி மரபுக்கதையொன்றும் நிலவிவருகின்றது இது பற்றி நோக்கலாம் இவ்வாலயத்தில் இரண்டு பொன்னிறப் புறாக்கள் வசித்து வந்தன என்றும் அவை அபிஷேக கலயத்தில் தானாகவே விழுந்து அபிஷேகம் செய்யும் என்றும் சில காலத்திற்கு முன்பு நம்பப்பட்டு வந்தது.

அக்காலத்தில் ஒரு ஆங்கிலேயன் இதனை அறிய வேண்டி குதிரையில் வந்து ஆலயத்தைத் திறந்து காட்ட வேண்டும் என்று கப்புகனாரைப் பணித்தான். (அக்காலத்தில் கப்புகனார் ஆலயத்தின் அருகேயுள்ள கவடா என்னுமிடத்தில் வாழ்ந்து வருவது வழக்கம்) காலமில்லாக் காலத்தில் அதாவது சடங்கு குளிர்த்தி இடம்பெறும் காலம் தவிர்ந்த வேறு காலத்தில் ஆலயத்தைத் திறக்க முடியாது என்று கப்புகனார் மறுத்தார். ஆலயத்தைத் திறக்கா விட்டால் ஆலயத்தை இடித்து விடுவதாக ஆங்கிலேயன் கூற அவர் பூசைச் சாமான் வேண்டுமென ஆங்கிலேயன் கட்டளைப்படி அவைகளும் வந்தன.

கப்புகனார் அபிஷேகம் சேர்த்து கலயத்தில் வைக்க உண்மையாகவே புறாக்கள் இரண்டும் சிறகடித்துப் பறந்து வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலயத்தில் விழுந்து நீராடிய சத்தத்தைக் கேட்ட ஆங்கிலேயன் ஆச்சரியமடைந்து எட்டிப்பார்த்த போது ஒளி வெள்ளத்தினால் அவன் கண்கள் குருடாகி மயங்கி விழுந்தான் பின்பு அம்மன் அருளினால் சுகம் பெற்றான். (திரு. க. குருநாதபிள்ளை ஜே.பி - சக்தி வழிபாடு நூல் 1975) இதனைத் தொடர்ந்து ஆங்கிலேயன் ஆலயத்தின் முன்னால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையுள்ள நிலங்களை ஆலயத்துக்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்ததாகவும் இதன் அடிப்படையில் மேற்படி நிலங்கள் கி.பி. 1860 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் சட்ட பூர்வமாக கொடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை மேற்படி காணிகள் (வயல், குளம், உள்ளிட்ட) இவ்வாலயத்துக்கு உரியனவாகவிருந்து வந்துள்ளன. ஆதலால் மரபுக்கதையில் பொதிந்துள்ள வரலாற்று நிகழ்வு பற்றியும், இதன் உண்மைத் தன்மை பற்றியும் நோக்க வேண்டியது அவசியமெனலாம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1856இல் ஒன்பதாம் இலக்க நீர்பாச்சல் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போதைய கிழக்கு மாகாண அரசாங்க அதிபராகவிருந்த ஐ.டபிள்யூபேர்ச் (I.W. Birch) என்பவர் கவர்னர் ஹென்றிவார்ட் என்பவருக்கு விவசாய அபிவிருத்தி தொடர்பான விரிவான அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தார். இவர்களது காத்திரமான முயற்சிகளினால் மட்டக்களப்பில் பண்டைய குளங்களும். புதியனவும் நிர்மாணிக்கப்பட்டன. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட பண்டைய குளங்களுள் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சாகாமக்குளமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகும். இக்குளம் கி.பி. 1856 தொடக்கம் 1860 வரையுள்ள காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது4.

சாகாமக் குளம் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வந்த அக்காலத்தில் (கி.பி. 1856 - 1860) குள நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்ய வேண்டி ஆங்கிலேய உத்தியோகத்தர் ஒருவர் இப்பகுதிக்கு வருகை தந்தார். இவர் அம்மன் ஆலய முன்பாகவுள்ள பாதையூடாக வந்து கொண்டிருந்த சமயம் அக்காலத்தில் சிறியதொரு மடாலயமாகவிருந்த அம்மன் ஆலயத்தை கண்ணுற்றுத் தான் பிரயாணம் செய்து வந்த குதிரையை நிறுத்தி ஆலயம் பற்றி தனக்கு வழித்துணையாக வந்த இப்பிரதேசத்தை சேர்ந்த ஒருவரிடம் கேட்டார். இங்கு குடியிருக்கும் அம்மனின் பேரருள் பற்றி அவர் கூறியதைக் கேட்டறிந்த ஆங்கிலேயன் ஆலயம் சென்று பூட்டப்பட்டிருந்த ஆலயத்தை திறந்து காண்பிக்குமாறு கப்புகனாரிடம் கேட்டான்.

வருடத்துக்கொருதடவை சடங்கு காலத்தில் மட்டுமே ஆலயம் திறந்திருக்கப்படுவது மரபாகும் என்று கப்புகனார் கூறஇல்லை உடனேஆலயத்தைத் திறந்து காட்டுமாறு ஆங்கிலேயன் கப்புகனாரை வற்புறுத்தினான். இதனையடுத்து அம்மனை மனதில் நினைத்து கப்புகனார் ஆலயத்தைத் திறந்து காட்டியதுடன் அங்கிருந்த பூஜைக்குரிய புனிதப் பொருட்களான காற்சிலம்புகள் அம்மானைக்காய்கள் ஆகியனவற்றைக் காண்பித்தவேளை இவற்றுடன் அடங்கியிருந்த ஒளிபொருந்திய தெய்வீக அம்சம் கொண்ட "பொற்புறாசின்னங்களை (இரண்டு பொற்புறா) கண்டமாத்திரத்திலேயே ஆங்கிலேயன் மூர்ச்சையுற்று வீழ்ந்தான்5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கண்ட ஆலயக்கப்புகனார் அம்மனை மன்றாடித் தீர்த்தம் தெளித்த ஆங்கிலேயனின் மூர்ச்சையைத் தெளிவித்தார்.

சுயநினைவு பெற்ற ஆங்கிலேயன் அம்மனின் பேரருளினை தனது அனுபவ வாயிலாக உணர்ந்தவனாக அம்மனின் ஆலயமுன்னால் கண்ணுக் கெட்டிய தூரம் வரையுள்ள நிலங்கள் அனைத்தும் அம்மன் ஆலயத்துக்குச் சட்டபூர்வமாக வழங்க ஆவன செய்வதாகக் கூறிச் சென்றான். கி.பி. 1857க்கும் 1859க்கும் மிடைப்பட்ட காலத்திலேயே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது. 6 இதன் பின்னர் 1860 ஆம் ஆண்டில் சாகாமக் குளம் புனரமைப்பு பணிகள் நிறைவுற்றதைத் தொடர்ந்து ஆங்கிலேய உத்தியோகத் தரின் காத்திரமான முயற்சியின் பயனாகவே ஏற்கனவே மரபு வழியாக இவ்வாலயத்துக்கு உரித்தானதாகவிருந்து வந்த மழவராயன் வெளி, மழவராயன் குளம் உள்ளிட்ட நிலப்பிரதேசம் (நில அளவைப் படம் இல. 53813 - 31.12.1860) ஆங்கிலேய அரசினால் வழங்கப்பட்டது என அறிய முடிகின்றது.

1861ம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு ஐம்பது ரூபாய் வீதம் ஒருவர் எத்தனை ஏக்கரையும் வாங்கலாம் என்றும் இப்பணத்தை உடனடியாகவும், தவணை முறையிலும் கட்டலாம் என்றும் அறிவிக்கப்பட்டது இதனை நடைமுறைப்படுத்திய பெருமை அவ்வேளை அரச அதிபராகவிருந்த ஐ.டபிள்யு. பேர்ச் என்பவரையேசாரும் 1804 இல் ஆங்கிலேயருக் கெதிராக தமிழர்களான போடிகள் (நிலச்சுவாந்தர்) மேற்கொண்ட சண்டையைக் காரணியாகக் கொண்டு அவர்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட நிலங்கள் (நெற்காணிகள் உள்ளிட்ட) கி.பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1856 ஆம் ஆண்டு வரை பிரித்தானிய அரசர்க்குரியனவாக விருந்து வந்தன7.

மட்டக்களப்பு தொடக்கம் பொத்துவில் வரையிருந்த இந்நிலங்களை குறிப்பாக வயற்காணிகளை 1857 ஆம் ஆண்டின் நிர்வாகத் தீர்மானத்தின்படி (27.02.1857) ஆங்கிலேயர் 1861 இல் குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர். இக்காலத்தில் அக்கரைப்பற்று என்ற மாகாணப்பிரிவுக்கு (வரையறுக்கப்பட்ட) வன்னியனாக சின்னத்தம்பிசெட்டி தம்பையர் வன்னியன் என்பவர் கடமை புரிந்து வந்தார். இவருக்கு கீழ் உடையராக (உயர்பதவி) மானாப்போடி முண்டாப்போடி என்பவர் கடமை புரிந்து வந்தார். இவ்வேளை அக்கரைப்பற்று பிரதேசத்தில் தமிழும் சைவமும், செழித்திருந்தன இலக்கியங்களும் உருவாகி நிலவிவந்தன. மீனோடைக்கட்டு, பாலமுனை, கருங்கொடித்தீவு, கோளாவில் பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில் முதலான பழந்தமிழ்க் கிராமங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன.

இக்காலத்தில் அக்கரைப்பற்றிலிருந்து திருக்கோவில் பிரதேசம் செல்ல இருபாதைகள் நிலவி வந்தன இவற்றில் ஒன்று பனங்காடு உப்போடைப்பிட்டியிலிருந்து தம்பட்டையைச் சென்றடைந்து அங்கிருந்து திருக்கோவில் (தம்பிலுவில் உள்ளிட்ட) பிரதேசம் சென்றடைந்தனர் இப்பாதையூடாகச் சில காலங்களில் பயணம் செய்ய முடியாதிருந்தது, அடுத்த பாதையானது மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாகவும் மிகவும் பழைய பாதையாகவும் விளங்கியிருந்தது வெளியிடங்களிலிருந்து வரும் பெரும் பாலானோர் இப்பாதையூடாகவே திருக்கோவில் பிரதேசத்துக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் ஆலயத்துக்கும் சென்று வந்தனர். இதனைச்செவிவழிச் செய்திகள் உணர்த்துகின்றனர்.

அக்கரைப்பற்றிலிருந்து கோளாவில் (தில்லை ஆற்றைகடந்து) பனங்காடு, பட்டிநகர், மொட்டையாகல் மலையூடாக தாலிபோட்டாற்றைக் கடந்து ஊரக்கைவெளி ஆத்துக்கண்டம், முனைவெளி வழியாக பெரிய களப்பின் தென்கரையோரமாக வந்து, வேலகாமம் குளம் வழியாகத் திருக்கோவில் முருகன் கோயிலை அடைவர். இப்பிரதான பாதையின் அருகாமையில் பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் அமைந்திருந்ததால் அக்காலத்தில் இவ்வாலயம் பிரபல்யம் பெற்றிருந்தது இப்பாதையூடாகவே ஆங்கிலேய உத்தியோகத்தர்கள் திருக்கோவில் பிரதேசத்துக்குச் சென்று வந்தனர். இவர்களது பெருமதிப்பையும், நம்பிக்கையையும் பட்டிநகர் கண்ணகையம்மன் பெற்று வந்துள்ளார் என்பதை மரபுக்கதைகள் குறிப்பிடும்.

இக்காலகட்டத்தில் (கி.பி. 1870, 71 களில்) இப்பிரதேசத்தில் நிலவி வந்த பட்டிநகர் கண்ணகை அம்மன் பொற்புறாவந்த காவியம் என்ற இலக்கியம் இன்று காணக்கிடைக்கின்றது. ஏட்டுச்சுவடிகளாக நிலவி வந்த மட்டக்களப்பு கண்ணகி இலக்கியங்களான கண்ணகையம்மன் காவியம், கண்ணகை யம்மன் ஊஞ்சல் கண்ணகையம்மன் குளிர்த்தி ஆகியனவற்றைக் கடந்த நூற்றாண்டில் நிந்தவூர் "அட்டப்பள்ளம்" பழந்தமிழ்க் கிராமத்தில் வாழ்ந்திருந்த பெரியார் திரு.சி. கணபதிப் பிள்ளையவர்கள் தனது அரும்பெரும் முயற்சியினால் தேடித் தொகுத்து "மகாமாரித் தேவி திவ்யகரணி" நூலிலும் (1971)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தினி வழிபாடு நூலிலும் (1978) வெளியிட்டுள்ளார். இவரது இப்பணி காத்திரமானது போற்றுதற்குரியது என்பது எனது பணிவான கருத்தாகும்.

இப்பெரியார் வெளியிட்ட நூல்களில் "மகாமாரித்தேவி திவ்வியகரணி" இல் பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக் காவியம் பட்டிநகர் கண்ணகை அம்மன் காவியம் ஆகியன வற்றுடன் பட்டிநகர் கண்ணகை அம்மன் பொற்புறாவந்த காவியம் இலக்கியம் இடம்பெற்றுள்ளது, இவ்விலக்கியமானது கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உருவானது இதனை இலக்கியச்சான்றுகள் உணர்த்துகின்றன. பட்டிநகர் பொற்புறாவந்த காவியமானது இவ்வாலயத்தில் கண்ணகை அம்மன் பொற்புறாவாக வந்து கோயில் கொண்டு அருள் பாலித்து வருவதாகக் குறிப்பிடும்.

மேலும், தென்னிந்தியாவின் பாண்டிய நாட்டிலிருந்து வந்து இங்கு குடியேறியிருந்த சிற்றரசர் குடியினரான மழவராயன் குடியைச்சேர்ந்தவரும் சீதவாக்கையிலிருந்து எடுத்துவரப்பட்ட கண்ணகி புனிதப் பொருட்களிலொன்றான "பொற்புறா சின்னங்களை இவ்வாலயத்தில் வழிபாட்டிற்கெனச் சேர்த்த வருமான மங்கலப்போடி கப்புகனாரும் இக்காவியத்தில் முன்னுரிமை பெறுகின்றார்.

"சீரணியும் மழவராயன் குடியுதித் துவளர்
செல்வனென வாழுமங்கலப்போடி தானும்"
(பாடல் 14 : வரி 3 - 4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தம்பிலுவில் அம்மன் ஆலயத்திலும், பட்டிமேடு கண்ணகை அம்மன் ஆலயத்திலும் சம காலத்தில் கப்புகனாராகப் பணிபுரிந்து வந்துள்ளார்.

கி.பி. 1870, 71களில் இப்பிரதேசத்தில் பணிபுரிந்த இலங்கை சமூக சேவையின் கியூநெவில் (C.C.S) அவர்கள், இவ்வேளையில் இப்பிரதேசத்தில் நிலவி வந்த பொற்புறாவந்த காவியம் பற்றிகேட்டும் அறிந்துமிருந்தார். இக்காவியம் பற்றிய தனது கருத்தையும் தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணத்தில் கண்ணகை அம்மன் ஐந்து தலை நாகமாக ஊர்ந்து சென்று வழிபட்டதைப் போன்றே பட்டிமேட்டு கண்ணகை அம்மனுக்கு பொற்புறாவடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இது சீதவாக்கை ஐதீகக் கதையிலிருந்து தோன்றியிருக்கலாம். இவ்வாறு நெவில் அவர்கள் கருதுகின்றார்8.

சிதவாக்கை ஐதீகக் கதை கி.பி. பதினெழாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் தோற்றம் பெற்று கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து இப்பிரதேசத்தில் நிலவி வந்துள்ளது. இதனை பின்னணியாகக் கொண்டே கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொற்புறா வந்த காவியம் உருவானதெனலாம்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும், கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் குறிப்பாக கி.பி. 1590 ஆம் ஆண்டு தொடக்கம் 1640 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்திலும், பட்டி நகர்கண்ணகை அம்மன் ஆலயத்திலும், கப்புகனாராகக் கடமை புரிந்துவந்த மங்கலப்போடி பிரபு சீதாவாக்கையிலிருந்து கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த கண்ணகி அம்மன் புனிதப் பொருட்களை தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் சிலவற்றைக் கையளித்துத் தான் கொண்டு வந்த பொற்புறா சின்னங்களை பட்டி நகர் கண்ணகையம்மன் ஆலயத்தில் பூஜைக்குரிய வழிபாட்டு சின்னங்களாக காட்சிப்படுத்தி வைத்தார் என்பது சீதவாக்கை ஐதீகக் கதையின் தெளிவான விளக்கமாகும்.

பொற்புறாவந்த காவியமானது, இவ்வாலயத்தில் கண்ணகை அம்மன் பொற்புறாவாக வந்து கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார் என்று குறிப்பிடுகின்றது.

"ஏழுலகமுந்துதிசெய் நாகமங் கலையம்மன்
எழில் கொள் பொற் புறாவாயெழுந்து வந்தனளே"
(பாடல் 3 : வரி 1 - 2)

இதில் நாகமங்கலை அம்மன் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள மக்களின் பௌத்த வழிபாட்டில் கண்ணகியோடு தொடர்பு படுத்தப்படும் நாகமங்கலையும் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களாகத் தங்களது வரலாறு கூறும் செட்டி நாடு (காரைக்குடி, பரமக்குடி) செட்டி வம்சத்தினரின் நாகமங்கலைத் தெய்வமான கண்ணகியும் ஒத்த தன்மையாக அமைகின்றனர்9. செட்டி வம்சத்தினரான நகரத்தார் சமூகத்தினர் தங்கள் குல தெய்வமாகக் கண்ணகியைக் "கண்ணாத்தாள்" என்ற பெயரிலும் போற்றி வருவதாக கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகமங்கலை என்னும் கண்ணகை அம்மன் இலங்கையைச் சுற்றி வந்து தம்பிலுவிலில் தங்கியிருந்து பின்னர் அங்கிருந்து பட்டிநகரினை வந்தடைந்து கோயில் கொண்டதாக பொற்புறாவந்த காவியம் கூறுகின்றது.

"துப்புற இலங்கை நகரைச் சுற்றிவந்து
துய்ய தம்பிலுவில் நகரில் தங்கி மாதும்.
தாயார் பட்டிமாநகர் இருக்கவே
வடிவமுடன் மணிமேடையேற்றி"

(பாடல் 13 : வரி 5 - 6)

இக்காவியவரிகள் மூலமாக தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயமே முதலில் தோற்றம் பெற்றதாகவும் இதனைத் தொடர்ந்தே பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலயம் தோற்றம் பெற்றதென்றும் உணர்த்தப்படுகின்றது.

சிலப்பதிகார கதையின் அடிப்படையில் மானாகர் மகளாக வடிவெடுத்தாய், மாசாத்தார்மகனாரை மணம் முடித்தாய் என்று கண்ணகியாகவே இவ்வாலயத்தில் குடி கொண்டிருக்கும் அம்மனை இக்காவியம் போற்றுகின்றது.

"மானாகர் மகளாக வடிவதையெ டுத்தாய்
மாசாத்தார் மகனாரை மணமது முடித்தாய்."

(பாடல் 22 : வரி 1 - 2)

என்று கூறும் இவ்விலயக்கியம் துர்க்கையே இவ்வாலயத்தில் கண்ணகை அம்மனாக போற்றப்படுகின்றார் என்றும் குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செம்பொன்மணி யாரமுலை துர்க்கையே பட்டிநகர்
சேர்கவுரி யாகிவளர் தெய்வகண் ணகையே"
*(பாடல் 20 : வரி 7 - 8)*

பொற்புறாவந்த காவியம் இலக்கியம் இவ்வாலயத்தில் குடியிருக்கும் அம்மனுக்கு பொற்புறாவடிவம் கொடுத்துள்ள போதும் நாகமங்கலையாகவும். சிலம்பு குறிப்பிடும் பத்தினித் தெய்வமான கண்ணகியாகவும், கண்ணகியின் மறுவடிவமான துர்க்கை அம்மனாகவும் பட்டிநகர் தேவியைப் போற்றுகின்றது10.

இவ்வாறு கண்ணகி தொடர்பில் "பொற்புறா வந்தகாவியம்" வேறுபட்ட தொன்மங்களைக் கொண்டதாக அமைந்த போதும் வரலாற்று ரீதியாகக் காத்திரமான தகவல்களையும் இக்காவியம் வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக இக்காவியம் கி.பி இரண்டாம் நூற்றாண்டைக் குறித்துக் கூறுகின்றது. கலிபிறந்து மூவாயிரத்தி முன்னூறாகச் சொல்லப்படுகின்ற (பாடல் 3 : வரி 1) கி.பி. 198 இல் நாமங்கலை என்னும் அம்மன் மட்டக்களப்புக்கு வந்த கதையாக அமைகின்றது. இதன் பின்னணியில் தம்பிலுவில் கண்ணகியின் தோற்றம் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் கண்ணகி வழிபாடு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கஜபாகு மன்னன் காலத்தில் (கிபி. 171 - 193) அறிமுகமானது இதேவேளை கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலேயே தம்பிலுவில் கண்ணகி தோற்றம் பெற்றதை வரலாற்றாய்வுகள் உணர்த்துகின்றன. இதனை "வாழ்வு பெறு கலியுக மூவாயிரமுந்நூறில் என்ற பொற்புறாவந்த காவியவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல் 3 : வரி 1) யும் உறுதி செய்கின்றது இதேவேளை தம்பிலுவில் கண்ணகியின் தோற்றம் பற்றி இந்நூலில் முதலாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் இதனை மேலும் விரிவாகக் குறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது.

கஜபாகு மன்னனது ஆட்சிக் காலத்தில் கண்ணகி வழிபாடு தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்தில் அறிமுகமாகவில்லை. இவனது ஆட்சிக் காலத்தின் பின்பே கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் இவ்வழிபாடு இப்பிரதேசத்தை வந்தடைந்தது. கஜபாகு மன்னன் இலங்கையில் ஆட்சி புரிந்த காலம் கி.பி. 171 - 193 வரையுள்ள காலமாகும் இக்காலத்தில் சேரநாட்டில் ஆட்சி புரிந்த செங்குட்டுவனால் நடத்தப்பட்ட கண்ணகி விழாவுக்கு கஜபாகுவும் சென்று கலந்து கொண்டான்.

சேரநாட்டை செங்குட்டுவன் ஐம்பத்தைந்து வருடங்கள் ஆட்சிபுரிந்துள்ளான். இதனை பதிற்றுப்பத்து ஐந்தாம் பாடல் குறிப்பிடுகின்றது. இவன் கண்ணகிக்குப் படிமம் அமைக்கத் தொடங்கி வஞ்சியில் தங்கியிருந்தபோது இவனுக்கு ஆட்சி ஆண்டு ஐம்பதாகும்.

இதனை மாடலன் "வையங்காவல் பூண்ட நின்யாண்டு
ஐயைந் திரட்டி சென்ற நற்பின்னும்"

என உணர்த்துகின்றான் இந்நிலையிலேயே கண்ணகி விழா நடைபெற்றுள்ளது. ஆதலால் கண்ணகி விழா வஞ்சியில் நடைபெற்ற காலம் கி.பி. 178 என்று கணிக்கலாம்11. ஆதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜபாகு வஞ்சியில் நடந்த கண்ணகி விழாவுக்கு வந்தகாலம் கி.பி. 178 ஆகும் இவன் இலங்கையில் பதினைந்து ஆண்டுகள் இதன் பின்னர் (கி.பி. 193 வரை) ஆட்சி புரிந்துள்ளான். இக்காலகட்டத்தில் (கி.பி. 178 - 193) மட்டக்களப்பு தமிழகத்தின் எப்பாகத்திலும் கண்ணகி வழிபாடு அறிமுகமாகியிருக்க வில்லை.

இதற்குப் பிற்பட்ட காலத்திலேயே கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பின் தென்பகுதியாகிய திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு அறிமுகமானது என்பதை அறிய முடிகின்றது12. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு மட்டக்களப்பில் பரவியிருந்தது. இவ்வாறு ஆய்வாளரான திருமதி ஜி. தனபாக்கியம் குறிப்பிடுகின்றார். கி.பி. 198 இல் தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு பரவியிருந்தமையே இது குறிக்கும். பொற்புறாவந்த காவியம் குறிப்பிடுவது போன்று இங்கிருந்தே பிற்காலத்தில் பட்டிநகர் காரைதீவு ஆகிய இடங்களுக்கும் கண்ணகி வழிபாடு சென்றது.

கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் (1880 - 1900) பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் பேரும் புகழும் மிக்கதாய் மட்டக்களப்பு தேசம் எங்கும் பிரபல்யம் பெற்றிருந்தது. இக்காலத்தில் உருவாகி மட்டக்களப்பின், தென் பகுதியில் நிலவி வந்த "கூவாய் குயில் வசந்தன் இலக்கியம் (குயில் வசந்தன்) அக்கால கட்டத்தில் சிறப்புடன் விளங்கி வந்த கண்ணகி கோயில் களின் பெருமைகளும், புகழும் கூறுவதுடன் அவ்விரண்டையும் குயிலே சொல்ல வேண்டும் என்று வேண்டிப் பாடப்பட்டுள்ளது. இதில் பட்டிநகர் கண்ணகி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செட்டி நகரத்துவு தேவி கண்ணகையை நிதம்
தேடியே நினைந்து நீயும் கூவாய் குயிலே
பட்டி நகர் தம்பிலுவில் பாடல் புகழ் காரைநகர்
பத்தினி கண்ணகை யென்று கூவாய் குளிலே"

என்பதனால் இதனை அறியலாம்.

கி.பி. 1880க்கும் 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் உருவான "கூவாய்குயில் வசந்தன் இலக்கியம் திரு. தி. சதாசிவஐயர் தொகுத்து 1940 இல் வெளியிட்ட மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு என்னும் பாடல் தொகுதியில் உள்ளது13.

வசந்தன் பாடல்களை இயற்றியவர்கள் தம்பிலுவில் காரைதீவு கிராமங்களைச் சேர்ந்தவர்களாவர். இவ்வாறு பண்டிதர் வி.சி. கந்தையா அவர்கள் (மட்டக்களப்பு தமிழகம் - 1961) குறிப்பிடுகின்றார். ஆதாரபூர்வமாக நோக்குமிடத்து கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே தம்பிலுவில் கிராமத்தில் வசந்தன் பாடல்கள் உருவாகி வந்துள்ளதை அறியமுடிகின்றது. கண்டி மன்னன் வீரநரேந்திர சிங்கன் காலத்தில் (கி.பி. 1709 - 1739) இங்கு உருவான "தம்பிலுவில் கண்ணகை அம்மன் பள்ளு" என்ற சிற்றிலக்கியத்தை இயற்றிய புலவர் வசந்தன் இசையில் இதனை இயற்றியதாக இவ்விலக்கியத்தில் (பாடல் 3 வரி 1 - 2) குறிப்பிடுகின்றார்14. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தம்பிலுவிலில் ஏராளமான வசந்தன் பாடல்கள் உருவாகியுள்ளதை அறிய முடிகின்றது. இதேவேளை கூவாய்குயில் வசந்தன் இலக்கியம் எப்பிரதேசத்தில் உருவானது என்பதை உறுதி செய்ய முடியாதுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் வளர்ச்சியுற்று வந்ததுடன் அக்கரைப்பற்றுப் பகுதி (மீனோடைக்கட்டு, கருங்கொடிதீவு) பாலமுனை, கோளாவில். பனங்காடு) வாழ் சைவப் பெருங்குடி மக்களின் நம்பிக்கைக்கும் பக்திக்குமுரியவராக இங்கு கோயில் கொண்டிடுள்ள கண்ணகையம்மன் விளங்கியிருந்தார் இவ்வாலய பூசை, வழிபாடுகளில் அக்கரைப்பற்று பகுதி மக்கள் பங்கேற்று வந்துள்ளதுடன் நேர்த்திக்கடன்களாவும், தானங்களாகவும் நெல், அரிசி, தங்கம், வெள்ளியினாலான அடையாளங்களையும் வழங்கி வந்தனர் மேலும் ஆடு, மாடு, கோழி ஆகியனவற்றையும் அம்மனுக்குக் காணிக்கைகளாக வழங்கி வந்துள்ளனர். இதன் வாயிலாக அக்காலத்தில் இவ்வாலய வளர்ச்சிக்கு அக்கரைப்பற்று பகுதியில் வாழ்ந்து வந்த சைவப் பெருங்குடி மக்கள் பெரும் பங்களிப்பை நல்கி வந்துள்ளனர். இது மறுதலிக்க முடியாத உண்மை எனலாம்.

இதேவேளை இவ்வாலயத்தில் இடம் பெற்று வந்த பூசை, வழிபாடுகள் பற்றிக் குறிப்பிடுமிடத்து ஆரம்ப காலத்தில் பக்தி என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மன்றாட்டமாகவே “அம்மனை வழிபட்டு வந்துள்ளதை அறிய முடிகின்றது கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் இவ்வாலயத்தில் கண்ணகையம்மன் வழிபாடு பூசை, மடை படையல் உள்ளிட்ட நிகழ்வுகளுடன் இதற்கென உருவான பத்ததி (பத்தாதி) முறையிலும் இடம்பெற்று வந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் பத்தாசி முறையில் பூசை, வழிபாடுகள் இடம் பெற்று வந்ததுடன் காவியங்கள் கண்ணகி வழக்குரை பாடலும் நிலவி வந்தன. இதனைத் தொடர்ந்து கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் குளிர்த்தி பாடலும் இடம்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. அக்காலத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட கப்புகனாரது பராமரிப்பிலும் குடிமுதல்வராகக் கருதப்பட்ட இவர்களது வழக்காட்டலிலும் ஆலயபரிபாலனம் உன்னத நிலையிலிருந்து வந்தது.

**அடிக்குறிப்புக்கள் :**

1) திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்கம் 95 நா. நவநாயக மூர்த்தி - 2014

2) சுமார் பதினைந்து மைல் நீளமும், நான்கு அல்லது ஏழுமைல் விஸ்தீரணமும் கொண்டதாக அமைந்திருந்த அக்கரைப்பற்று என்ற மாகாணத்தில் அக்காலத்தில் (1834) இல் குடியிருந்தவர்கள் தமிழர்கள் என்றும் இவர்கள் விடாமுயற்சியும் சமாதான உணர்வும் கொண்டவர்கள் என்றும் திரு. சைமன்காசிச் செட்டியவர்கள் எழுதிய "சிலோன் கசற்றியர் நூல் கூறும் (இதில் தமிழ்பேசும் மக்களான முஸ்லிம்கள் தமிழர்கள் அனைவரையும் தமிழர்கள் என்றே செட்டியவர்கள் குறிப்பிடுகின்றார்)

3) A HISTORY OF CEYLON FOR SCHOOLS - Page 140 by father S.G. Perera.

4) மட்டக்களப்பு குகன் குலமுற்குகர் வரலாறும் மரபுகளும் - பக்கம் 126, ஞா. சிவசண்முகம் - 2000

5) தெய்வீக அம்சம் கொண்ட ஒளிபெருந்திய இந்த பொற்புறா புனித சின்னங்கள் இரண்டும் இவ்வாலயத்தில் இன்றும் உள்ளன. இவை பூஜைக்கும், வழிபாட்டுக்கும் உரிய புனித பொருட்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) இக்காலத்தில் (கி.பி. 1833 - 1870) கீழ் மாகாணத்தின் தலைநகராகத் திருகோணமலை விளங்கியிருந்தது இவ்வேளை (1854 ஆம் ஆண்டு தொடக்கம்) RD. சோமநாதர் முதலியார் அவர்கள் உதவி அரசாங்க அதிபராக விருந்து வந்தார்.

7) கி.பி. 1804 இல் ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக மட்டக்களப்புத் தமிழ்ப் போடிமார், வன்னியர், தலைவர்கள் (சமூக) மேற்கொண்ட கிளர்ச்சி பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் "திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு நூல் (பக்கம் 92 - 95) விபரிக்கும்.

8) ஆய்வாளர் திரு. எஸ்.ஓ. கனகரெட்னம் அவர்களும் இதனை ஏற்றுக்கொள்ளுகின்றார். மேலும் பொற்புறாவந்த காவிய மூலமும் அறிந்து கொள்ளலாம். (பல்துறை ஆய்வுகள் பக்கம் 98 அறிஞர் ம. சற்குணம் - 1999)

9) மட்டக்களப்பு மாநிலத்தில் கண்ணகி வழிபாடு - "கட்டுரை" கவிக்கோ வெல்லவூர் கோபால், தாந்தாமலை மாட்சி, குடமுழுக்கு மலர் - 2011

10) அக்காலத்தில், காடு சூழ்ந்து நடுவில் அமைந்திருந்த ஆலயத்தில் வீற்றிருந்த இத்தேவியை பக்தர்கள் பயபக்தியுடன் வழிபட்டு வந்ததுடன் துர்க்கை அம்மனே கண்ணகியாக இங்கு வந்திருந்து அருள்பாலித்து வருகின்றார். இங்கு குடிகொண்டுள்ள தேவியானவர் துர்க்கையின் அம்சமே என்றும் நம்பி வந்தனர். இதன் காரணமாகவே இவ்வம்மனை புலவர் துர்க்கை அம்மனாகவும் உருவகித்துப் போற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) ஆரிய திராவிடரும் அழிந்து போன சங்கங்களும் - பக்கம் 88, 89 துரைஜெகநாதன் - 1982

12) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்கம் 84 நா. நவநாயக மூர்த்தி - 1999

13) திருசதாசிவஐயர் மட்டக்களப்பில் வித்தியாதரிசியாகக் கடமை புரிந்தவர் (1940, 41) களில் நாட்டுப் பாடல்களில் ஆர்வம் கொண்ட ஐயர் அவர்கள் அப்பாடல்களில் வசந்தன் ஆட்டத்தின்போது பாடப்படும் கவிதைகளை திரட்டி வசந்தன் கவித்திரட்டு, நூலை (1940) வெளியிட்டார் இதில் தம்பிலுவிலில் உருவான நரேந்திர சிங்கன் பள்ளு இராஜசிங்கன் பள்ளு இலக்கியங்களும் அடங்கியுள்ளன. (விபுலனந்ததரிசனம் - பக்கம் 14 வ. சிவசுப்பிரமணியம் - 1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பண்டைய பட்டிநகர் ஆலய வரலாற்றில் ஆலய பரிபாலனமும் வழக்காறுகளும், மரபுகளும்" (கி.பி. 1900 வரை)

பண்டைய மட்டக்களப்பில் சில இடங்களில் கண்ணகி வழிபாடு தனிப்பட்ட குடும்பங்களால் தோற்று விக்கப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகின்றது இவ்வாறு தனிப்பிட்ட குடும்பங்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த கண்ணகி ஆலயங்களில் பக்தி என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வழிபடுவோர். தொகை பெருகப் பெருக அவை அயல் கிராமங்களில் வாழ்ந்துவந்த மக்களிடையேயும் செல்வாக்குப் பெற்றுப் பிரபல்யம் பெற இக்கோயிலில் இடம்பெற்று வந்த பூசை வழிபாடுகளில் அவர்களும் கலந்து சிறப்பித்து வந்தனர். அத்துடன் ஆலய வளர்ச்சியிலும் பங்களிப்பு நல்கி வந்தனர்.

இதேபோன்று ஆரம்ப காலத்தில் பட்டிமேடு பகுதியில் சிறுதொகையினராக வாழ்ந்திருந்த மழவராயன்குடி மக்களிடையே நிலவி வந்த நாகவழிபாட்டின் (நாகம்) தொடர்ச்சியே பிற்காலத்தில் (கி.பி. 1285, 86களில்) இக்குடிமுதல்வராக விளங்கிய கட்டாடியரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி வழிபாடாகத் தோற்றுவிக்கப்பட்டு விளங்கியிருந்ததைத் தொடர்ந்து கி.பி. பதினாலாம் நூற்றாண்டில் (கி.பி. 1320) அயல் கிராமங்களில் வாழ்ந்திருந்த மக்களிடையேயும் பிரபல்யம் பெற்றிருந்தது அக்காலத்தில், மீனோடைகட்டு, பாலமுனை, கருங்கொடித்தீவு, கோளாவில் பனங்காடு, முதலான இடங்களில் வாழ்திருந்த மக்கள் இவ்வாலயப் பூசை வழிபாடுகளில் பங்குபற்றத் தொடங்கியதுடன் ஆலயவளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கத் தொடங்கினர்.

இக்காலந் தொடக்கம் ஆலய பரிபாலனம். பராமரிப்பு உள்ளிட்ட சகல அதிகாரங்களும். பொறுப்புக்களும் கொண்டவராக குடித்தலைவரான (குலமுதல்வர்) கட்டாடி என்ற கப்புகனாரே விளங்கி வந்துள்ளார். இதற்கு முந்திய காலத்தில் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு (சாகாமம் ஊரக்கை பத்தினி) கட்டாடியாகக் (கப்புகன்) கடமை புரிவதற்காக அழைத்து வரப்பட்டகப்புகனார் சந்ததியினரான இவர்களில் கி.பி பதினாறாம் நூற்றாண்டில் குறிப்பாக கி.பி. 1590 ஆம் ஆண்டு தொடக்கம் 1640 ஆம் ஆண்டு வரையும் இவ்வாலயத்தில் கப்புகனாராகக் கடமை புரிந்து வந்த **மங்கலப்போடி** என்பவர் தம்பிலுவில் கண்ணகியம்மன் ஆலயத்திலும் கப்புகனாராகப் பணி புரிந்துள்ளார்.

இவரைத் தொடர்ந்து கி.பி. 1640 ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி. 1685 ஆம் ஆண்டு வரையும் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்திலும் இவ்வாலயத்திலும் கட்டாடியாகக பணிபுரிந்த கண்ணப்பர் கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கனின் சமகாலத்தவர் ஆவார். தம்பிலுவில் மழைக்காவியத்தை இயற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரும் இவரேயாவர் (கட்டாடி கண்ணப்பனுக் காயினுமிரங்கி பாடல் *11* : வரி *6*) இவரைத் தொடர்ந்து சரவணமுத்து கப்புகன் (*1685 - 1739*) நல்ல தம்பி கப்புகன் (*1846 - 1864*) மானாகப் போடி (*1864 - 1875*) ஐயம் பெருமாள் கப்புகன் (*1875 - 1915*) என்போர் அக்காலத்தில் இவ்வாலயத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்களாகவும் இக்குலமக்களின் (மழவராயன்) முதல் வராகவும் விளங்கி வந்துள்ளனர் (தகவல் திரு. க. கார்த்திகேசு வண்ணக்கர் அவர்கள் *18.07.2015*)

## ஆலயபரிபாலனம்

பட்டிநகர் கண்ணகி ஆலயத்தைத் தோற்றுவித்த மழவராயன் குடி மக்களே அக்காலந்தொட்டு இவ்வாலய பரிபாலனத்தில் முன்னுரிமையாளர்களாக விளங்கி வந்தனர். தங்கள் குலமுதல்வராகக் கருதப்பட்டு மதிக்கப்பட்டு வந்த "கட்டாடி" என்ற கப்புகனின் வழிகாட்டல்களின் கீழ் வாழ்ந்து வந்த இவர்கள் இவ்வாலய பரிபாலனம் பராமரிப்பு உள்ளிட்ட சகல பொறுப்புக் களையும் இவரிடமே ஒப்படைத்திருந்தனர் அக்காலத்தில் கப்புகன் என்போர் ஒழுக்கம் பண்பு மிக்கவராகவும், சமய ஆசாரங்கள் கடைப்பிடிப்பவர்களாகவும், அம்மன்அருள் நிறைந்தவாக்கு வன்மை மிக்கவர்களாகவும் விளங்கியிருந்தனர். இதன் காரணமாக இவர்கள் எல்லோரது பெருமதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவர்களாயிருந்தனர்.

பிற்காலத்தில் ஆலயத்திற்கென நெற்காணி, குளம், உள்ளிட்ட நிலம் மானியமாகக் கிடைத்ததைத் தொடர்ந்து கப்புனார் இவ்வயல் காணிகளை இக்குடிமக்களுக்கே நெற்செய்கைக்காகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்தளித்து வந்ததுடன் இதன் மூலமாகப் பெற்றவருமானத்தை (குத்தகை பணம்) ஆலயப் பராமரிப்பு குளப்பராமரிப்பு ஆகியனவற்றிற்குப் பயன்படுத்தி வந்ததை அறிய முடிகின்றது. இவ்வாலயத்தை பராமரித்து வரும் மரபுரிமையானது அக்காலத்தில் மழவராயன் குடியினரான கப்புகனாருக்கே இருந்து வந்துள்ளது.

இவ்வாலயத்திற்கு உரித்தானவைகளாக முப்பது ஏக்கர் வயல் நிலமும், இதற்கு நீர்ப்பாச்சலுக்கென முப்பத்தொன்பது ஏக்கர் விஸ்தீரணமும் கொண்டகுளமும் இருந்து வந்தன. இவை முறையே மழவராயன் வெளி மழவராயன்குளம் என பெயர்கள் வழங்கி வந்தன. வருடந்தோறும் இக்குடியிலுள்ளவர்களே இவ்வயலைச் செய்கை பண்ணி இதன் மூலமாக பெறும் குத்தகைப் பணத்தை எடுத்து ஆலயத்தைப் பராமரித்து வந்துள்ளனர். (திரு. க. தங்கவேலு ஆலோசனைசபை உப்பினர் - 1989)

மழவராயன் குடியினர்.

பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயத்தைத் தோற்று வித்தவர்களும். இவ்வாலயத்தில் இன்று முன்னுரிமை பெற்றவர்களாக விளங்கி வருபவர்களுமான இக்குடியினர் கி.பி. பதினோராம் நூற்றாண்டில் பண்டைய நகரமான "சாகாமம்" ஊரக்கை பத்தினி அம்மன் ஆலயத்தில் கப்புகனாராக (கட்டாடி) பணிபுரிய வேண்டி பாண்டிய நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட வர்களாவர் இதுபற்றி விபரமாக முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் (கி.பி. 11 ஆம் நூற்றாண்டு) பெண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகள் உள்ளிட்ட ஒரு குடும்பமே இங்கு கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பட்டு பட்டிமேடு பகுதியில் குடியேற்றப்பட்டனர். ஆதலால் இக்குடியினர் பட்டிமேட்டார், பட்டிமேட்டுகுடியார் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டு வந்துள்ளனர்.

கிழக்கிலங்கை அம்பாரை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பனங்காடு கிராமத்தில் கணிசமான தொகையினராக இவர்கள் வாழ்ந்துவருவதுடன் தம்பட்டை, தம்பிலுவில், அக்கரைப்பற்று போன்ற இடங்களிலும் இன்று வசித்து வருகின்றனர் பாண்டிய நாட்டிலிருந்து குறிப்பாக பட்டிமேடு பகுதியில் அக்காலத்தில் குடியேற்றப்பட்ட மழவராயன் குடியினர் பற்றி வரலாற்றாய்வுகள் மூலமாக நோக்குமிடத்து பல வரலாற்றுண்மைகளை நாம் தரிசிக்க முடியும். பாண்டிய நாட்டில் அக்காலத்தில் மிகவும் உன்னத நிலையிலிருந்த சிற்றசர் குடிகளான பன்னிரண்டு குடிகளில் "மழவராயன் குடியும் ஒன்றாகும்.

இவைபற்றித் இந்தியத் தொல்லியன் ஆய்வாளரான அறிஞர் இராநாகசாமி அவர்கள் கல்வெட்டுக்கள் பற்றிய தனது நூலில் (யாவரும் கேளீர் பக்கம் 121, 122, 44, 45 - 1973) விபரமாககுறிப்பிடுகின்றார்.

குறுநில மன்னர் குடிகளான சேதிராயர்குடி, வத்ஸராயன்குடி, காலிங்கராயன்குடி, காங்கேயர்குடி, மழவராயன்குடி, மகதராயன் குடி, சம்புவராயன் குடி, விராடராயன் குடி, கடம்பராயன்குடி, காடவராயன் குடி, நிஷதராயன்குடி, அயோத்திராயன் குடி, என்பவைகளாம் இக்குடிகளில் மழவராயன் குடிபற்றிய சிறப்புக்களை தமிழ் நாட்டு தொல்வியல் களஞ்சியத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

431/4, 301/4, 428/4 ஆகிய இலக்கங்களையுடைய கல்வெட்டுக்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். (பக்கம் 44, 45) இக்கல்வெட்டுக்கள் மூலமாக பாண்டிய மன்னர்களிடம் மழவராயன் குடியினர் பெற்றிருந்த செல்வாக்கு புலப்படும்.

சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலிருந்தும் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் சிறப்புடன் விளங்கியிருந்த இக்குறுநில மன்னர் குடிகள் கி.பி பதினாலாம் நூற்றாண்டில் மறைந்து போயின, விஜய நகர மன்னர்களின் பிரதிநிதிகளாக தானைத் தலைவர்களாக வந்த நாயக்கர்கள் தனியாட்சிநிறுவியதைத் தொடர்ந்து இவர்களது செல்வாக்கு நலிவுற்றது. (யாவரும் கேளீர் பக்கம் 122) இக்குடியினர் யாவரும் அந்தணர் மரபினர் என்று சில கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளது.

டாக்டர் கே.வி. ராமன் எழுதிய 'பாண்டியர்' வரலாறு என்னும் நூலில், பாண்டியன் சடையவர்மன் (கி.பி. 1190 - 1217) காலத்தில் மழவராயன் குடியினர் அரசியல் தலைவர்கள் பதவி வகித்ததாய் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் செம்பொன்மாரி என்ற, பகுதியை மழவராயன் குடியைச் சேர்ந்தசிற்றரசன் ஆட்சி செய்ததாயும் பராக்கிரமபாகு காலத்தில் நடந்த சிங்களப் படையெடுப்பின் போது இலங்காபுரித் தண்டநாயக்கன் என்பான் செம்பொன்மாரி சிற்றரசைக் கைப்பற்றிப்பின் மீண்டும் மழவச் சக்கரவர்த்திக்கே திருப்பிக் கொடுத்துள்ளான்.

இவ்விபரங்கள் தமிழ் நாட்டிலுள்ள திருப்பத்தூர் கிராமத்திலுள்ள கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கல்வெட்டு மழவராயன் குடியைச் சேர்ந்த சிற்றரசன் ஒருவன், குலசேகர பாண்டியன் கீழ் ஆட்சி செய்துள்ளான். என்று குறிப்பிடுகின்றது.

வரலாற்று பேராசிரியர் டாக்டர் கே.கே பிள்ளையவர்கள், சோழர் காலத்தில் பாண்டிய நாட்டில் மழவராயன் குடியைச் சேர்ந்தவர்கள் அரச உயர் பதவிகளை வகித்ததாய்க் குறிப்பிட்டுள்ளார். (சோழர் வரலாறு K.K. பிள்ளை) மேலும் மழவராயன் குடியைச் சேர்ந்த உதயதிவாகரன் கூத்தாடியாரான வீரராசேக்கிரன் இரண்டாம் இராஜேந்திரன் ஆட்சியில் அரசாங்க உத்தரவுகளில் கையெழுத்திடும் உரிமையைப் பெற்றுள்ளான் என்று கல்வெட்டுச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

இவ்வாறு அக்காலத்தில் தமிழக அரசியலில் (சோழபாண்டிய) செல்வாக்குடன் விளங்கியிருந்த இக்குடியினர் இலங்கை மன்னர்களின் மதிப்பையும், ஆதரவையும் பெற்று வந்துள்ளனர் என்பதற்கும் வரலாற்றுச்சான்றுகள் உள்ளன. கி.பி. 1478 இல் சிங்கை நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பரராசசேகரன் என்னும் யாழ்ப்பாண மன்னன் சோழ நாட்டைச் சேர்ந்த இராசலெட்சுமி என்பவரையும் பாண்டிய நாட்டு மழவராயன் குடியைச் சேர்ந்த வள்ளியம்மை என்பவரையும் மணந்திருந்ததாய் "யாழ்ப்பாண வைபவ மணிமாலை" என்னும் நூல் கூறுகின்றது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில், யாழ்ப்பாணப் பகுதியை ஆட்சிபுரிந்த சிற்றரசர்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்த மழவராயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியைச் சேர்ந்த பிராமணர்கள் என்று பாவலர்தீபம் என்ற நூலில் கலாநிதி பூபாலசிங்கம் குறிப்பிடுகின்றார். வட இலங்கையில் இக்குடியைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயத்தில் முன்னுரிமை பெற்றவராக விளங்கியிருந்த (கி.பி. 16 ஆம் நூற்றாண்டு) மங்கலப்போடி கப்புகனாரை (மழவராயன்குடி) சிற்றரசர் குடியினர் என்று முதலியார் எஸ்.ஓ. கனகரெட்ணம் அவர்கள் (1921) குறிப்பிடுகின்றார்.

இக்குடியினர் ஆரம்பகாலத்தில் பட்டிமேடு பகுதியில் குடியேறி வாழ்நிதிருந்த வேளை, குறிப்பாக அக்காலத்தில் தம்பட்டை கிராமத்தில் வாழ்ந்திருந்த சைவப் பிராமணர்களான வீரசைவக்குருமார் பரம்பரையினரிடையே திருமண உறவுகள் கொண்டிருந்தனர். கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலம்வரை இந்நிலையே நிலவியிருந்தது, பிற்காலத்திலேயே அயல் ஊர்களில் வேறு குடியினருடன் இக்குடியினர் மண உறவுகள் கொள்ளத் தொடங்கினர் என்பதை அறியமுடிகின்றது.

அக்காலத்தில் அதாவது கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இக்கண்ணகி பற்றி உருவாகி வந்த இலக்கியங்கள் யாவும் இக்குடியினருடன் மண உறவுகள் கொண்டிருந்த வீரசைவக் குருக்கள் பரம்பரையைச் சேர்ந்த புலவர்களால் உருவாக்கப்பட்டு வந்துள்ளன. இலக்கியச் சான்றுகள் இதனை உணர்த்தும் இவ்விலக்கியங்களில் பெரும்பாலானவை இவர்களாலேயே ஏட்டுப் பிரதிகளாக எழுதப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய பூசைவழிபாடு மரபுகள்

இவ்வாலயம் தோற்றம் பெற்று சிறியதொரு வழிபாட்டு இடமாக விளங்கியிருந்த காலத்தில் இதனைத் தோற்றுவித்த குடும்பத்தினரே பயபக்தியுடன் அம்மனை வழிபட்டு வந்தனர். இவ்வேளை இக்குடியினரின் முதல்வராக விளங்கி வந்த கப்புகனார் மன்றாட்டமாக அம்மனை வேண்டுதல் செய்து வணங்கி வழிபாட்டை நிறைவு செய்வார். இதனைத் தொடர்ந்து வழிபடுவோர் தொகை பெருகப் பெருக பக்தி என்ற நட பிக்கையும் விரிவு பெற்று வந்ததுடன் அயல் கிராமங்களிலிருந்தும் சைவமக்கள் இவ்வாலயத்துக்கு வந்து வழிபட்டு செல்லும் வழக்கமும் நிலவத் தொடங்கியது இக்காலத்தில் ஆலயம் வளர்ச்சியுற்று வந்ததுடன் கட்டாடி என்ற கப்புகனார் பத்ததி முறையில் கும்பம், மடைகள் வைத்து பூசை புரிந்து வந்துள்ளார்.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் (கி.பி. 17 ஆம் 18 ஆம் நூற்) காவியப் பாடல், கண்ணகி வழக்குரைபாடல் ஆகிய பா வகைகள் ஆலயத்தில் பாடப்பட்டு வந்ததுடன் அம்மன் பூசையில் சிலம்பு அம்மானைக்காய் ஆகியனவற்றின் ஒலிகளும் இடம் பெற்று வந்தன இதனைத் தொடர்ந்து பிற்காலத்தில் (கி.பி. 19 ஆம் நூற்றாண்டு) கப்புகன் பூசையில் குளிர்த்தி பாடலும் இடம்பெற்று வந்தது. கப்புகன் பூசை நெறியில் மன்றாட்டமே முக்கியத்துவம் பெற்றிருந்தது. மந்திரங்கள் எதுவும் இடம் பெறவில்லை அக்காலத்தில் கப்புகன் எப்போர் கண்ணகை அம்மன் அருளால் நினைத்தவற்றை சாதிக்கும் தன்மையுடையவராயும், அம்மன் அருளால் அருள்வாக்கு சொல்லும் சக்தியுடையவராகவும் விளங்கியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழங்காலத்தில் "அம்மன் சடங்கு"ஒருநாள் மட்டுமே இடம் பெற்று வந்தது நாளடைவில் ஆலயம் வளர்ச்சியடைந்து பிரபல்யம் பெற்று வழிபடுவோர் தொகை பெருகியதைத் தொடர்ந்து மூன்று நாட்களாகின இதில் கதவுதிறத்தல், கல்யாணக்கால் நடல், குளிர்த்திபாடுதல் என்பன முக்கிய நிகழ்வுகளாக இருந்து வந்தன. முதல் நாள் கதவு திறத்தல் என்ற நிகழ்வுடன் வருடாந்த அம்மன் சடங்கு ஆரம்பமாகும். கதவுதிறத்தல் என்பது பலநாட்கள் பூட்டப்பட்டிருந்த கதவு திறக்கப் படுகின்றது என்பதாகும். இது மிகவும் கோலகலமாக இடம் பெற்று வந்துள்ளது.

ஏனைய சடங்குகளில் கல்யாணக்கால் சடங்கு குளிர்த்தி என்பன முக்கியமானவை சடங்கின்போது "கண்ணகி வழக்குரை படிக்கப்படும், குளிர்த்தி பாடல் என்பது கண்ணகை அம்மனின் கோபம் தணிய வேண்டும் என்று கூறும் அம்மன் சடங்கின் இறுதி நாளன்று இப்பாடல் படிக்கப்படும்.

அக்காலத்தில் இவ்வாலயத்துக்கும் பௌத்த சிங்களவர் களுக்கு மிடையில் நெருக்கமான உறவுகள் நிலவியிருந்தமை பற்றி அறியமுடிகின்றது. குறிப்பாக கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கோட்டை, கண்டிமன்னர் காலம் வரையுள்ள கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை இந்நிலை நீடித்திருந்தது. இவ்வுறவுகள் சிலம்பு கூறும் கண்ணகி என்ற பத்தினி வழிபாட்டு அம்சங்களை மையமாகக் கொண்டிருந்தன எனலாம். இவ்வாலயத்தில் பத்தினித் தெய்வமான கண்ணகியைத் தாய்தெய்வ வழிபாட்டுக் கூறுகளிலொன்றான கண்ணகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனாகப் போற்றி வணங்கி வந்த போதும், பத்தினித் தெய்வமாகவும் இவ்வம்மன் தமிழ்ச் சைவர்களால் போற்றப்பட்டு வந்தார் ஆதலால், சிங்கள பௌத்தர்களும் பட்டிநகர் கண்ணகை அம்மனை பத்தினித் தெய்வமாகப் போற்றி வணங்கிவந்துள்ளனர்.

அக்காலகட்டத்தில் இவ்வாலயக் கப்புகனாராகவிருந்து வந்த மங்கலப்போடி அவர்கள் சீதவாக்கையிலிருந்து கண்ணகி வழிபாட்டுடன் (பத்தினி) தொடர்புடைய புனித சின்னங்களைப் பெற்றுவந்து இவ்வாலயத்திலும் (பொற்புறாக்கள்) ; ்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்திலும் வழிபாட்டுக்காகச் சேர்த்தது பற்றிய ஐதீகக்கதை கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலத்தில் இராஜபக்ஷ முதலியார் இவ்வாலயத்துடன் கொண்டிருந்த ஈடுபாடு, மற்றும் அக்காலத்தில் இராஜபக்ஷ முதலியார் நிர்மாணித்த கோவில் மேடு அம்மன் ஆலயத்திலிருந்து எடுத்து வரப்பட்டு இவ்வாலயத்தில் சேர்க்கப்பட்ட அம்மன் விக்கிரகத்துக்கு சிங்களப்பத்ததி முறையில் சிலகாலம் பூசைகள் இடம்பெற்றமை பற்றி "பரவணிக் கல்வெட்டு" கூறும் செய்திகள் இதற்கு சான்றுகள் எனலாம்.

ஆதியில் சாகாமம் ஊரக்கையில் கோயில் கொண்ட பத்தினித் தெய்வமான, செண்பகச் செல்வி என்ற கண்ணகியே பிற்காலத்தில் நாகமங்கலையாகி (நாகம்) பட்டிநகரில் கண்ணகை அம்மனாக வீற்றிருந்த போதும் இத்தேவியானவர் பிற்காலத்தில் துர்க்கை வடிவாகவே கானகத்தின் நடுவில் தனிமையில் வீற்றிருந்து தன்னை நம்பி நாடிவரும் அடியவர்களுக்கு நல்லருள் புரிந்து வந்துள்ளார் என்பதை மரபுரைகள் உணர்த்தும் அன்னை துர்க்காதேவியே கண்ணகியாக வடிவெடுத்ததாக இலக்கியங்கள் சில குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றாண்டில் கன்னகை அம்மன் ஆலயம் மலர்வுகளும் மாற்றங்களும்.

கி.பி. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஆங்கிலேயரது ஆட்சியில் அக்கரைப்பற்று பிரதேசம் அபிவிருத்திகள் கண்டு செழிப்புடன் விளங்கியிருந்தது. இக்காலத்தில் இலங்கையில் ஆட்சி புரிந்த சேர்ஜோசப் வெஸ்ட் றிட்ஜ்வே அவர்கள், இலங்கையை ஒரு செல்வ வளமிக்க நாடாக ஆட்சி புரிந்தார். இவர் விவசாயப் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தினார். இதன் பொருட்டு 1901 இல் நீர்ப்பாசன சட்டங்களை தயாரித்து பதினைந்து நீர்ப்பாசன திட்டங்களை தோற்றுவித்தார் இவற்றிலொன்றாகச் சாகாமகுளத் திட்டமும் அமைந்திருந்தது1.

இதனைத் தொடர்ந்து தம்பிலுவில் ஊரக்கை வெளிக்கண்டம் மட்டுமன்றி மொட்டையாகல் மற்றும் பட்டிமேடு பகுதிகளில் அமைந்திருந்த ஏராளமான நெல் வயல்களும் முறையான நீர்ப்பாசன வசதியைப் பெறத் தொடங்கியிருந்தன. மேலும் றிட்ஜ்வே காலத்தில் (1895 - 1903) அக்கரைப்பற்று பிரதேசமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் தனிப் பெரும்பான்மையிராக வாழ்ந்திருந்த தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்துக்கும் வடக்கே மட்டக்களப் புக்கும் இலகுவாகச் சென்றுவர கற்பாதை (தார்றோட்)யும் அமைக்கப்பட்டது2. இவ்வாறு கி.பி. 1924 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் அக்கரைப்பற்று பகுதி பல அபிவிருத்திகள் பெற்று வந்துள்ளது.

இங்கு "அக்கரைப்பற்று பகுதி என்று குறிக்கும் மரபானது மீனோடைக்கட்டு, பாலமுனை, கருங்கொடித்தீவு, பனங்காடு, கோளாவில் உள்ளிட்ட பழந்தமிழ் கிராமங்கள் அடங்கிய பிரதேசத்தையே குறிப்பதாகும். அட்டாளைச்சேனை, கருங்கொடித் தீவு முஸ்லீம் பகுதி என்பனவும் இப்பகுதியில் அடங்கியிருந்தன. அக்கரைப்பற்று பகுதி என்பது மிக நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டதாகும்.

அக்காலத்தில் அக்கரைப்பற்று பகுதியில் கல்வி வேலைவாய்ப்புக்கள் ஆகியன வளர்ச்சியுற்று வந்ததுடன், பாரம்பரியக் கலைகளான, நாட்டுக்கூத்து, வசந்தன், கும்மி, கரகாட்டம், போன்ற கலைகளும் செழிப்புற்றிருந்தன ஆலயங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன மீனோடைக்கட்டு கிராமத்தில் பிள்ளையார், மாரியம்மன் போன்ற ஆலயங்கள் நிலவியிருந்தன, கருங்கொடித்தீவில் பிள்ளையார் ஆலயம், மருதயடிப் பிள்ளையார் ஆலயம், பத்திரகாளி ஆலயம் ஆகியன சிறந்திருந்தன இதேபோன்று, கோளாவில் கிராமத்தில் முத்துமாரி அம்மன் ஆலயம், பிள்ளையார் ஆலயம், என்பன சிறப்புடன் விளங்கியிருந்தன. இவையாவும் இப்பிரதேசத்தில் அக்காலத்தில் நிலவி வந்த பண்டைய ஆலயங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர, கோளாவில், கருங்கொடிதீவு ஆகிய கிராமங்களில் கடனாச்சி அம்மன் வழிபாட்டு மரபும், பனங்காடு கிராமத்தில், திறந்தவெளிக் கோயிலாக ஐயனார் வழிபாட்டுப் பாரம்பரியமும் நிலவி வந்தன. இவ்வேளை கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு தொடக்கம் நிலவி வந்த பிள்ளையார் ஆலயமொன்று பனங்காடு கிராமத்தில் அமைந்திருந்தது. தற்காலம் பாசுபதேஸ்வரர், வித்தியாலயம் அமைந்துள்ள இடத்திலிருந்த இவ்வாலயம், செங்கல், நீறு, சுண்ணாம்பு, மரம் ஆகியன கொண்டு நிர்மாணிக்கக்கட்டிருந்ததுடன் மேற்கூரை நாட்டு ஓடுகளாலும் வேயப்பட்டிருந்தது[3].

இதேவேளை, இக்கால கட்டத்தில் (1925 வரை) இலங்கை அரசியலிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. சட்ட நிருபணசபை தோற்றம் பெற்ற (1906 இல்) வேளை, இரண்டு தமிழர்களில் ஒருவராக மட்டக்களப்பை வாழ்விடமாகக் கொண்டிருந்த திரு. திசவீரசிங்கம் என்பவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார் 1924 இல் அரசியல் நிர்ணயசபை அங்கத்தவராக மட்டக்களப்பு தொகுதிக்கு திரு. E.R. தம்முத்து அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) சைவப் பாடசாலைகள் பல கிராமமக்களின் முயற்சிகளால் அமைக்கப்பட்டன. நாடக மன்றங்கள் பலதோன்றி சைவசமய சம்பந்தமான நாடகங்களையும் சமூக நாடகங்களையும் மேடையேற்றி வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில், மட்டக்களப்புத் தமிழகத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவரிடையே கண்ணகி வழிபாடு பெருநம்பிக்கையின் பேரில் எழுச்சி பெற்றிருந்தது பல கிராமங்களில் புதிதாகக் கண்ணகையம்மன் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அத்துடன் இவ்வாலயங்களில், பத்தினி என்ற கண்ணகி பராசக்தியின் அம்சமாகக் கருதப்பட்டுப் பூசைகள் இடம்பெற்று வந்தன.

இதேவேளை வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டதும், பாடல் பெற்றதுமான, இவ்வாலயம், மட்டக்களப்பு தேசம் முழுவதும் பிரபல்யம் பெற்றிருந்த புராதன கண்ணகை அம்மன் ஆலயங்களிலொன்றாக இலக்கியங்களில் புகழ்ந்துரைக்கப்பட்டு செழிப்புடன் விளங்கியிருந்தது. இக் காலத்தில் இவ்வாலயத்தில் இடம்பெற்று வந்த சடங்கு, பூசை வழிபாடுகளில் அக்கரைப்பற்று பகுதி மக்கள் (மீனோடைக்கட்டு கருங்கொடிதீவு, கோளாவில், பனங்காடு, பாலமுனை) பெருமளவில்கலந்து சிறப்பித்துவந்தனர்.

மேலும் பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றும் சக்திமிக்க தெய்வாகவும் துர்க்கை அம்மனின் மறுவடிவமாகவும் மிளிர்ந்து வந்த பட்டிநகர் கண்ணகை அம்மனுக்கு நேர்த்திக் கடன் களாகப் பணம், நெல், கால்நடைகள் மட்டுமன்றி மடைகள், தங்கம் வெள்ளியினாலான அடையாளங்களையும் இம்மக்கள் காணிக்கைகளாக வழங்கி வந்தனர். இதன் வாயிலாக வருடா, வருடம் இவ்வாலயத்துக்கு பெருமளவு வருமானம் கிடைத்து வந்தது அக்காலத்தில் இவ்வாலயத்துக்கு உரித்தானவைகளாக விருந்து வந்த நெற்காணிகள் வாயிலாகக் கிடைக்கும் குத்தகைப் பணம், ஆலயப் பராமரிப்புக்கும், வருடா வருடம் இடம்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த சடங்கு உற்சவத்துக்கும் போதுமானதல்ல. இந்நிலையில் அக்கரைப்பற்று மக்களின் பங்களிப்பானது காத்திரமானதெனலாம்.

அக்காலத்தில், அடர்ந்த கானகத்தில் நடுவே கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வந்த பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பெரிய வீரைமரங்களும், பாலை மரங்களும் நிறைந்திருந்தன. மேலும், துவரை, உலிமுந்தை, மரக்காலை, காரை போன்றனவும் அடர்ந்திருந்தன. இதேவேளை அம்மன் ஆலயத்தின் அருகாயிருந்த வீரை, பாலை, போன்ற மரங்கள் மிகவும் பழைய வயது கூடியனவாக விருந்தன. (நேர்காணல், தகவல், திரு. க. சின்னத்தம்பி, ஆலோசனைசபை உறுப்பினர் *(14.05.2014)* இவ்வாறு இயற்கைச் சூழலில் எழுந்தருளியிருந்த பட்டிநகர் தேவியானவர் அக்காலத்தில் அற்புதங்கள் பல புரிந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது.

இவற்றில் ஒரு சம்பவம் திரு. ஐயம் பெருமாள் கப்புகனார் காலத்தில் நிகழ்ந்ததாகும் இதனை மரபுரையொன்று குறிப்பிடும் இவ்வாலயத்துக்கு ஆங்கிலேயரால் சட்டபூர்வமாக திரு. நல்லதம்பி கப்புகனார் பெயரில் வழங்கப்பட்ட காணியை (இல. *53813, 12.31.1860)* இவருக்குப் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்டகப்புகனாராக விருந்த (கப்புகன் ஆட்சி) திரு. மானாகப்போடி கப்புகனார் *(1864 - 1875)* என்பவர் *(135* ஏக்கர்) நாவற் குடாவிலுள்ள ஒருவருக்கு அடகு வைத்தார்.

சில காலத்தின் பின்னர் அடகு பிடித்தவர் காணியை ஏலத்தில் விட ஆயத்தங்கள் செய்து வந்தார். இதனை திரு. மனாகப்போடி கப்புகனுக்குப் பின்னர் கப்புகனாகப் பதவிவகித்து வந்த திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் பெருமாள் (1875 - 1915) அறிந்து வழக்குத் தொடுத்தார் இவ்வழக்கானது பல வருடங்கள் (நீண்ட காலம்) நடைபெற்றது ஆனால் தீர்ப்பு வழங்கப்பட வில்லை.

இந்நிலையில், ஒரு சமயம் வழக்குத்தவணைக்கு முந்திய தினம், திரு. ஐயம் பெருமான் கப்புகன் அவர்கள் நாளைக்கு வழக்குத் தீர்ப்பு எவ்வாறு அமையுமோ என்று கவலையுடன் நித்திரைக்குச் சென்றார் அன்றிரவு இவரது கனவில் அம்மன் தோன்றி மகனே! பயப்படாமல் வழக்குத் தவணைக்குச் செல்என்று பணித்து மறைந்தார். அதிகாலையில் எழுந்து ஆரையம்பதி சென்ற கப்புகனார் ஓடக் கரையைச் சென்றடைந்தார்.

இதேவேளை அன்றிரவு ஓடக்காரன் கனவிலும் அம்மன் தோன்றி என் மகன் வருவான் அவனை உடனே அக்கரைக்குக் கொண்டு சேர்ப்பிக்குமாறு கூறியிருந்தார். ஆதலால் கப்புகனாரைக் கண்ட ஓடக்காரன் அவரது விபரம்பற்றி அறிந்து, ஆச்சரியமும் வியப்பும், மேலிட்டவனாய்த்தான் அன்றிரவு கண்ட கனவையும் கூறி உடனே அவரைத் தனது ஓடத்திலேற்றி அக்கரையில் இறக்கிவிட்டான்.

இதேபோன்று நீதிபதி, மற்றும் முதலியார் ஆகியோரது கனவுகளிலும் அன்றிரவு அம்மன் தோன்றிசட்டப்படி உறுதி எங்களிடம் உள்ளது என்றும் நீதி தவறினால் விபரீதங்கள் தோன்றும் என்றும் கூறித்தனது முத்திரை பதித்த திருமேனியைக் காட்டினார். அன்று காலையில் நீதிமன்றம் வந்திருந்த நீதிபதி, முதலி என்போர் தாங்கள் அன்றிரவு கண்ட கனவுகளைப் பகிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியம் அடைந்தனர். அன்றைய தினம் வழக்கு விசாரணை இடம் பெற்று அம்மன் சார்பில் தீர்ப்பும் வழங்கப்பட்டது (தகவல் திரு. க. குருநாதபிள்ளை தோம்பதோர் - 1988)

மேற்படி வழக்கு விசாரணை நீண்ட காலம் இடம் பெற்றுள்ளது இதேவேளை திரு. ஐயம் பெருமாள் கப்புகன் காலத்திலேயே இக்காணி வழசக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது இதனை மரபுரை குறிப்பிடுகின்றது இவ்வாலயத்தில் திரு. ஐயம் பெருமாள் கப்புகனாகப் பணிபுரிந்த காலம் 1875க்கும் 1915க்கு, மிடைப்பட்ட காலமாகும் ஆதலால், வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்ட காலம் 1905க்கும் 1915க்கு மிடைப்பட்ட காலம் என்று கொள்ள முடியும் மட்டக்களப்புப்பாலம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டது 1924 ஆம் ஆண்டாகும்.

இதற்கு முற்பட்ட காலத்தில், புளியத்தீவில் அமைந்திருந்திருந்த உயர் நீதிமன்றத்துக்கு ஓடத்திலேயே மட்டக்களப்பு தென் பகுதிமக்கள் சென்று வருவர்4. இவ்வாறு அக்காலத்தில் (1924 வரை) பல அற்புதங்கள் இவ்வாலயத்தில் நிகழ்ந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது. இதன்பயனாக இவ்வாலயத்தை நாடிவரும் பக்தர்கள் தொகையும் அதிகரித்து வந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் 1925 ஆம் ஆண்டு பிற்பட்ட காலம்

பண்டு தொட்டு இவ்வம்மன் மீது நம்பிக்கையும், பக்தியும், கொண்டு வழிபட்டு வந்த இவ்வாலயத்தை அண்மித்திருந்த கருங்கொடித்தீவு மற்றும் பனங்காடு, கோளாவில், மீனோடைக் கட்டு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அக்கரைப்பற்று பகுதி மக்கள் இவ்வாலயத்தில் இடம்பெற்று வரும் வருடாந்த வைகாசிப் பௌர்ணமிச் சடங்கில் தாங்களும் பூசை செய்ய அதாவது தங்களுக்கும் பங்களிப்பு தருமாறு அனுமதி கேட்டனர்.

இதனை உளநிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக் கொண்ட இவ்வாலய மரபுரிமை கொண்டவர்களான மழவராயன் குடியினர் தங்கள் ஆலய பரிபாலனஆட்சிக்கும், மானிய ஆட்சிக்கும், பாதிப்புக்கள் ஏற்படாத வகையில், அன்பின் காரணமாகவும் ஆலயச் சடங்கு உற்சவம் சிறப்பான முறையில் நடைபெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் காரணமாக அக்கரைப்பற்று பகுதி மக்களது பூசைக்கு அனுமதி வழங்கினர். வருடா வருடம் இடம்பெற்று வரும் ஆலய அம்மன் சடங்கு தொடர்பான கூட்டத்தில் இவர்களது உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பூசை வழிபாடுகளிலும் இவர்களது பங்களிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, இக்கிராம வழிபாட்டாளர்கள் ஆலய பரிபாலன விடயங்களில் எவ்வித உரிமைகளும் அற்றவர்களாகவே கணிக்கப்படுவர் என்ற ரீதியிலேயே பங்கு கொள்ள அனுமதிக்கப்பட்டனர். சகல அதிகாரங்களும் மழவராயன் குடியினரின் நேரடியான கண்காணிப்பிலேயே நடைபெற்று வந்தன. (தகவல் திரு. தங்கவேலு - 1988) அதனைத் தொடர்ந்து வைகாசிப் பௌர்ணமியில் இடம் பெற்று வந்த அம்மன் சடங்கு பூசை வழிபாடுகளில் அக்கரைப்பற்று, பகுதியினரும் தங்கள் பங்களிப்பை நல்கிவந்ததை அறியமுடிகின்றது.

பனங்காடு மரப்பாலம் அமைக்கப்பட்டு 1947 இல் மக்கள் பாவனைக்காகக் திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் இடம்பெற்று வந்த அம்மன் சடங்கில் கலந்து கொள்ள வரும் பக்தர்கள் தொகையும் அதிகரித்து வந்தது. அக்காலத்தில், ஆலயத்தின் சார்பில் அக்கரைப்பற்று பகுதியினருக்கு விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் திரு. மானாகப்போடி, திரு. சம்புநாதப்போடி, திரு. சுப்பிரமணியம், திரு. ரெத்தினம் போன்ற பிரமுகர்கள் தலைமையில் பகுதிவழி பாட்டாளர்கள் வருகை தந்திருந்தனர்.

இவர்கள் மாட்டு வண்டியொன்றில் இளநீர், தேங்காய், பாளை, பழம் உள்ளிட்ட பூசைப் பொருட்களுடன் வந்திருந்ததாகவும், இவர்களை ஆலயத்தினர் அன்புடன் வரவேற்றுப்பூசைப் பொருட்களைப் பெற்று கௌரவித்ததாகவும் (கதவுதிறத்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினம் பூசையில் கலந்து கொண்ட பகுதி வழிபாட்டாளர்கள் மதியம் கவடாப்பிட்டியில் இடம்பெற்ற அன்னதானத்திலும் கலந்து சென்றதாக இவ்வாலய ஆலோசனை சபை உறுப்பினரான திரு. க. சின்னத்தம்பியவர்கள் குறிப்பிடுகின்றார் (நேர்காணல், 30.01.2015)

இவர் மேலும் கூறுகையில்அக்காலத்தில் (1948, 49களில்) ஆலயச் சடங்கின் போது அம்மானைக்காய், சிலம்பு, ஆகியனவற்றை மஞ்சள்தூள் கலந்து வெண்கலக்குரச்சியில் வைத்து விட்டு கப்புகனார் ஆலயத்திரையை மூடிவிட்டு வெளியில் வருவார் இதனைத் தொடர்ந்து ஆலயத்தினுள்ளே வெண்கலம் (சிலம்பு, அம்மானைக்காய்) குலுங்கும் ஓசைவரும் இதனைக் கலசம் ஆடுவது என்று அக்காலத்தில் கூறுவர். இதன் பின்னரேயே அக்குரச்சியை வெளியில் எடுத்து வருவர் இவ்வேளை, எனக்கு வயது பத்தாகும் (1948 இல்) 1960, 61 வரை இதனை அனுபவ பூர்வமாக நான் அனுபவித்து வந்துள்ளேன் இவ்வாறு இவர்குறிப்பிடுகின்றார்5.

1953 ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆலயத் தலைவராக விருந்து வந்த திரு. ஆறுமுகம் கதிரமலை கப்புனார் (கப்புகன் ஆட்சி) அவர்கள், தனது வயோதிபம் ஆலய வளர்ச்சி ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டவராய் ஆலய பரிபாலனம் திறம்படச் செயற்பட வேண்டி "பஞ்சாயசபை" ஒன்றை நிறுவ நடவடிக்கை மேற்கொண்டார்.

பனங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர்களும், மழவராயன் குடியினருமான, தனது மருமக்கள், மற்றும் பேரப்பிள்ளைகளுமான முறையே, திரு. க.வ. சிந்தாத்துரை திரு. மா. வேலுப்பிள்ளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க. குருநாத பிள்ளை, திரு. பெ. சண்முகம் திரு. க. இராமலிங்கம் ஆகியோரைப் பரிபாலகர்களாக நியமித்து ஆலயத்தையும் இதற்கு உரித்தான மானியத்தையும் பிரசித்த நொத்தாரிஸ் கு. காசுபதி அவர்களைக் கொண்டு *"5830 - 26.01.1953"* இலக்கநன்கொடை உயில் எழுதி வழங்கினார் *1860*ஆம் ஆண்டு ஆங்கில அரசால் சாசனமாகப் பதிவு செய்து வழங்கப்பட்ட நிலஅளவைப்படத்தை ஆதாரமாகக் கொண்டே இச்சாசன உறுதியை வழங்கியுள்ளார்.

இதன் மூலம் திரு. அறுமுகம் கதிரமலை கப்புகனார் அவர்கள் நன்கொடைச் சாசனமாக மழவராயன் குடிப் பெண்வழிச் சந்ததிகளுக்கு வழங்கினார் எனலாம். மேற்குறிப்பிட்ட "பஞ்சாயசபையைச் சேர்ந்தவர்களே, இச்சந்ததியினரின் சார்பில் கையேற்றனர்.

இதன்பிரகாரம், திரு.க.சிந்தாத்துரை அவர்கள் தலைவராகவும், திரு. க. குருநாத பிள்ளை உதவித் தலைவராகவும், நியமனம் பெற்றனர் இதேவேளை திரு. வேலுப்பிள்ளை அவர்கள் கப்புகனாகத் தெரிவு செய்யப்பட்டார் இப்பதவியானது ஆலய பூசை விடயங்களில் மட்டுமே அதிகாரம் கொண்டதாக விருந்தது ஆலயத் தலைவர், உபதலைவர் என்போர் ஆலய பரிபாலனத்தையும், காணிகளையும், பராமரித்து வந்தனர்6. இக்காலத்தில் அம்மன் குளம் நெற்செய்கை பண்ணப் படுவதில்லை குளமாகவே நிலவி வந்தது வயல்களில் மட்டுமே நெற்செய்கை இடம் பெற்று வந்தது.

இதேவேளை *1960, 61*களிலிருந்து இப்பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான கால் நடைகள் அம்மன் குளத்தையண்டி நிற்பதுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்செய்கைக்கும் இடையூறாக இருந்துவந்தன இதன் காரணமாக அம்மன். குளத்தையும் வயல் நிலமாக மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டது 1964 ஆம் ஆண்டளவில் இங்கினியாகலை குளத்திலருந்து பனங்காடு வாய்க்காலில் நீர் விநியோகம் இடம் பெறத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டில் இடம்பெறத் தொடங்கியது இதனைத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டில் மழவராயன் குளம் வயலாக மாற்றம் அடைந்தது (நேர்காணல் திரு. க. சின்னத்தம்பி அவர்கள் ஆலோசனைசபை உறுப்பினர் (15.07.2015))

இதனைத் தொடர்ந்து இவ்வாலய உரித்தாளர்களான மழவராயன் குடியிலுள்ளவர்கள் (விவாகமான ஆண், பெண்கள்) இக்காணிகளைச் செய்கை பண்ணி இதன் மூலம் கிடைத்து வந்தகுத்தகைப் பணத்தைக் கொண்டு ஆலயத்தைப் பராமரித்து வந்தனர்7. இக்காலத்தில் வருடா, வருடம், இடம்பெற்று வந்த ஆலயச் சடங்கு தொடர்பான கூட்டங்களில் கலந்து கொண்டு அக்கரைப்பற்றுப் பகுதியினர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வந்ததுடன் வருடாந்தம் சிறப்பாக நடைபெற்று வந்த வைகாசிப் பௌர்ணமி சடங்கிலும் பங்கேற்றுச் சிறப்பித்து வந்துள்ளதை அறிய முடிகின்றது8.

இக்காலத்தில், வருடா வருடம் பௌர்ணமிஅம்மன் சடங்கு இடம்பெற்று வந்த வேளைகளில் இவ்வாலயத்தினரது அழைப்பின் பேரில் திரு. மானாகப்போடி திரு. சம்புநாதப்போடி (ஊர்ப் போடியார்) ஆகியோர் தலைமையில் அக்கரைப்பற்று பகுதி வழிபாட்டாளர்கள் வண்டியில் பூசைப் பொருட்களுடன் மேள தாளங்கள் அடங்கலாக ஆலயம் வந்தடைந்து கதவு திறத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வில் கலந்து கொண்டு பூசை வழிபாடுகளில் பங்கேற்றுப் பின்னர், கவடாப்பிட்டியில் இடம்பெறும் அன்னதானத்திலும் கலந்து சென்றதை அறியமுடிகின்றது.

இவ்வாலயத்தில் "மழவராயன்குடி" பஞ்சாயத்தார் ஆட்சி ஆதாவது இக்குடியினர் ஒன்று கூடிப் பரிபாலனம் செய்த பஞ்சாயத்தார் ஆட்சி 1970 ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது, இதேவேளை, இப்பரிபாலன முறையில் சகல அதிகாரங்களும் வண்ணக்கரிடமே குவிந்திருந்தன. எனலாம் இதனிடையே இக்காலத்தில் ஆலயத் தலைவராக விருந்த (வண்ணக்கர்) திரு. சிந்தாத்துரை இவரது சகோதரரான திரு. க. குருநாதபிள்ளை ஆகியோருக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஆலயபரிபாலனம், நிர்வாகச் செயற்பாடு என்பன நலிவுற்றிருந்த போதும் குறுகிய காலத்தில் மீண்டும் இவை நன்னிலை எய்தின.

1971 ஆம் ஆண்டு பஞ்சாயத்தார் ஆட்சிக்கு அதாவது தனிவண்ணக்கர் பரிபாலன முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இக்குடி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆலய பரிபாலனசபை அமைக்கப்பட்டு ஆலயம் நிர்வகிக்கப்பட்டு வந்தது இப்பரிபாலன சபை முறையானது "மழவராயன்" குடியைக் சேர்ந்தவர்கள் நேரடியான பங்கினை வகிக்க வழிகோலியது. இதனடிப்படையில், வண்ணக்கர் ஒருவரும் இவருக்கு ஆலோசனைகள் வழங்க ஆலோசனை சபையொன்றும் அமைக்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட ஆலய பரிபாலனசபையில் முதல் வண்ணக்கராக திரு. க. சிந்தாத்துரையவர்கள் (1971 - 1987) தெரிவு செய்யப்பட்டு பதவி வகித்து வந்தார் இவருக்குப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க. குருநாதபிள்ளை (1987 - 1989) அவர்களும், இவர் காலமானதைத் தொடர்ந்து திரு. க. இராமலிங்கம் அவர்கள் வண்ணக்கராகத் தெரிவு செய்யப்பட்டார் இவ்வேளை (1989 இல்) இக்குடியைச் சேர்ந்தவர்களான திரு. க. தங்கவேலு, திரு. க. சின்னத்தம்பி, திரு. மு. ஜெகநாதன், திரு. க. கார்த்திகேசு ஆகியோர் ஆலோசனை சபையில் பதவியிலிருந்து வந்தனர்.

இக்கால கட்டத்தில் (1971 - 1990) ஆலய ருமானம் அதிகரித்து வந்ததுடன் ஆலய பரிபாலனமும் நன் ிலையில் இருந்து வந்தது பூசை, வழிபாடுகளும் மிகவு சிறப்பாகவும் ஒழுங்காகவும் இடம்பெற்று வந்தன. வருடா வருடம் நடைபெற்று வந்த வைகாசிப் பௌர்ணமி சடங்கில் பெருமளவு பக்தர்கள் கலந்து சிறப்பித்து வந்தனர். 1972க்கு பின்னர் ஆலயக் காணிகள் வெளியாருக்கும் ஏலத்தில் விடப்பட்டன. இதன் மூலம் பெற்றுக் கொண்ட வருமானத்தில் ஆலயம் சிறந்த முறையில் பராமரிக்கப் பட்டு வந்தது.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் 1989ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் நாட்டில் இடம் பெற்று வந்த இனவன்முறைகள் வன்செயல்கள், இனக்கலவரங்கள் ஆகியனஇப்பிரதேச மக்களது வாழ்வியலில் அசாதாரண நிலையினைத் தோற்றுவித்திருந்த போதும் இவ்வாலயச் செயற்பாடுகளில் (பூசை, வழிபாடு) பெரும் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. அம்மன் பேரருள் என்றே இதனைக் கருதமுடியும்.

இக்காலத்தில், இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களின் பட்டியலில், இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இந்து ஆலயமாக 10.11.1987 இல் இவ்வாலயமும் (இல. HA/5/AM/86) பதிவு செய்யப்பட்டது.

இவ்வேளை இவ்வாலயத்தில் ஆலயத்திருப்பணியொன்று இடம் பெற்று வந்தது பண்டைக் காலத்திவ் சிறியதொரு மண் ஓலைக் குடிசையாக விளங்கி வந்த இவ்வாலயம் பின்னர் கற்கோயிலாக மாற்றம் பெற்று இக்காலத்தில் கற்பக்கிரகம், மகாமண்டபம் என்பன நிர்மாணிக்கப்பட்டு சுற்றிவர மதிலும் கட்டப்பட்டு வந்தது இதேவேளை, ஆலயத்தை சூழ, பரிவாரத் தெய்வங்களான பிள்ளையார், நாகதம்பிரான், வயிரவர், என்போருக்கும் சிறிய ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டு வந்தன.

இக்காலத்தில் (1989 இல்) பட்டிநகர் கண்ணகி அம்மன் பேரில் "பட்டி நகர் கண்ணகியம்மன் தோத்திரம்" என்ற பக்தி இலக்கியம் உருவாகியிருந்தது இச்சிற்றிலக்கியத்தை இசைப் புலவர், சங்கீத பூஷணம் சி. கணபதிப்பிள்ளையவர்கள் இயற்றியிருந்தார். தம்பிலுவில் கண்ணகையம்மன் பேரிலும் இவர் பதிகங்கள் பாடியவர் ஆவார்.

தனது வாழ்நாள் முழுவதும் ஆன்மீகத் தொண்டும் சைவத் தொண்டும் புரிந்து வந்த இப்பெரியாரிடம் 1989 ஆம் ஆண்டில் என்னால் எழுதி முடிக்கப்பட்டுக் கையெழுத்துப் பிரதிகளாகவிருந்த திருக்கோவிலில் சித்திரவேலாயுதர் மற்றும் பட்டி நகர்கண்ணகி ஆகிய நூல்களை அவரது மாணாக்கர்களில் ஒருவன் என்ற உரிமையுடன் சிறப்புரை, வாழ்த்துரை என்பன எழுத்தருமாறு வேண்டிக் கையளித்தேன்9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து சில நாட்களின் பின்னர் "திருக்கோவிலில் சித்திரவேலாயுதர்" நூலுக்கு "சாற்றுகவி" எழுதித்தந்ததுடன் பட்டி நகர் கண்ணகி நூலுக்கு மேற்படி சிற்றிலக்கியத்தை எழுதித் தந்ததுடன் இதனை நூலுடன் சேர்த்து வெளியிடுமாறும் கேட்டுக் கொண்டார். 1986 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரை என்னால் எழுதி முடிக்கப்பட்டுக் கையெழுத்துப் பிரதிகளாக விருந்த இந்நூல்களிரண்டையும் அச்சில் வெளியிடுவதற்கு பல தடவை முயற்சிகள் மேற்கொண்டும் என்னால் முடியாது போயிற்று, இறைவன் திருக்குறிப்பென்றே இதனைக் கருதுகின்றேன்.

சங்கீத பூஷணம் திரு. சி. கணபதிப்பிள்ளையவர்கள் இக்கண்ணகையம்மன் பேரில் பாடிய "கண்ணகி அம்மன் தோத்திரம்" இலக்கியமானது விநாயகர்காப்பு முருகன் துணை, கலைமகள் கலித்துறை, ஆகியனவற்றுடன் தொடங்கி பதினொரு எண்சீர் பாக்களால் அமையப்பெற்றுள்ளதுடன், வாழ்த்துப் பாவுடன் நிறைவு பெறுகின்றது. இச்சிற்றிலக்கியத்தில், இவ்வாலயத்தில் குடிகொண்டுள்ள தேவியைப் புலவர் இவ்வாறு போற்றுகின்றார்.

"அன்புமன மலர்க்கோயில் அமர்ந்திருந்து
அகில மெல்லாம்அணைத்துக் காத்துப்
பண்புமணம் பொலியுமுயர் பட்டி நகர்
மீதுறைந்து பணிவோர்க் கெல்லாம்
இன்புடனே காட்சிநல்கி இக பரத்தும்
அடியர் துயர் எல்லாம் போக்கும்
என்புதிய தேவமலர்க் கொழுந்தேயுன்
இணை மலர்த்தாள் போற்றி போற்றி

(பாடல் 1 : வரி 1 - 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு போற்றும் புலவர் அம்மாதாயே, தம்பிலுவில் பழம் பதியிலும், பட்டி நகரிலும் உண்மை எனும் கற்புநெறி உலகம் போற்றும் கற்புக்கரசியாக நீயே உறைந்திருந்து அருள் புரிந்து வருகின்றாய் என்று மேலும் இத்தேவியைப் புலவர் போற்றுகின்றார்.

*"உண்மையெனும் கற்புநெறி உலகம் போற்ற*
*உயிராறுகோவலரின் உணர்வை மீட்டுத்*
*திண்மையெனும் திருமதுரைத் தெய்வமாகித்*
*தேவர்களும் முனிவர்களும் தினமும் வாழ்த்தத்*
*தண்மை மிகும் தம்பிலுவில் தலத்தில் மேவித்*
*தழைத்து வளர்செந்நெல் மழை தந்து பாரில்*
*வண்மை நிறை பட்டிநகர் வாழும் எங்கள்*
*மாதரசி கண்ணகியுன் மலர்த்தாள் போற்றி*
*(பாடல் 5 : வரி 1 - 8)*

1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில், இவ்வாலயத்தில் மழவராயன் குடியைச் சேர்ந்த திரு. க. இராமலிங்கம், திரு. கந்தக்குட்டி கமலநாதன் ஆகியோர் கப்புகனாகப் பணிபுரிந்து வந்துள்ளனர். 1990 ஆம் ஆண்டின் முற்பகுதியில், இவ்வாலயத்தின் முன்னுரிமை பெற்றவர்களான பாண்டிய நாட்டு மழவராயன் குடியினரின் மரபுரிமை மறுக்கப்பட்ட நிலையில் இவ்வாலயமும், ஆலய பரிபாலனமும் ஒருபிரிவினர் வசமானது 2011 ஆம் ஆண்டில் மீண்டும் ஆலய மரபுரிமை இக்குடியினர் வசமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை *1990* ஆண்டு தொடக்கம், *2011* ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில், காத்திரமான ஆலயப் புனர் நிர்மாணப் பணியொன்று இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே மடாலயமாக விருந்து வந்த *(1989* இல்) அம்மன் ஆலயம் இடிக்கப்பட்டு திராவிடக் கட்டிடக்கலையை ஒட்டியதாக ஆகம முறையிலான விமானம் உள்ளிட்ட கருவறை, அர்த்த மண்டபம், என்பன நிர்மாணிக்கப்பட்டு முன்பிருந்த மகா மண்டபமும் செப்பனிடப் பட்டது. குறிப்பாக ஒரு சிறப்பக்கூடமாக மகா மண்டபம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இம்மகா மண்டபத் தூண்களில் கலையம்சம் நிரம்பப் பெற்ற அழகிய மங்கையர் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மிகவும் நேர்த்தியாகவும், திராவிடக் கலை மரபைப் பிரதிபலிப்பனவாகவும் காட்சியளிக்கும் இச்சிற்பங்கள், காண்பவர் உள்ளங்களில் பக்தி உணர்வையும், மன அமைதியையும், அளிக்க வல்லதெய்வீகக் கலைவடிவங்கள் எனலாம் மேலும் அர்த்த மண்டபவாயலில் அகல் விளக்கை ஏந்தியவாறு இரு மங்கையர் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களின் இருமருங்கிலும் துவாரசக்தி சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒருகையில் வாள்மறுகரத்தில் தண்டாயுதம் ஏந்தியவாறு காணப்படும் இச்சிற்பங்களிரண்டும் கலையம்சம் கொண்டவைகளாகும்.

மேலும் பரிவாரத் தெய்வங்களாக வினாயகர், சப்தகன்னியர், ஐயனார், வயிரவர், சந்தர சூரியர், நாகதம்பிரான் என்போருக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பரிவாரத் தெய்வங்கள் உள்ளிட்ட அம்மன் ஆலயக் கட்டிட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்து, வெள்ளையிடப்பட்டு வர்ணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சுவேலைகள் தொடங்கும் வேளையில் 2011 ஆம் ஆண்டில் இவ்வாலயம் மீண்டும் மரபுரிமையினரான மழவராயன் குடியினர் வசமானது.

இதனைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் 09.12.2011 இல் நடைபெற்ற பரிபாலன சபை உறுப்பினர்கள் தெரிவில் வண்ணக்கராக (தலைவர்) திரு. க. கார்த்திகேசு அவர்களும் செயலாளராக திரு. சி. தியாகராசா, பொருளாளராக திரு. க. இராசசிறி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் ஆலோசனை சபை உறுப்பினர்களாக திரு. க.நாராயணன், திரு. மு. குழந்தை வடிவேல், திரு. மு. அழகையா என்போரும், மழவராயன் குடியைச் சேர்ந்தவரான திரு. க.சின்னத்தம்பி அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். புதிய பரிபாலன சபையினரின் துரித செயற்பாடுகளின் பயனாக வர்ணப் பூச்சுவேலைகள் நிறைவு பெற்று ஆலயமும் புதுப்பொலிவு பெற்றது.

இதனைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் சிறப்பான முறையில் நடந்தேறியது. பெருந்திரளான மக்கள் இதில் கலந்து கொண்டனர். இதேவேளை 2011 ஆம் ஆண்டு முதல் இவ்வாலயத்தில் கப்புகனாகப் பணிபுரிந்து வந்த திருகுரவீந்திர நாதன் அவர்கள் ஆலயக் கும்பாபிஷேகம் இடம் பெற்றதைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் கப்புகனாக ஆலயப் பரிபாலன சபையினரால் நியமனம் வழங்கப்பட்டு ஊதியமும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2014 இல் புதிய ஆலயபரிபாலன சபை அமைக்கப்பட்டவேளை தொடர்ந்து வண்ணக்கராக திரு. க. கார்த்திகேசு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்டார். இவருடன் உபதலைவராக திரு. சி. தியாகராசா செயலாளராக திரு. மு. ஜெகநாதன் பொருளாளராக, திரு. க. இராசசிறி உபசெயலாளராக, திரு. ம. வாசவன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் ஆலோசனைசபை உறுப்பினர்களாக திரு. க. சின்னத்தம்பி, திரு. நா. விஜயன், திரு. மு. அழகையா, திரு. மு. குழந்தை வடிவேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் இதனைத் தொடர்ந்து ஆலய பரிபாலனம் பராமரிப்பு என்பன சிறப்பான முறையில் இடம் பெற்று வருவதுடன் பூசைவழிபாடுகளும் செழிப்புடன் விளங்கி வருகின்றன.

இவ்வாலயத்தில் 2013 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து வருடா வருடம் பௌர்ணமி அம்மன் சடங்கு உற்சவம் சிறப்பான முறையில் இடம் பெற்று வருவதுடன் பரிவாரத் தெய்வங்களுக்குத் தினப்பூசைகளும், வெள்ளிக்கிழமை மற்றும் விஷேட தினங்களிலும் சிறப்பான முறையில் பூசை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன. மேலும் தைப்பூசப் பொங்கல் சித்திரைப் பொங்கல், புதிர்ப் பொங்கல், கார்த்திகை விளக்கீடு பொங்கல் நிகழ்வுகளும் இவ்வாலயத்தில் இடம்பெற்று வருகின்றன.

குறிப்புக்கள்

1) HISTORY OF CEYLON - Page 141 by Father S. G. PERERA.
2) றிட்ஜ்வே காலத்தில் (1895 - 1903) மட்டக்களப்பு நாவலாறுடன் தார்றோட்போடப்பட்டு இணைக்கப்பட்டது (இலங்கை வரலாறு பிரித்தானியர் காலம் பக்கம் 140 சி.எஸ். கதிர்காமநாதன் - 1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) இதற்குப் பிற்பட்ட காலத்தில் 1928, 29களில் இவ்வாலயத்தில் சிவஸ்ரீ சிவலைக் குருக்கள் என்பவர் அர்ச்சகராகக் கடமை புரிந்து வந்துள்ளார். 1936 இல் இவ்வாலயம் இடிக்கப்பட்ட வேளையில் இங்கிருந்த பிள்ளையார் விக்கிரகம் தற்பொது பனங்காடு சிவன் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் சிறியதொரு ஓலைக் குடிசையிலான ஆலயம் அமைக்கப்பட்டு பிரதிஸ்டை, செய்யப்பட்டது (தகவல் திரு. க. இராமலிங்கம் வ.வி - 1998)

4) கி.பி 1799 ஆம் ஆண்டு பிரதான நகரங்களில், சிவில் கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்வதற்கென கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, சிலாபம், ஆகிய இடங்களில் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. (பிரித்தானியர் காலம் பக்கம் 41, சி.எஸ். கதிர்காமநாதன் - 1967)

5) பனங்காடு மழவராயன் குடியினரான இவர் தனது பாட்டனாரான திரு. ஆ. கதிரமலை கப்புகனார் காலத்திலிருந்து இவ்வாலயத்துடன் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தவர் என்பதை அறிய முடிகின்றது.

6) திரு. க. தங்கவேலு அவர்கள், ஆலோசனைசபை உறுப்பினர் நேர்காணல் - 1989 ஆம் ஆண்டு

7) 1969 ஆம் ஆண்டுவரை நெற்காணிகள் யாவும் குடியினர்களே குத்தகைக்கு எடுத்து செய்கை பண்ணி வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) இதேவேளை அக்கரைப்பற்று பகுதி வழிபாட்டாளர் ஆலய வண்ணக்கர்தலைவர் தெரிவுகளில் பங்கு கொள்ளாமலும் ஆலய பரிபாலனம் நிர்வாகம் ஆகியனவற்றில் எவ்வித உரிமைகளும் அற்றவர்களாகவே கணிக்கப்பட்டுவந்தனர்.

9) சங்கீத பூஷணம் திரு. சி. கணபதிப் பிள்ளையவர்கள் கோளாவில் கிராமத்தில் பிறந்து தனது ஐந்தாவது வயதில் தாய் தந்தையருடன் திருக்கோவில் கிராமம் சென்றடைந்து குடியேறியவர் இவர் இசை ஆசிரியர் மட்டுமன்றி நாட்டுக் கூத்துக்கள் இசை நாடகங்கள், மேடை நாடகங்கள் போன்ற இலக்கிய வடிவங்களை உருவாக்கிய ஒப்பற்ற கலைஞரும் ஆவார் அத்துடன் பல நூற்றுக் கணக்கான இசைப் பாடல்களையும் (கர்நாடக) பக்தி இலக்கியங்களையும் இவர் எழுதியுள்ளார். இவற்றில் ஒன்றே இவர் இக்கண்ணகி பேரில் பாடிய பட்டிநகர் கண்ணகி அம்மன் தோத்திரம் இலக்கியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலய வரலாற்று தடயங்கள்

பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலய வரலாற்றில் இவ்வாலயத்தின் தொன்மை பற்றித் தெளிவுறுத்தும் தடயங்களாக தொல்பொருட்கள் மற்றும் இலக்கியத்தொல்லியல் சான்றுகள் என்பன காணக்கிடைக்கின்றன. இவற்றில் உலோகப் பொருட்களான அம்மானைக்காய், கைச்சிலம்பு, காற்சிலம்பு ஆகியன அம்மன் வழிபாட்டில் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தனவாகும். புனிதப் பொருட்களான இவை இவ்வாலயத்தில் பெருமளவு காணக்கிடைக்கின்றன. இவற்றில் சில பழுதடைந்த நிலையில் உள்ளன.

குறிப்பாக கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையுள்ள கால கட்டத்தைச் சேர்ந்த இப்புனிதப் பொருட்கள் இவ்வாலயத்தில் புனிதத் தன்மை கொண்ட சடங்குப் பொருட்களாக நிலவி வந்துள்ளன.

இன்றும் கூட வருடாந்தம் ஆலயத்தில் இடம்பெற்று வரும் வைகாசிப் பௌர்ணமி அம்மன் சடங்கு காலத்தில் மூலவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருக்கும் கண்ணகை அம்மனுக்கு முன்னால் அம்மானைகாய், சிலம்பு, என்பன பூசைக்குரிய புனிதப் பொருட்களாக வெண்கலத் தட்டொன்றில் வைக்கப்பட்டு அபிஷேகம், பூசைகள் பெற்றுவருவதும் மரபாகவிருந்து வருகின்றது. இதேவேளை, இவ்வாலயத்தில் சேமிக்கப்பட்டு வைத்திருந்த ஏனைய உலோகப் பொருட்களான கைச்சிலம்பு ஐந்து காற்சிலம்பு ஒன்பது அம்மானைக்காய் பதினொன்று ஆகியன இவ்வருடம் இடம்பெற்ற அம்மன் சடங்கு உற்சவ (2015)த்தின் போது கண்ணாடிப் பெட்டியொன்றில் வைத்து காட்சிப்படுத்திப் பக்தர்களின் தரிசனத்திற்கென வைக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நெடுங்காலமாகக் கைவிடப்பட்டிருந்த இவ்வழக்கம் மீண்டும் இவ்வாலயத்தில் நிலவத் தொடங்கியமை அம்மனின் திருக்குறிப்பு என்றே கருத வேண்டியுள்ளது வரலாற்றுக் தொன்மை மிக்க இப்புனிதப் பொருட்கள் அக்காலத்தில் போடிமார் என்ற செல்வந்தர் வணிகர், பிரபுக்கள் (பெருமகன்) என்போரினாலும், வன்னியர் என்ற சிற்றரசர்களாலும் மேலும் கண்டி மன்னர்களது அரச கௌரவமாகவும் இவ்வாலயத்துக்கு தானங்களாக வழங்கப்பட்டு வந்துள்ளன. பிற்காலத்தில் (1950க்கு பின்) இப்புனிதப் பொருட்களில் வெள்ளி வெண்கலத்தினாலான சில பொருட்கள் காணாமல் போனது பற்றியும் கூறப்படுகின்றது.

**அம்மானைக்காய்**

அம்மானைக்காய் என்பது பழந்தமிழ் மகளிர் விளையாடும் ஒரு விளையாட்டாகும். இதனை பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறியலாம் சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டம் வாழ்த்துக் கதையில் காணப்படும் அம்மானை வரிப்பாடல்கள் எமக்குக் கிடைக்கும் காலத்தால் முந்திய அம்மானை வரிப்பாடல்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் உருவான சிலப்பதிகாரத்தில் கண்ணகி இவ்வம்மானைக்காயால் விளையாடுவது பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இதன் காரணமாக பண்டைய மட்டக்களப்பு அம்மன் ஆலயங்களில் இவ்வம்மானைக்காய்கள் புனிதத் தன்மை கொண்ட சடங்குப் பொருட்களாக கருதி வைக்கப்பட்டு வந்துள்ளன. இதனுள் மணிகள் காணப்படும் அதிலிருந்து ஒருவித ஒலிகள் உண்டாகும். அம்மானைக்காய் விளையாட்டுப் பற்றி திருவாசகத்தில் திருவம்மானை என்னும் பகுதியில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிலம்புகள்**

இவ்வாலயத்தில் காணக்கிடைக்கும் ஐந்து கைச்சிலம்புகளில் மூன்று வெண்கலம் கலந்த உலோகத்தினாலானவை கலையம்சம் கொண்ட இவற்றை உற்றுநோக்கும் கால் உள்ளம் பக்திப் பரவசம் அளிக்கும் இவை மூன்றும் புனிதப் பொருட்களாம் காற்சிலம்பு என்பது சங்ககால தமிழக மக்களால் இரண்டு கால்களிலும் அணியப்பட்ட அணிகலனாகும் கண்ணகியின் கால்களில் அணிந்திருந்த சிலம்பைக் கொண்டே இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பெருங் காப்பியத்தை இயற்றினார். அதாவது சிலம்பு காரணமாகவே சிலப்பதிகாரம் உருவானது.

காற்சிலம்புகளின் உட்புறம் விலைஉயர்ந்த மணிகளால் நிரப்பப்பட்டிருக்கும் இவ்வணிகலன் நடக்கும் போது ஒருவித ஒலியை எழுப்பும் நடனமாடும் மாதர்களால் அணியப்படும் சிலம்பானது ஆடும் போது தாளத்திற்கேற்ப ஒலியை எழுப்பவல்லது இத்துணை சிறப்புக்கள் வாய்ந்த சிலம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் புனிதத் தன்மை கொண்ட சடங்குப் பொருளாக மட்டுமே விளங்கி வருகின்றது இவ்வாலயத்தில் இன்று ஒன்பது காற்சிலம்புகள் மட்டுமே காணக்கிடைக்கின்றன. இவற்றில் எழு பழுதடைந்த நிலையில் உள்ளன.

இவை தவிர முக்கோண வடிவிலானகுளாய் ஒன்று, இது பழமை வாய்ந்ததுடன் பரல்கள் உள்ளடங்கப்பட்டதாகும். கண்டியர் காலத்தை சேர்ந்த கலையம்சம் நிரம்பப்பெற்றசட்டம் ஒன்றும் (உலோகம்) வெண்கலத்திலான கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டா ஒன்றும் காணக்கிடைக்கின்றன.

## அம்மன் திருவுருவம்

கிழக்கிலங்கையிலுள்ள கண்ணகை அம்மன் ஆலயங்களில் காணப்படும் விக்கிரங்களில் பல்வேறு அம்சங்கள் கொண்ட அழகிய வடிவங்கள் அமைந்த வதனங்கள் காணப்படுகின்றன. இதேவேளை மூலவராக இன்று நாம் காணும் பட்டிநகர் கண்ணகை அம்மனை கண் குளிரக் கண்டு தரிசிக்குமிடத்து பக்தி பரவசம் தோன்றும் பாண்டிய கலை மரபை வெளிப்படுத்தும். இவ்வம்மன் கி.பி. 1750க்கும் 1760க்கு மிடைப்பட்ட காலத்தில் பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்டு கோவில்மேடு (இறக்காமத்துக்கு அருகில்) அம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தது என்றும் பின்னர் கி.பி. 1770க்கு பிற்பட்ட காலத்தில் இங்கு எடுத்து வரப்பட்டு இவ்வாலயத்தில் சேர்க்கப் பட்டதாகவும் பரவணிக் கல்வெட்டு குறிப்பிடும் இதற்கு முற்பட்ட காலத்திலிருந்து வழிபடப்பட்டு வந்த கண்ணகி விக்கிரமும் இவ்வாலயத்தில் உள்ளதாக கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியங்கள்

பட்டிநகர் கண்ணகை அம்மன் பற்றிய இலக்கியங்கள் சில இன்று காணக்கிடைக்கின்றன. இவற்றின் வாயிலாக இவ்வாலயத்தின் வரலாற்றுத் தொன்மங்கள் பற்றி ஓரளவு அறிய முடிகின்றது இதேவேளை இக்கண்ணகை அம்மன் ஆலயம் பற்றிய வரலாற்று நூல் எதுவும் இதுவரை வெளிவந்ததாகக் தெரியவில்லை ஆனால் இக்கண்ணகி பற்றிய வாய்மொழிக் கதைகள் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இப்பிரதேசத்தில் பிரபல்யம் பெற்றதாய் நிலவி வந்துள்ளன என்பதையும் அறிய முடிகின்றது.

1971 ஆம் ஆண்டில் அட்டப்பள்ளம் பெரியார் திரு. சி. கணபதிப் பிள்ளையவர்கள் தொகுத்து வெளிவந்த "மகாமாரித்தேவி திவ்வியகரணி" என்னும் நூலில் இக்கண்ணகை அம்மன் மீது பாடப்பட்டவைகளாக பட்டிமேட்டு கண்ணகை அம்மன் காவியம், பட்டிமேட்டு, கண்ணகை அம்மன் மழைக் காவியம், பட்டிமேடு கண்ணகை அம்மன் "பொற்புறாவந்த காவியம்" ஆகியன அடங்கியுள்ளன. இவ்விலக்கியங்களை இயற்றிய புலவர்கள் பற்றி இந்நூலில் குறிப்பிடப்படவில்லை.

இவை யாவும் ஏட்டுச் சுவடுகளிலிருந்து தொகுக்கப்பட்டவை யெனவும் பட்டிமேட்டு கண்ணகை அம்மன் மழை காவியம், பட்டிமேட்டு கண்ணகை அம்மன் காவியம் ஆகிய ஏட்டுப் பிரதிகளை பனங்காடு சிவத்திரு தம்பிமுத்து ஆறுமுகக் குருக்கள் தந்துதவிய தாகவும், பொற்புறா வந்த காவியம் ஏட்டுப் பிரதி அக்கரைப்பற்று திரு. சுப்பிரமணியம் அவர்களிடமிருந்து பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகவும் தொகுப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார் இம்மூன்று இலக்கியங்களிலும் விரவிக்கிடக்கும் வரலாற்றுத் தகவல்கள் வாயிலாக இவ்வாலயத்தின் தொன்மை புலப்படும்.

இதேவேளை 1988, 89களில் இவ்வாலயம் பற்றி நூலொன்றினை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருந்த காலத்தில் மேற்குறிப்பிட்ட மூன்று இலக்கியங்களின் மூலப் பிரதிகளான ஏட்டுச் சுவடிகள் காணக்கிடைக்கவில்லை 1950, 51களில் இவ்வாலயத்தில், கண்ணகி வழக்குரை, பொற்புறா வந்த காவியம் அம்மன் காவியம், குளிர்த்திப் பாடல்கள் என்பன ஏட்டுச் சுவடிகளாக நிலவி வந்துள்ளன. என்பதை உறுதி செய்ய முடிகின்றது (தகவல் நேர்காணல் வாயிலாக திரு. க. கார்த்திகேசு, வண்ணக்கர் 15.07.2015, திரு. க. சின்னத்தம்பி ஆலோசனைச் சபை உறுப்பினர்கள் 15.07.2015)

1989 ஆம் ஆண்டில் இவ்வாலய ஆலோசனை சபையில் உறுப்பினர்களில் ஒருவராகப் பதவி வகித்து வந்த திரு. தங்கவேலு அவர்கள் மூலமாக இவ்வாலயத்திலிருந்த ஏட்டுச் சுவடிகள் பல காணக்கிடைத்தன. இவற்றில், முக்கியமானதாகக் கருதப்படும் மட்டக்களப்பு கண்ணகி இலக்கியமான "கண்ணகி வழக்குரை" முழுமையானதாக விளங்கியிருந்தது இவ்வேட்டுப் பிரதியானது திரு. சிகு. கந்தையா என்பவரால் பிரதி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நிலவி வரும் "கண்ணகி வழக்குரை" இலக்கியத்தின் பிரதியாக இது விளங்கியிருந்தது.

இதேவேளை, அம்மன் பத்ததி ஏட்டுச் சுவடியொன்றும் காணக்கிடைத்தது இதில், அம்மன் பூசை முறைகள் பற்றியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் மலைமகளாக இங்கு குடிகொண்டுள்ள கண்ணகை அம்மனை உருவகித்து அம்மனின் அங்கலட்சண வர்ணனைகள் மற்றும் கிரியா முறைகள் பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது பரவணிக் கல்வெட்டு சான்று மூலமாக அக்காலத்தில் (கி.பி. 1750 - 1780) பத்ததி முறையில் இவ்வாலயத்தில் பூசைகள் இடம்பெற்று வந்துள்ளதை அறியமுடிகின்றது எனது பார்வைக்கு காணக்கிடைத்த மேற்படி அம்மன் பத்ததி ஏட்டுச் சுவடி சின்னத்தம்பி மகன் சிவலைக் குருக்கள் என்பவரால் பிரதி செய்யப்பட்டதாக சுவடியில் குறிக்கப்பட்டுள்ளது.

இக்காலத்தில் இவ்வாலயத்தில் நிலவி வந்த மற்றொரு ஏட்டுச் சுவடி அம்மன் குளிர்த்தியாகும். இவ்விலக்கியமானது கருங்கொடித்தீவு பிள்ளையார் வெற்றி விருத்தத்துடன் தொடங்கி "செந்நெல்விளையும் "பட்டிநகர் கண்ணகி மேல் பாடப்பட்ட குளிர்த்தி பாடலாகும்" என்று தொடங்குகின்றது இவ்வாலயத்தில் கண்ணகையம்மன் வழிபாடு கி.பி. பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளில் பக்தியின் அடிப்படையில் பூசை, மடை, படையல் என்பனவற்றுடன் மன்றாட்டமாகவே இடம்பெற்று வந்துள்ளது. கி.பி. பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலேயே, காவியங்கள், கண்ணகி வழக்குரை பாடப்பட்டு வந்ததும், பூசை வழிபாடுகள் பத்ததி முறையிலான வழிபாடுகளும் நிலவி வந்துள்ளன. இதனைத் தொடர்ந்து கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் குளிர்த்தி பாடலும் இடம்பெற்று வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவணங்கள்**

1989 ஆம் ஆண்டில் இவ்வாலயத்தில் காணக்கிடைத்த பனையோலைச் சடங்கள் (பட்டயம்) இரண்டும் குறிப்பிடத்தக்கன இவற்றையும் வரலாற்று ஆவணங்களாக கருதமுடியும் இவ்வாலயத்துக்கு நேர்த்திக் கடனாகப் பெறுமதிமிக்க தானப் பொருட்கள் வழங்கப்பட்டதை இவை உறுதி செய்வதுடன் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இருவரால் இவை வழங்கப் பட்டுள்ளன. என்பதையும் உணர்த்துகின்றன. கதிரமலை முருகன் மேலும் திருக்கோவில் சுப்பிரமணிய சுவாமி மேலும் பாராட்டுக் கோவை போல் அமைந்த வாசகங்கள் ஓலைச் சட்டங்களில் இடம்பெற்றுள்ளன.

கண்டி மன்னர் காலம் தொட்டு இவ்வாலயத்துக்கு உரித்தானதாக விருந்து வந்த நிலங்களுக்கு (குளம், வயல், உள்ளிட்ட) ஆங்கிலேயர் ஆட்சியின் போது சட்டபூர்வமாக வழங்கப்பட்ட நிலங்கள் பற்றிய நில அளவைப்படம் அக்காலத்தில் இவ்வாலயத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராகவும், குடி முதல்வராகவும் விளங்கியிருந்த “கதிர் வேலாப்போடி நல்லதம்பி கப்புகன் பெயரில் இது வழங்கப்பட்டது (நில அளவைப்படம் இல. 53813 - 31.12.1860.) மற்றும், கதிரமலை கப்புகனின் 26.01.1953 - 5830 இலக்க நன்கொடை உயில் ஆலய **முழுக்காணிகள்** நில அளவைப்படம் 1980 (138 ஏக்கர்) ஆலயப்பதிவு HA/5/AM/86 ஆலய வயல் நிலம் 64 ஏக்கர் P.L.R பதிவு 1953 என்பன காணக்கிடைக்கும் ஆவணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொற்புறா சின்னங்கள்

பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயத்தில் சேமிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் பொற்புறா சின்னங்களிரண்டும் வரலாற்று சிறப்பினைக் கொண்ட புனிதப் பொருட்களாகும். கலையம்சம் நிரம்பப் பெற்ற இச்சின்னங்களிரண்டும் கி.பி. 1590க்குப் பிற்பட்ட காலத்தில் குறிப்பாக கி.பி. 1590க்கும் 1597க்கு மிடைப்பட்ட காலத்தில் மங்கலப் போடிகப்புகனால் சீதவாக்கையிலிருந்து எடுத்து வரப்பட்டு இவ்வாலயத்தில் வழிபாட்டுக்குரிய புனித சின்னங்களாக வைக்கப்பட்டதை சீதவாக்கை மரபுக் கதை கூறும் பொற்புறா வந்த காவியம் மூலமாகவும் இதனை அறியலாம்.

## கவடா பிட்டியும் பிள்ளையார் ஆலயமும்.

கவடாப்பிட்டி என்பது பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயத்துக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ள மேட்டுப் பகுதியாகும் இவ்வாலயத்துக்கு உரித்தாகவிருந்து வந்த கவடாப்பிட்டி, ஆதி காலத்தில் பட்டிமேடு பகுதியில் வாழ்ந்திருந்த மழவராயன் குடியினர், பிற்காலத்தில் அங்கிருந்து இடம்பெயர்ந்து பனங்காடு கிராமத்தில் குடியேறியதைத் தொடர்ந்து இவ்வாலயக் கப்புகனாரின் தங்கும் இடமாக இருந்து வந்தது என்பதை அறிய முடிகின்றது.

கவடாப்பிட்டியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள புளிய மரமொன்றின் கீழ் ஒரு கற்பீடத்தில் பிள்ளையார் ஒன்று காணப்படுகின்றது கருங்கல்லிலாலான இலிங்க வடிவான இப்பிள்ளையார் மிகவும் பழமை வாய்ந்தவராகக் காணப் படுகின்றார் திறந்தவெளிக் கோயிலாக காட்சியளிக்கும் பிள்ளையார் ஆலயத்தின் அருகில் வட கிழக்கு பக்கத்தில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாறைக்குன்று அமைந்துள்ளது இதில் ஆங்காங்கே தொல்லியல் எச்சங்கள் காணப்படுகின்றன. வருடாந்த அம்மன் சடங்கு குளிர்த்தி இடம்பெற்று அடுத்த தினம் கவடாப்பிட்டி பிள்ளையாருக்கு சிறப்பான முறையில் பொங்கல் பூசை இடம்பெறுவது நீண்ட நாள் வழக்காக இருந்து வருகின்றது.

2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26 ஆம் திகதியன்று இடம்பெற்ற சுனாமியைத் தொடர்ந்து தம்பட்டை ராமத்தில் வாழ்ந்திருந்த சில குடும்பங்கள் இங்கு குடியேற்றப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதி சிறியதொரு மக்கள் குடியிருப்பாக மாறி வளர்ச்சியுற்று வருகின்றபோதும் இவ்வாலயத்தின் வரலாற்றுத் தொன்மையைத் தெளிவுறுத்தும் சான்றாகவும் மிளிர்ந்து வருகின்றதெனலாம்.

## அம்மன் ஆலய வழிப்பிள்ளையார்

பனங்காடு, சாகாமம் பிரதான வீதியருகே அம்மன் ஆலயம் செல்லும் பாதையின் தெற்குப் பக்கமாக சிறியதொரு பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள சிவலிங்க வடிவிலான பிள்ளையார் மிகவும் பழமை வாய்ந்தவராவார் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதி வரை இப்பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள இடத்தின் அருகாமையிலிருந்த மிகப் பழமை வாய்ந்த விரமரத்தின் கீழிருந்த கற்பீடத்தில் வீற்றிருந்து, அக்காலத்தில் பிரதான வீதி யூடாக பிரயாணம் மேற்கொண்டு வந்த வழிப்போக்கர்கள் மற்றும் விவசாயிகள் என்போரின் வழிபாட்டுக் குரியவராக விளங்கிவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இப்பிள்ளையார் மீது, அளவற்ற பக்தியும், நம்பிக்கையும் கொண்டிருந்தவரான பனங்காடு திரு. க. வெள்ளைக்குட்டி என்ற பெரியவர் இப்பிள்ளையாருக்கு நேர்த்திக் கடனாக வீரமரத்தின் அருகாய் சிறியதொரு ஆலயம் அமைத்து சிவலிங்கப் பிள்ளையாரைப் பிரதிஸ்டை, செய்தார் அண்மைக் காலத்தில் இவரின் சந்ததியினரால் (மக்கள்) இவ்வாலயத்துக்கு அருகாமையில் புதிதாகச் சிறியதொரு ஆலய நிர்மாணப் பணி தொடங்கப் பெற்று ஆலயத் திருப்பணி இடம்பெற்று வருகின்றது.

பண்டைய சாகாமம் நகரில் பண்டைக் காலத்தில் சிவவழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்ததை சாகாமத்தின் கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு புறநகர் பகுதிகளில் பொத்தானை கிழவியூர் மலை, வம்மியடி, காஞ்சிரங்குடா, ஊரக்கை, மன்னன் குளம், அளிக்கம்பை, பெரிய தளாவை முதலான இடங்களில் வயல் மேட்டுப் பகுதிகளில் காணக்கிடைத்த பழைய சிவலிங்கங்கள் தெளிவுறுத்துகின்றன. இவ்வாறு மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் கடந்த காலங்களில் காணக் கிடைத்த சிவலிங்கங்கள் பல பிள்ளையார்களாக வழிபடப்பட்டு வருவதையும் காணமுடிகின்றது.

பண்டைக் காலத்தில் (கி.மு. 5 ஆம் நூற்றாண்டு கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை) பண்டைய சாகாமம் நகரின் வடக்கு புறநகர் பகுதிகளிலொன்றான பட்டிமேடு பகுதியில் நிலவி வந்த சிவலிங்கங்களில் இவ்வழிப் பிள்ளையாரும் ஒருவராவார். பட்டிமேடு மேற்கு (அளிக்கம்பை வீதி வரை) கண்ணகிபுரம் கவடா போன்ற பகுதிகள் பண்டையசாகாம நகரின் வடக்குப் புறநகர் பகுதியில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிநகர் கண்ணகை அம்மன் காவியம்

1. திருமருவு பூலோக மெங்கினும் வாழ்கின்ற
   செல்விகண் ணகைமீது சிந்துதமி ழோதத்
தருமருவு தந்திமுக னுங்குமர வேளுஞ்
   சடையத னிற்புவியை வைத்தசங் கரனும்
மருமருவு வாலைசர சோதிமா லயனும்
   வடதேச முறைமதுரை மீனாட்சி யம்மனும்
மருமருவு வள்ளிதெய் வானையுட னென்னாளும்
   மலரடிக ளொருபொழுதும் மனதில்மற வேனே.

2. மனதினிட மேநின்று குதிகொண் டெழுந்துவரு
   மானாகர் மகளாக வந்தசெந் திருவே
கனவிலும் நினைவிலும் மறவாம லேயுனது
   காதலுறு காவியத் தன்னையோ திடவே
அனுதினமு முனதுபத மலரிருகை கூப்பி
   ஆனந்த மாகவடி யேனுரைசெய் வசனம்
வனிதையே மாசாத்தார் மருகியே சொற்பிழைகள்
   வாராமல் முன்னின்று மனதுகந் தருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அருளான மாதவிக் கேயருள்கொ டுத்தநீ
அன்றுமொரு பொற்பதுமை சேரவைத் ததுவுநீ
மருளான கோவலர்க் கேமாலை யிட்டநீ
மலையரசன் மகளாக வந்தவளும் நீயே
இருளான காடுதனில் ஏழுபேர் கள்வர்
எழுந்துவர ஆபரண மெல்லா மளித்தநீ
பொருளான பொருளும்நீ பொன்னின்மா நங்கையே
பூலோகம் வாழ்கின்ற பூவைகண் ணகையே.

4. பூவையே புவியதனி லுள்ள மானிடர்கள்
பூஞ்சோலை போலவொரு தேரது வியற்றத்
தாவியே தேருருள வில்லாம லேமனந்
தளர்கின்ற வேளையது தானது வறிந்து
ஓவியம தாகவே தொண்ணூற்று மூன்றினில்
உயர்விருட் சம்மருத மரமாக நின்றாய்
ஏவியே சிகைபிடித் ததுபோல வந்த
இயல்வான கண்ணகையை மனதில்மற வேனே.

5. இயல்வான விடவரவின் நூபுரந் தன்னை
எடுத்துமே கோவலர்க் கீந்துபின் சென்று
மயில்போலும் மாதவிக் கேகடன் தீர்த்து
வாருமென் றுற்றமண வாளனை யனுப்பித்
துயிலான வெண்பட்டு மாலைகள் சரப்பளி
சொர்ணமுட னேமுத்து மூக்குத்தி மின்னக்
குயில்போல வேயெழுந் திடையசே ரியில்வந்த
கோதைகண் ணகையையொரு போதும்மற வேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மறவாம லேயுனது புகழ்பாடி வருகின்ற
மானிடவர் தங்கள்பிணி தீரவருள் செய்வாய்
குறையாத பொருள்வரவு நிறையாக வேவருங்
குலதிலதர் வணிகர்குல மேயவத ரித்து
முறையாக முத்தமிழ்ப் பாமாலைகளில் நெடில்
முன்பாக வேசொல்வோர்க் கின்பமுட னீந்து
குறையாத பாக்கியம் மென்மேலு மருள்வாய்
குதிகொண்டு வந்திடுங் கோதைகண் ணகையே.

7. கோதையே கோவலர் சிலம்பதை யெடுத்துக்
கொடிதான மதுரைதனி லேவிற்று வரவும்
நீதமுட னேவைத்த திருவிளக் கதுவும்
நீள்கரக மதனில்நீர் பூவதுவு மிட்டு
வாதையுட னேயருகில் வைத்தஅடை யாளம்
வாடிவிடு மென்றவரு மேபோன பின்பு
காதலுட னேகண்ணை மூடியொரு நினைவால்
காணாத சொற்பனங் கண்டகண் ணகையே.

8. கண்டவுடன் கூந்தலைநீ விரித்ததுவும் பொய்யோ
காடுசெடி முள்ளிடறி வந்ததுவும் பொய்யோ
துண்டான கோவலரைக் கண்டதுநீ பொய்யோ
தோகையே பொற்சரடு விட்டதுநீ பொய்யோ
அண்டுமே சொக்கர்செயல் பெற்றதுநீ பொய்யோ
ஆளனுட னேகதைகள் பேசினது பொய்யோ
மண்டைதனில் நூலுருவி விட்டநீ பொய்யோ
மாறனிட பொற்கத வுடைத்தகண் ணகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மாறனிட பொற்கத வுடைத்துவந் தாயே
வடசேரி தென்சேரி யாகவந் தாயே
தேறியே தாச்சிகை பிடித்திழுத் தாயே
செம்பொற் சிலம்பதைத் தானெடுத் தாயே
மாறியே படியதனி லடித்துடைத் தாயே
மாகாளி யாயுருக் கொண்டுநின் றாயே
வேறுமொரு நோய்பிணிய கற்றவந் தாயே
வேங்கைமர நிழலுற்ற மெல்லிகண் ணகையே

10. கண்ணகைத் தாயேயு னக்கோல மோலம்
காங்கேயன் தாயேயு னக்கோல மோலம்
பொன்னின்பந் தாடியு னக்கோல மோலம்
பொற்சரட்டுக் காரியு னக்கோல மோலம்
அன்னையைக் கொண்றா யுனக்கோல மோலம்
ஆறதனில் வந்தாயு னக்கோல மோலம்
பின்னற் சடைச்சி யுனக்கோல மோலம்
பிஞ்ஞகன் தேவியு னக்கொல மோலம்

11. ஒலமென வேவந்த கண்ணகைத் தாயே
ஒருநொடியில் மதுரையை யெரித்துவரு நாளில்
சீலமுட னேபொய்கை தன்னிலே கன்னிமார்
சீரான திருமஞ்சள் தேறது முறித்துக்
கோலமுட னேவட சேரிதென் சேரியாய்க்
கூக்குரலிட் டேயவர்கள் வெற்றியது கொள்ள
மாலையினில் வைத்தவெரி போல்மன மகிழ்ந்து
வையகந் தொழவந்த மாதுகண் ணகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மாதினிரு தனமதனில் வைத்துமொ ரிடைச்சி
வாரியே வெண்ணைதனை வைத்தழுத் திடவே
காதுதனில் நாராசம் விட்டதுபோ லோடிக்
கரைந்துருகி யேவரக் கண்டொரு பறைச்சி
பாதிமுந் தானையது கொண்டுமே வீசப்
பாங்காக விருவரையுங் கண்டுள மகிழ்ந்து
நீதியுட னேயுங்கள் சேரிவே காதென்று
நிச்சயம் தாய்ச்சொன்ன பத்தினிப் பெண்ணே.

13. பத்தினி யம்மா வுனக்கோல மோலம்
பார்பதி யம்மா வுனக்கோல மோலம்
உத்தமி யம்மா வுனக்கோல மோலம்
ஓங்கார சத்தி யுனக்கோல மோலம்
முத்தமிழ்ச் செல்வியு னக்கோல மோலம்
மூவர்க்கு மூர்த்தி யுனக்கோல மோலம்
அத்தனார் பாரியு னக்கோல மோலம்
அம்பிகை யம்மாவு னக்கோல மோலம்

14. அம்பிகை யாளேயு னக்கோல மோலம்
ஆயிரங் கண்ணியு னக்கோல மோலம்
பைம்பொற் சிலம்பியு னக்கோல மோலம்
பாண்டியனை வென்றாயு னக்கோல மோலம்
செம்பவள மாதேயு னக்கோல மோலம்
திருவொற்றி யாளேயு னக்கோல மோலம்
அம்புவியி னாளேயு னக்கோல மோலம்
ஆதிகண் ணகையேயு னக்கோல மோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஆதியே பட்டிநகர் தம்பிலுவில் காரேறு
அதிகமுள வீரமுனை கல்முனைநீ லாவணை
ஓதியே பாண்டிசெறி கல்லாறுமகி ளூரெருவில்
உற்றகமு வாஞ்சிகளூ தாவளை பழுகாமம்
நீதிசெறி தேத்தாவெ னுஞ்செட்டி பாளையம்
நேராங் கிராங்குளம் புதுக்குடியி ருப்புச்
சோதிபெறு மகிளடித் தீவுமண் முனையூர்
சுற்றுமுறு முதலைக்கு டாவிலுறை பவளே.

16. உற்றுமே தாண்டவன்வெளியதனி லேவந்து
உவமைபெறு கொத்துக்கு ளந்திமிலை தீவு
வெற்றிபுனை வந்தாறு முலையீச் சந்தீவு
மேலான அங்கணா மைக்கடவை வெளியிலும்
எத்திசையி லும்வருட மிடபமது முன்வந்து
இயல்பான திங்கள்தனி லேமனமு வந்து
அத்தனருள் பெற்றுமே பூலோகந் தன்னிலே
அன்பான பாலமிர்த முண்டகண் ணகையே.

17. என்றுமே கொம்பினிட பாலமிர்த மேகொள்ள
ஒருகோடி பரிகலமு னைச்சூழ்ந்து வரவே
யென்றுமே கோதாரி யெங்களிட மணுகாமல்
இடிவிழுந் தோடவரு ளேகபரஞ் சோதி
அன்றுமே கோவலர்க் கேமனைவி யாகி
அழியாத கன்னியா யரவினில மர்ந்தாய்
பண்டேழு வுலகையும் பெற்றவளே தாயே
பாடினேன் பிழைபொறுத் தாளுமம் பிகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அம்பிகை வாழி அரியயன் வாழி
ஆனையுரி போர்த்தவர னாருமே வாழி
தும்பிமுகனு ங்குகனு மேவாழ வாழி
சூட்சமுறு கலைமகளு மேவாழ வாழி
அம்புவியி லேயுனைப் போற்றினோர் வாழி
அன்பாக வேபடித் தோருமே வாழி
கம்பைதிரு வொற்றிநகர் பட்டிநக ரெங்குமுறை
கண்ணகைதி ருப்பதம் வாழ்கவா ழியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிநகர்க் கண்ணகை அம்மன் மழைக் காவியம்

1. சீர்சிறந் திடுகாட விகடதட மும்மதச்
செம்மலுட னாதிபர மேஸ்பரனு மாலும்
தார்சிறந் திடுபசிய மஞ்ஞைஉவா கனனும்
தங்குகெரு டத்துவச மாலும்நா ரணியும்
பார்ச் சிறந் திடுகமல நான்முகன் தேவியும்
பட்டிநகர் மேவிவளர் பாவையு மகிழ்ந்து
கார்சிறந் திடுகவிதை பாடவருள் தந்துமழை
காதலுட னேயுதவ நாளுநினை கிற்பாம்.

2. நிலையான நவக்கிரகம் நின்றநிலை யாலோ
நீதிபுரி மன்னர்செங் கோல்வழுவி னாலோ
தொலையாத மானிடர்செய் வஞ்சனையி னாலோ
தொல்லுலக மெங்குமழை யில்லையென வாட
கலையாத செந்நெல்வயல் விளைவதுவு மின்றிக்
கதிர்குடலை தலைசோர மானிடர்க ளேங்க
உலையாத உனதுஅருள் தந்துமழை பொழிய வருள்
ஓங்கிவளர் பட்டிநகர் வாழுமா தாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாதாவு மானகௌ மாரியொடு வாலை
புவனைதிரி புரையென்னு மாதிமுதற் சத்தி
தாதா வுனதுமன மானது மகிழ்ந்து
தாரணியோ ரீடேற மழையுதவ வேணும்
வாதாடு கொம்புமுலை மங்கையர்கள் நீராடு
வாவிதனில் மருமலர்கள் வழமைபோல் மணம் வீச
கோதாடு குயில்கூவு பட்டிநகர் மேவிவளர்
கோவலன் தேவியென வந்தகண் ணகையே.

4. கண்ணீரி னால்வந்த கனகபத் தினியே
கழனியுறு வேளாண்மை புன்செய்சே னைப்பயிர்கள்
உண்ணீர்மை குன்றிமிக வாடுதே யம்மா
ஒருநொடியில் மழைவெள்ள மோடிவரச் செய்வாய்
மண்ணீரி னல்நுரை திவலையெழ வாறோடை
வாவிகுள மெங்குமே நீர்பெருக வேணும்
பெண்ணீர்மை தங்கிவளர் மாசற்ற செல்வியே
பேசரிய பட்டிநகர் வாழுமா தாயே.

5. மாமேவு மக்கரைப் பற்றுநகர் மானிடர்கள்
வயல்களது புரனாக வாடுதே யம்மா
தேமேவு செஞ்சாலி விளைவதுவு மில்லையோ
தேசமழை பெய்துநகர் செழிப்பதுவு மெப்போ
காமேவு மருமலர்கள் கனிவகைகள் சொரிகின்ற
கழனிசெறி கமலமலர் வாவிசூழ் நகரில்
பாமேவு பாடலிற் பிழைபொறுத் தாளுவாய்
பட்டிநகர் மேவிவளர் பாவை கண்ணகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மாதேவல் லவனோடு கடகவிடை கும்பத்தில்
வருவெள்ளி சுபனாகி மருவுநாள் தன்னில்
போதாளுங் குருசந்திர யோகமத னாலும்
புகழ்மேவு கேசரி யோகமத னாலும்
நீதமுட னேமுகில்கள் சோனை மழையாக
நீங்காது பொழியவே நின்கருணை தருவாய்
ஆதரவு தந்துமழை பொழியவருள் செய்வாய்
அருள்பெருகு பட்டிநகர் வாழுமா தாவே

7. பத்திசெறி யுத்தமர்கள் நித்தமுனை மறவாது
பாதபூச னைபுரிய மேகமதெ ழுந்து
புத்திசெறி கடலின்நீ ரானது முகந்து
பூலோக மெங்குமிரு ளாகவே மூடி
இத்தினம் நீரில்லை நாளையொரு மழைவெள்ளம்
ஏழைகள் தனக்குமன மானது மகிழ்ந்து
சித்திபெற வேயுனது கிருபைதந் தாள்வாய்
திருமருவு பட்டிநகர் வாழுமா தாவே.

8. மங்கையே மானாகர் மகளாக வந்தாய்
மதுரைநகர் மாறனொடு தீயினுக் கீந்தாய்
செங்கைதனில் நற்சிலம்பேந்தியே நின்றாய்
செட்டிமக னோடுதென் கூடலில் நடந்தாய்
கொங்கைதனில் வெண்ணெய்தனை யப்பிடவு கந்தாய்
கோலிடையர் சேரி குளிர்ந்திடுக வென்றாய்
ஏறங்கையடா என்கணவ னென்றுபழி கேட்டாய்
ஏருலவு பட்டிநகர் வாழுமா தாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நாயகிநீ யல்லாது வேறுயார் துணைசெய்வர்
நாட்டில் மழையில்லாது நாங்கள்படு மின்னல்
தாயா யிருப்பதாற் பார்த்திருத்தல் நீதியோ
தரணியோர் பிழைபொறுத் தாளநினை யம்மா
வாயார மானிடர்கள் சொற்பிழை பொறுத்து
மனதிலருள் மேவினால் இருள்வேணு மோதான்
சேயாருங் கமலமலர் வாவிபுடை சூழவளர்
திருமருவு பட்டிநகர் வாழுமா தாவே

10. அரசியே யுனதுவிழியருள்சிறிது வந்தால்
ஆலவிட வேகமது தானடங் காதோ
கரைமேவு கடல்நீரு முவர்மாறி டாதோ
கால்வடவை நீர்பூமி வாய்வொடுங் காதோ
தரைமீ திறந்தவ ருயிர்பெற் றெழாரோ
தருணமதி லேசோனை மழையிறங் காதோ
பரவைநிகர் மழவராயன் குளமருகில் மேவிவளர்
பட்டிநகர் தன்னிலுறை செட்டிமா தாவே.

11. ஆதியர னாருதவு வேதநெறி வாழி
அருள்பெருகு திருநீறு சிவசமயம் வாழி
நீதிசெறி பண்டார வன்னியர்கள் வாழி
நிமலனா ரருள்வாழி நீதிமுறை வாழி
சோதியுருவான கண்ணகைத் தாயும் வாழியவள்
சிலம்பிங்கு கொண்டுவந்த கயவாகு வாழி
பாதிமதி சூடுமர னாருடலி லணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புசெறி நாகம்மை வாழவா ழியதே

# பட்டிநகர் கண்ணகை அம்மன் பொற்புறா வந்த காவியம்

1. சிந்துதங் கரவிந்த மலராச னக்கமலச்
   சீர்பட்டி நகரிலுறை தெய்வகண் ணகைமேல்
   இந்துபோல் எழில்வதன உலகநா யகியும்
   எந்தைகண் ணகையம்மன் இனிதினிமை யான
   கந்துகமெ னுந்தமிழில் வந்துலட் சணமான
   கவிதையென வளர்மதுர காவியம் பாடப்
   பந்துபார் மதமொழுகு தும்பிமா முகனழகு
   பாதபங் கயமலர்கள் பாதுகாப்பாமே.

2. காருலவு மருதநில மும்நெய்தல் நிலமுங்
   கலபநட மிடுமுல்லை குறிஞ்சிமலை நிலமுஞ்
   சீருலவு பாலைநில முஞ்செந்நெல் கமலமுந்
   திகழ்பட்டி நகரிலுறை தெய்வகண் ணகைமேல்
   ஏருலவு செந்தமிழிற் பனுவலிசை பாட
   எந்தனது நாவினி லிருந்தருளு மம்மா
   வாருலவு பூண்முலைப் பார்பதியோர் கலையான
   வாணிவெண் தாமரையில் வாழுமா தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வாழ்வுபெறு கலியுகமூ வாயிரமுந் நூறில்
வளமைபெற வன்னியர்க ளாண்டுவரு நாளின்
தாழ்வற விளங்குசிற் றரசர்கள் இருவருந்
தன்னிலங் காபுரித னைப்புரந் திடுநாள்
காழமுகில் தவளகர மாடமணி வசலுறு
கமலமலர் வாவியிற் கனகமத ருந்தி
ஏழுலக முந்துதிசெய் நாகமங் கலையம்மன்
எழில்கொள்பொற் புறவாயெ முந்துவந்தனரே

4. வந்துலா வியபுயப் பங்கயல் படிந்து
வானுலவு சேர்தகைமை மன்னவ னறிந்து
இந்துலா வியசடைக் கங்காத ரன்பங்கில்
ஈசுபரி யோபுதுமை யீதெனவு மெண்ணி
தந்துலா வியபுயத் தடவீரர் வாசலில்
தலைவர்மா ரவர்களைத் தானழைத் தேதான்
புந்தியால் வாறபொற் புறவதனை நம்முன்
பிடித்துவா வென்றுவிடைகொண்டுபோ யினரே

5. போயவர்கள் வீரியங் காடுசார் வாவியில்
பொற்பிறா வருமென்று போய்க்களறி னோரும்
காய்கதிரி னால்மேனி வாடவே படைவீரர்
கனகாலம் நிலைநின்று காணாமல் வந்தார்
நாயகம தானவன் னிமைதனக் குரைசெய்ய
நவரெத்ன வொளிதங்கு நற்பட்டெ டுத்து
வேயனைய தோளிகண் ணகைமன மகிழவே
வேண்டுதல் புரிந்தரசர் வைத்துநேர்ந் தனரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நேர்ந்துமவர் சிந்தையில் நினைத்தபடி பொற்பிறவு
நிச்சயம தாயெனது கைக்குள்வரு மாகில்
சாந்தமணி மாலைபொற் சாமரைதி ருப்பணி
தமக்கினிய தாய்நிதஞ் சாத்துவோ மென்ன
எந்தனிட மனமிசையத் துயில்கொள்ளுங் காலையில்
எழில்கொள்பத் தினியம்மன் எய்தியவர் முன் போய்
நாந்தக மிலங்கு நகரமதில் பொற்பிறவு
நற்புவியில் நன்மைபெற நல்விடையுரைத்தாள்.

7. உரைத்துமது தேசத்தி லுண்டான நற்குடியில்
ஓரேழு பேதையரை யுற்றினித ழைத்துக்
குரைந்தெழுதி நற்புனலில் ஆட்டியழ காகவே
கோலமணி மாலைவகை தூசிபுனை வித்துப்
பரைதிரு வெனும்பொற் புறவுவந் தவர்மடியில்
பட்சமுடன் தங்குமென பார்பதிப் மொழிந்தாள்
திரைகடலெ னச்சகல வாத்தியமு ழங்கவே
சென்றுமடி கோலுமென அவர்களை விடுத்தான்.

8. மொழிந்துசில நாள்சென்ற கன்றளவி லேயரசன்
முற்றுயிலெ னப்பரவி விற்கதிர் பரப்பச்
செழுந்தமது போல்விடிய வேபணிவி டைக்குரிய
தலைவமா ரைக்கடிது தானவன ழைத்துப்
பொழிந்துகரு ணைக்கடல ளித்தாள்ந மக்காகப்
பொற்பிறவி னின்பெருமை புகலவரி தாகும்
நீரேழு வங்கிஷத் தெழில்பெருகு சிறுபேதை
ஏழுபே ரைத்தெரிந் தேயவர்விடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. விடுத்தளவில் வாசலில் ஏகிய தலைவர்மார்
வென்றிபெறு நற்குடிவி ளங்கேழு பேரை
அடுத்தினிது மெய்யா யழைத்துக்கொண் டேகி
அணியாரும் மணிவாச லரசன்முன் நிற்ப
உடுத்தணியும் நற்பட்டும் எழிற்பூணு முதவியே
உபசார மாகமஞ் சனமாட விட்டு
விடுத்தவர்த மக்கினிய பரிமளசு கந்த
மடிகோலி யேபீதாம் பரத்துகில் அளித்தார்.

10. அளித்தவர்க் கேகருணை வைத்தரசு பெறுவார்
அழகான கன்னியர்கள் அன்னமயி லேநீர்
அளித்தெழு மலர்க்கமல வாவிதனி லேநின்று
சுற்றிமடி கோலிஅம் மனைத்தொழுது நில்லும்
ஒளித்தவர் வடக்கயிலை உருவான பிறவொன்று
வருமுந்தன் மடியிலே தோகையை யெடுத்தே
செழித்தகுல முண்டாகா வயதையெ டுத்துச்
செப்பிலிடு மென்றுதிருச் செப்பருளி னாரே

11. செப்பருள வேயதைச் சிரமீது வைத்தே
தேவரம் பையரெனச் சென்றேழு பேரும்
ஒப்பரிய லெட்சுமி வாவியங் கரைதனில்
ஒரெட்டு நாள்மடி கோலியொரு நிலையாய்
ஒப்பமுடன் நிற்கவே ஒருபேதை மடியில்
ஒயிலாக வந்தமர வுதிர்ந்தஇற கதனைத்
தப்பறவே தானெடுத் தேதலையில் வைத்துத்
தலைவரிட மேவந்து சார்ந்திருந் தனரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வந்தபொழு தேதங்க மாளிகை யெடுத்து
வடவரையை யொப்பான மதில்களு மியற்றிச்
கந்தரமி குந்தபுலி யாசன மமைத்துத்
துலங்கிடு முயர்பட்டு மேற்கட்டி கட்டி
அந்தரி நாகமங் கலையான கண்ணகை
அதிககற் புடையபத் தினியம்மை தன்னை
மந்திர மணிக்கனக மணியாச னந்தனில்
வாசமது வானகுடி வைத்தருளி னாரே

13. வந்தே யநேகநா ளிருந்தது பொறாமலே
வடிவொழுகு பேதையை மன்னவ னழைத்துச்
செட்பரிய தகைமைசெறி தெய்வமது கொண்டு
சென்றேகு மென்னவே கொண்டேகி யேதான்
துப்பற விலங்கைநக ரைச்சுற்றி வந்து
துய்யதம் பிலுவில்நகர் தங்கிய மாது
கப்புகன் நமக்கான துணையென்று தந்துதவு
கண்ணகையம் மாவெனக் காரியை பணிந்தாள்.

14. காரிகை தமக்கினிய கட்டுரைசெய் வாளம்மை
கண்ணர்குல மேருலவு காற்றமா புள்ளோன்
சீரணியும் மழவராயன் குடியுதித் துவளர்
செல்வனென வாழுமங் கலப்போடி தானும்
ஆரமுலை யேநமக் கானபூ சனைபுரிவன்
அங்கவனை யிங்கழைப் பேனென வுரைக்கத்
தாருலவு தையலுட னேநடந் தவர்கள்
தகைமை பெறுமிறக் காமநகர் சார்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சார்ந்தவரி றக்காம நன்னகரி லேயதில்
தண்டாடு கமலவெரு கங்குடா வெளிமுன்
ஆர்ந்தரங் காரேறு தீவதனி லன்பாய்
அம்மனை யெழுந்தருளி யங்கவரி ருக்கச்
செப்பரிய கன்னியர்கள் தெய்வரம் பயருஞ்
சேர்ந்தபரி கலதெய்வ நவகோடி சத்திகள்
விற்காரர் மழுவீரர் ஐயனார் பரிகலம்
வருமுலக நாயகியை வாழ்த்திநின் றனரே.

16. நின்றவர் தமக்கினிய பூசைபுரி யத்தேவி
நித்யகலி யாணிசிவ சத்திநினை வுற்றே
மன்றலணி வார்குழல் தன்னுடைய சிறுபேதை
மனதறிய வேபூசை புரிவதை யுரைத்து
எண்டிசைம திக்கவே பொங்கலிட் டம்மனும்
இனிதான திருமஞ்ச னத்தீர்த்த மாடி
மண்டலத்தி லுள்ளமா னிடர்துயர கற்றவே
மாநிலம் திக்கமடை வையெனவு ரைத்தாள்.

17. உரைத்தளவி லேமங்க லப்போடி தானறிய
உற்றபூ சைத்தொகை யுரைத்தெழுதி வைத்தே
தரைத்தலம திக்கநற் பூசனைபு ரிந்துலக
தாயென மகிழ்ந்துசுப நாளதுதெ ரிந்து
விரைந்தெழு மலர்க்குழற் பூமாது சேர்பட்டி
மேடெனவி ளங்குநகர் மேவெனவு முற்றே
குரைத்தெழு சிலம்பணி பதத்திமா பத்தினி
கூடியவ ருடனே யெழுந்தருளி வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. வந்துதாய் பட்டிமா நகர்தனி லிருக்கவே
வடிவமுடன் மணிமேடை மண்டப மியற்றிக்
கந்தமரு மணியாச னத்தினி லிருத்தியே
கண்ணகைத் தாயுனது காவல்செய் திருக்கச்
சந்தமோ தக்கவிஞர் பல்லிய முழங்கவே
தாரைகா களங்கொம்பு சங்கந்தொ னிப்பச்
சுந்தரமி ருந்தபூ மாதுநா மாதுஞ்
சுபமங்க லசோப னஞ்சொல்லி னாரே.

19. சொல்லரிய கற்புடைய தோகைநீ மீனவன்
துணைவிழி மறைத்தநீ தொல்லுலகை யாளிநீ
மல்லமரு மணிமார்பர் கோவலர் தமக்கினிய
மனைவிநீ யென்னுடைய மாதாவும் நீயே
நல்லநின் காவிய நடத்தவே யென்னுடைய
நாவதனி லருள்செய்து நற்றமி ழளித்தாய்
வில்லிநின் மதிமுகக் காரணச் செல்வியே
மேவுசுந் தரியான வீரவம் பிகையே

20. அம்புவியி லக்கரையி லேழுரும் வாழும்
அன்புடைய வுன்பதி யடைந்தவர் வருந்தி
நம்பியுனை யேதொழுது நினைப்பவர் நினைந்தலைய
ஞாயமல்ல நீயவரை நாடியரு ளம்மா
அம்பகமோ ராயிரம் உடையதிரு மாதே
அன்பாகி அறிவாகி அருளாகி யவளே
செம்பொன்மணி யாரமுலை துர்க்கையே பட்டிநகர்
சேர்கவுரி யாகிவளர் தெய்வகண் ணகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கண்ணருள் சிறந்தெமைக் காத்தாயே யுனது
கருணைவைத் தடியர்க்கா தரவளித் தாயே
எண்ணமத கற்றியே கொடுவினையை மாற்றி
இரட்சிக்க வேணுமே யுலகம் பேறப்
புண்ணியநி றைந்தசிவ சத்தியே முத்தியே
புவனேசு பரியே பொற்பூவ ராகியே
வண்ணமணி நாகபூ ஷணமணி பதத்தியே
மானாகர் மகளாக வாழுமா தாவே

22. மானாகர் மகளாக வடிவதையெ டுத்தாய்
மாசாத்தார் மகனாரை மணமதுமு டித்தாய்
வானாடர் பகைதீர மகிடனை யழித்தாய்
மணவாளர் பழிதீர மன்னனை யெரித்தாய்
தானாக வந்துபல வூரினி திருந்தாய்
தாள்பணிந் தவர்களின் நோய்பிணி தவிர்த்தாய்
மானாகஞ் சூடியவர் மாதென வணங்கினோம்
மகிமைபெறு படடிநகர் வாழுமா தாவே

23. தங்குமுடி மந்திரத் தவமுனிவர் கொண்டாடத்
தாரணியில் வாழ்முருகர் தாளடியும் வாழி
பொங்குசிவ சமயவே தாகமமும் வாழி
புவிமீது தனதானி யம்பொலிய வாழி
கங்கைசூ ளக்கரைத் தேசமேழும் வாழி
கவிவாணர் கலைவாணர் கட்டாடி மார்வாழி
செங்கநக ரெட்டிநிறை பட்டிமா நகரிலுறை
தெய்வகண் ணகையம்மன் வாழவா ழியதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவமயம் திருச்சிற்றம் பலம்
# கணபதி துணை
# பட்டி நகர் கண்ணகியம்மன்
# தோத்திரம்

**வினாயகர் - காப்பு**

திருவாரும் ஐங்கரனே தென்மதுரை மீனாட்சி
திருவுளத்தில் வாழ்ந்திருக்கும் செல்வனே திருவாரும்
கண்ணகியார் பட்டிநகர்ப் பைந்தமிழின் பாவிசைக்க
என்மனத்தே வாழ்வாய் இனிது

**முருகன்**

இனிது இனிது என இன்றமிழ் சொல் ஔவையர்க்கு
கனிந்து கனிந்து திருக்கால காட்டிப் - பணிவரையோன்
தன்செவியில் மந்திரஞ் சொல் தந்தாய் திருக்கோவிற்
கந்தாவுன் பொற்பதங்கள் காப்பு.

**கலை மகள் கலித்துறை**

காப்பும் கலையும் கவிதையுமாகிக் கசிந்துருகும்
பூப்பும் புலமையும் புத்தமிழ்தாகிய முத்தமிழும்
கூப்புங் கரங்கிளினூடே வந்தென்முன் இசை பரப்பும்
நாப்பும் பொன் ஏட்டினில் வாழும் கலையன்னை நற்பதமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்

1. அன்புமன மலர்க்கோயில் அமர்ந்திருந்து.
அகில மெல்லாம் அணைத்துக் காத்துப்
பண்புமணம் பொலியுமுயர் பட்டி நகர்
மீதுறைந்து பணிவோர்க் கெல்லாம்
இன்புடனே காட்சி நல்கி இகபரத்தும்
அடியர் துயர் எல்லாம் போக்கும்
என்புதிய தேவ மலர்க் கொழுந்தேயுன்
இணை மலர்த்தாள் போற்றி போற்றி

2. ஆதியிலே கயிலையிலே அரனுடனே வாதாடி
ஆல வா யின்
சோதியிலே துர்க்கைசிலை மீதமர்ந்து
துயர் துடைத்துத் துணைவனோடும்
நீதியிலே செஞ்சிலம்பின் கற்பிலுயர்
தெய்வமென நிமலனாரின்
பாதியிலே யுறைந்த திருப்பட்டி நகர்
கண்ணகியுன் பாதம் போற்றி

3. இல்லையென வறியாது ஈந்தருளும்
நடராசன் இடப்பாகத்தே
தில்லையிலே நடமாடும் சிவகாமி
திரிசூலி திருமா தங்கி
முல்லையிலே மதுவருந்தி முசுவினங்கள்
பண்பாடும் நெய்தல் பாலை
எல்லையிலே திகழ்கின்ற பட்டிநகர்க்
கிறைவி யுந்தன் இணைத்தாள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஈராறு திருமுறையின் பண் கலந்து
இயலிசை நாடகத்தின் மிக்க
பேராறு புலவர்குழாம் வாழ்த்திசைக்கும்
பெரும் பற்றப் புலியூர் மன்னும்
காராறு கற்பகமும் கனியாறு முகப்பரனும்
கனிந்து வாழும்
பாராறு பட்டிநகர்ப் பதியாறு கண்ணகி
உன் பாதம் போற்றி

5. உண்மை யெனும் கற்பு நெறி உலகம் போற்ற
உயிராறு கோவலரின் உணர்வை மீட்டுத்
திண்மையெனும் திருமதுரைத் தெய்வமாகித்
தேவர்களும் முனிவர்களும் தினமும் வாழ்த்தத்
தண்மைமிகும் தம்பிலுவில் தலத்தில் மேவித்
தழைத்துவளர் செந்நெல் மழை தந்துபாரில்
வண்மை நிறை பட்டிநகர் வாழும் எங்கள்
மாதரசி கண்ணகியுன் மலர்த்தாள் போற்றி.

6. ஊழியெல்லாங் கடந்து நின்று உலகைக் காக்கும்
உமையவளாய் அரன் உயிருக்குயிராய் மேவி
வாழியென மறைகளெல்லாம் படைத்துக்காத்து
வரமருளும் தெய்வமணிமலரே யுந்தன்
ஆழிநிறை பொற்பதுமத் தடைந்தோர் தம்மை
ஆதரித்துக் கருணைமழை அருளுந் தாயே
யாழினிசை பரவு பட்டி நகரில் மேவும்
நாயகியே கண்ணகியுன் பாதம் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எண்ணாகி எழுத்தாகி யெழுத்தில் தோன்றும்
இசையாகி நயமாகிப் பொருளுமாகிப்
பண்ணாகி முழவாகிப் பாணியாகிப்
பரதலயமாகி நடம் பயிலும் ஈசன்
கண்ணாகி ஒளியாகிக் கருத்தில் மேவிக்
களிபெருகும் அருளான கனியே எங்கும்
விண்ணாகி விளங்கு பட்டிநகரில் வாழும்
வித்தகியே! கண்ணகியுன் பாதம் போற்றி.

8. ஏர்மலியும் கழநிநிறை பழன மெங்கும்
எழில் மலியும் உழவர் குழாம் இணைந்து என்றும்
வார்மலியும் உழத்தியர் தம் மணநாள் தோறும்
மாதரசேயுன்பு கழைப் பாடி யாடும்
சீர்மலியும் சிந்திசையும் ஊசல் வள்ளைத்
திருவிசையும், பள்ளிசையும் கேட்டு நாளும்
பேர்மலியும் வரங்கள் நல்கும் பட்டி நாட்டுப்
பெருமாட்டி கண்ணகி யுன் பாதம் போற்றி

9. ஐந்தெழுத்து மந்திரத்தின் உயிரதாகி
ஆறெழுத்தும் எட்டெழுத்தும் ஆதியான
முந்தெழுத்தும் மூன்றெழுத்தும் மூலாதார
முத்திவழி காட்டும் உயிரெழுத்தில் மூட்டி
நைந்தெழுத்தில் நவ கோணத்தமர்ந்து கூட்டி
நானிலத்தைப் புரந்தருளும் நயனத்தாளே
பைந்தமிழ்ச் செஞ்சிலம் பிசையில் வாழும் தெய்வம்
பட்டிநகர்க் கண்ணகையுன் பாதம் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஒளிதிகழும் தினகரனின் உயிராய் ஞான
ஒலியினிலே உலகமெல்லாம் உணர்வாய்த் தென்றல்
வளியினிலே மலராகி மணமாய்த் தேறல்
வழிந்தொழுகும் கருணை நிறைவாரியே தென்
மொழிதிகழும் நாற்கவியின் மீது தோயும்
முத்தமிழே புத்தமுதத் தெய்வத் தாயே
அளிதிகழும் பட்டிநகர்க் கரசாய் வாழும்
அன்னை அருட் கண்ணகியுன் பாதம் போற்றி.

11. ஓங்காரத்துட் பொருளே உமையே கூடல்
உறைந்துலகை நனி வளர்க்கும் உணவே அன்பின்
நீங்காத தவநெறியில் வாழுந் தெய்வ
நித்திலமே பக்தியிலே மலரும் பூவே!
ஆங்கார ஆணவத்தின் இருளைப் போக்கும்
அருட் சோதிமணி விளக்கே! அன்னே - ஞானப்
பூங்காவே! பட்டிநகர் விளங்கும் செல்வப்
பூரணி கண்ணகியுன் பொற்பாதம் போற்றி

**வாழ்த்து**

மன்னுலகும் பொன்னுலகும் வாழ்க வாழ்க!
மாதவமும் வேதநெறி வாழ்க வாழ்க!
துன்னுசிவ சைவசித்தாந்த ஞானத்
தூயதிரு வைந் தெழுத்தும் வாழ்க வாழ்க!
மன்னு புகழ் பட்டி நகர் வாழ்க தெய்வ
மாதரசி கண்ணகி பொற்பாதம் வாழ்க!
பொன்னு மணியம்பலத்திலாடும் அன்பின்
பூம்பாத மலரிணைகள் வாழ்க மாதோ

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**படம் இல : 1**

திரு. மங்கலபோடி கப்புகனால் கொண்டு வரப்பட்ட புனித சின்னங்களில் ஒன்றான பொற்புறா சின்னங்கள்.



**படம் இல : 2**


பழங்காலத்தில் அம்மனுக்கு தானமாக வழங்கப்பட்ட கைச்சிலம்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**படம் இல : 3**

அம்மனுக்கு தானமாக வழங்கப்பட்ட காற்தண்டைச் சிலம்புகள், பழமையானவை. பூஜைக்கேற்ற புனிதப் பொருட்கள்.



**படம் இல : 4**

அம்மனின் சடங்கு காலங்களில் பாடப்படும், பழமையான வழக்குரை காவியம், ஏட்டுச் சுவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**படம் இல : 5**

முக்கோண காற்சிலம்புகள், அம்மனின் மடைக்குக் கீழ் வைக்கும் பாதச் சிலம்புகள், மிகவும் பழமையானவை.



**படம் இல : 6**

அம்மனின் குளிர்த்தியின் போது, அம்மானை ஆடலுக்குரிய அம்மானைக் காய்கள், பழமையானவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**படம் இல : 7**
அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள
நாகப்புற்று (நாகவழிபாடு)
இதன் தொடர்ச்சியே பட்டடிநகர் கண்ணகை அம்மன் ஆலயமாகும்.



**படம் இல : 8**
வரலாற்று சிறப்பினைக் கொண்ட
'கவடாப்பிட்டி' புளிமரத்தடி
சிவலிங்கப் பிள்ளையார்
(பழமை வாய்ந்த சிவலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**படம் இல : 9**
வீர மரத்தடி வழிப்பிள்ளையார்
(பழமையான சிவலிங்கம்)



**படம் இல : 10**
ஆலயச் சூழலில் கண்டெடுக்கப்பட்ட
பொலநறுவை ஆட்சிக்கால நாணயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**படம் இல : 11**
அம்மனின் அட்சரச் சிலம்புகள்
(மிகப் பழமையானவை)




**படம் இல : 12**
பரிவார மூர்த்திகள், பொற்புறாவந்த காவியத்தில்
சொல்லப்படும் தெய்வங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படம் இல : 13**

மகா மண்டபத் தூண்களில் அமைந்திருக்கும்
அழகிய அட்டலக்ஷ்மி சிற்பங்கள் (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**படம் இல : 14**
அம்மன் ஆலய
முகப்பிலுள்ள
வரவேற்பு சிற்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த ஆசிரியரின் பிறநூல்கள்

- தமிழரும் முருக வழிபாடும் (ஆய்வு)
- தொல்லியல் சிந்தனைகள் (ஆய்வு)
- பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் (ஆய்வு)
- பண்டைய ஈழத்தமிழர் (ஆய்வு)
- தம்பிலுவில் கண்ணகி வழிபாடு (ஆய்வு)
- ஈழத்தமிர் வரலாற்றுச் சுவடுகள் (ஆய்வு)
- பழந்தமிழர் நடுகற்பண்பாடு (ஆய்வு)
- திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு (ஆய்வு)
- பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும் (ஆய்வு)
- வண்ணச்சரம் (வானொலி, ரூபவாஹினி மெல்லிசைப்பாடல் தொகுப்பு)
- பனங்காடு பாசுபதேஸ்வரர் அருட்பாமாலை (இசைப்பாடல்கள்)
- கரங்கொடித்தீவு சின்னக்குளம் வீரமா காளி அம்மன் அருளமுதம் (இசைப்பாடல்கள்)
- தம்பிலுவில் கண்ணகியம்மன் பாமாலை (இசைப்பாடல்கள்)

ISBN : 978-624-96350-0-5

9 786249 635005

மல்ட்டி ஒப்செற் அச்சகம் (0672279228, 0777651002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org